கோகுலம்

GOKULAM

செப்டம்பர்'86 ரூ 2.



வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃப்ளேவின்
கார்போ	நிகோடி
ஹைட்ரேட்	னமைடு
கால்ஷியம்	கால்ஷியம்
பாஸ்பரஸ்	பேன்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	பைரிடாக்ஸின் (பி6)
(ஸி வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'டி'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

d84. GLC. 120 Tm



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

— பாரதியார்

1986 செப்டம்பர் இதழ்
மலர் 4 இதழ் 8
தனிப்பிரதி ரூ 2/-
ஆண்டுச் சந்தா ரூ 24/-

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் அறிவித்த கோடை விடுமுறைக்கான பரிசுப் போட்டி முடிவுகளை நீங்கள் மிகவும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். நீதிபதிகளின் பரிசீலனை அநேகமாக முடிந்துவிட்டது. அடுத்த இதழில் வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களுடன், பெயர்கள், முகவரிகளையும் வெளியிடுவோம்.


நகராட்சி, ஊராட்சித் தலைவர்களிடம் சென்று, 'குழந்தைகள் நூலகம்' அமைக்கும்படி கேட்டால், நிச்சயம் பயன் கிடைக்கும் என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறே சில நகராட்சி, ஊராட்சித் தலைவர்களை நம் வாசகர்களில் சிலர் சந்தித்துக் கேட்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு தெரியும் என்று நமக்கு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். முடிவு நல்ல முடிவாக இருக்குமென நம்புவோமாக!

தற்போது நம் தமிழகம் முழுவதும் சத்துணவுக்கூடங்கள் இருக்கின்றன. பெற வேண்டியவர்களிடம் அனுமதி பெற்று, அவற்றில் சிலவற்றை மாலை நேரங்களில் குழந்தை நூலகங்களாகப் பயன்படுத்தலாமே! அங்கு 2, 3 அலமாரிகளில் குழந்தைப் புத்தகங்களை வாங்கி வைத்து, நூலகராகப் பகுதி நேர ஆசிரியர் ஒருவரை நியமிக்கலாம். அவர் மாலையில் அங்கு வரும் குழந்தைகள் படிப்பதற்கு உதவுவார். கட்டடம் கட்டும் செலவு மிச்சமாகும்.


உடனடியாக ஒவ்வோர் ஊரிலும் குழந்தைகள் நூலகங்களைத் தொடங்க இந்த யோசனை உதவுமா என்று பார்த்து, உதவும் போல் தோன்றினால் தக்க நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி, ஊராட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். நாளடைவில் குழந்தைகளுக்கென்றே தனி நூலகம் அமைக்க அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்றும் நம்புகிறோம்.

—அழ. வள்ளியப்பா


இந்த இதழ் எழுத்தாளர்கள்


கே. ஜெயராமன்
(ஜிலாபா தேவி)



எஸ். வரதராஜன்


கமுதி அரி


பிருந்தாவனக் கவிஞர்கள்



கே. செல்வக்குமார்


எம். சிவகுமார்


ஏ. பி. ராஜசேகரன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


கே. நரசிம்மன்


ஜி. அருண்

வண்ண அட்டைப்படம்: திலீப் பானர்ஜி.

பாரதி பாடினார்

—அழகனார்



வீரம் பாடி நாட்டிலே
விழிப்பு உணர்வைத் தூண்டினார்
தீரம் மிக்க பாரத
தேசம் வெல்லப் பாடினார்.

சாதி பேதத் தாழ்வுகள்
தரையில் மாயப் பாடினார்
நீதி வென்று நாமெலாம்
நிமிர்ந்து நிற்கப் பாடினார்

அடிமை வாழ்வு மாறவே
அச்சம் இன்றிப் பாடினார்
துடிப்பு மிக்க பாடலால்
தேசத் தொண்டு ஆற்றினார்

பழமைப் பேயும் நாட்டிலே
பாய்ந்து ஓடப் பாடினார்
உழைக்கும் நல்ல மக்களின்
உயர்வுக் காகப் பாடினார்

பாரதி வழிநட

—மன்னர் மன்னன்



நெஞ்சை நிமிர்த்தி நட.
நேர்மை கடைப்பிடி
கொஞ்சமும் அஞ்சாதே நீ
குன்றென உயர்ந்திடு!

அஞ்சும் நிலை ஒழி
அறிவை வளர்த்திடு
மிஞ்சிடும் அன்பினால் நீ
மேதினியிற் சிறப்பாய்!

எட்டயபுரப் பாரதி
எடுத்துச் சொன்ன வழி
சற்றுமே மறந்திடாதே
சழக்குகள் நீக்கிடுவாய்!

கூனல் இல்லாத சேவல்
கூவி அழைப்பது கேள்!
நானிலம் போற்றும் உன்னை
நாளும் நீ வாழ்க தம்பி!



லியோ டால்ஸ்டாய்

இவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர். உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர். மிக உயர்ந்த சிந்தனையாளர்; வன்முறையை எதிர்த்தவர்; தூய வாழ்க்கை வாழ்ந்தவர்; மகாத்மா காந்தியால் மிகவும் போற்றப்பட்டவர்; ஏழைகளிடம் மிகுந்த அன்பு கொண்டவர்; அவர்கள் வாழ்க்கை உயரப் பாடுபட்டவர்.

இளம் வயதில் ரஷ்யப் படையில் சேர்ந்தார். போரிலே கண்ட காட்சிகள் இவர் மனத்தில் ஆழப் பதிந்தன. சாவு, துன்பம், துயரம் இவற்றைக் கண்டு மனம் வருந்தினார். படையிலிருந்து விலகி தமது அனுபவத்தை ஒரு புத்தகமாக எழுதினார். அதைத் தொடர்ந்து பல புத்தகங்கள், எழுதினார். அவற்றில் 'போரும் அமைதியும்' (War and Peace) என்பது மிகச் சிறந்த நூல் என்று போற்றப்படுகிறது.

ஏழைக் குடியானவர்களின் குழந்தைகளுக்காக இவர் பல பள்ளிகளை அமைத்தார். இவர் நடத்திய பத்திரிகையில் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்று பல கட்டுரைகள் எழுதினார்.

தம் சொத்து முழுவதையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென விரும்பினார். இதை இவரது மனைவியும் குழந்தைகளும் எதிர்த்தார்கள். இதனால் மனம் உடைந்து இவர் வீட்டை விட்டு வெளியேறினார். வழியில் கபசுரம் கண்டு, ஒரு ரயில்வே ஸ்டேஷனில் உயிர் துறந்தார்.

5-ம் 10-ம்

''நான் பெரியவன் ஆனா 5ம் 10மாக இருப்பேன்.''

''அப்பமன்னா என்னடா?''

''ஆங்கிலத்தில் 5 ஆம் மாதம் மே; தமிழில் 10 ஆம் மாதம் தை — அதாவது 'மேதை'யாக இருப்பேன்.

— மணிமேகலை (3203), தேவகோட்டை




மிக்சர் மாமா

''அந்த மாமாவை, ஏண்டா 'மிக்சர் மாமா'ன்னு சொல்றே. உங்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் உனக்கு மிக்சர் வாங்கிட்டு வருவாரா?''

''இல்லை. எங்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் என்கிட்டே இருக்கிற மிக்சரை எடுத்து எடுத்துத் தின்னுடுவார்.''

— மணிமேகலை (3203), தேவகோட்டை



மின்மினிக் கதைகள்

ஒரு மரத்தடியில் சோகமே உருவாக ஒருவர் உட்கார்ந்திருந்தார். அந்த வழியே சென்ற நஸ்ருதீன் அவரைப் பார்த்து அருகே சென்றார்.

''ஐயா, தாங்கள் ஏன் இப்படிச் சோகமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் பணக்காரன். இதோ பாருங்கள், இந்தப் பை நிறையப் பொற்காசுகள் இருக்கின்றன'' என்று தம்மிடமிருந்த பையைக் காட்டிவிட்டு, மேலும் தொடர்ந்து பேசினார்: ''எனக்கு வீடு, வயல் எல்லாம் இருக்கின்றன. ஆனால் சந்தோஷமே இல்லை. ஒரு நிமிஷம் கூடச் சந்தோஷமாக இருந்ததில்லை. எங்கேயாவது கொஞ்ச நேரம் சந்தோஷமாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்காதா என்று வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தேன்.'' என்றார்.

சோகமானவர் இவ்வளவு செய்திகளையும் சோகக் குரலிலேயே சொல்லி முடித்தார். கேட்டுக் கொண்டிருந்த நஸ்ருதீன் திடீரென்று அவர் கையில் வைத்துக் கொண்டிருந்த பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தார்.



''ஐயோ, என் பணப்பை'' என்று அலறியபடி சோகமானவர் நஸ்ருதீன் பின்னே ஓடினார்.

நஸ்ருதீன் தம்மைப் பிடிக்க வருபவரிடம் சிக்காமல் ஓடி, இரண்டு மூன்று வீதிகள் சுற்றித் திரிந்து படுவேகமாக முதலில் சோகமானவர் இருந்த மரத்திடம் வந்தார். பணப்பையை அந்த மரத்தடியில் போட்டுவிட்டு மற்றொரு மரத்தின் பின்னே மறைந்து நின்றார்.

பணப்பையைப் பறிகொடுத்தவர் சில நிமிடங்களில் அந்தப் பகுதிக்கு மூச்சிரைக்க ஓடி வந்தார். தம் பையைப் பறித்துச் சென்ற மனிதர் இருக்கிறாரா என்று பார்த்தார். நஸ்ருதீன் அவர் கண்ணில் அகப்படவில்லை. ஏற்கெனவே சோகமாக இருந்தவர் மேலும் சோகமாகத் தாம் முதலில் உட்கார்ந்திருந்த மரத்தடிக்குச் சென்று உட்கார்ந்தார்.

அங்கே, அவருடைய பணப்பை இருந்தது! கண்கள் பிரகாசிக்க,

முகம் மலர, ''என் பணப்பை! என் பணப்பை!'' என்று உவகையோடு கூறிக் கொண்டே அந்தப் பணப்பையை மார்போடணைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்.

'சந்தோஷமே இல்லை' என்று சங்கடப்பட்டவருக்குச் சந்தோஷம் கொடுத்துவிட்ட திருப்தியோடு நஸ்ருதீன் அங்கிருந்து சென்றார்.



விருந்துக்கு ஓட்டம்!

முல்லா நஸ்ருதீன் வீட்டுக்கு முன்னே உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அந்த வீதியிலிருந்த சிறுவர்கள் சிலர் அருகே பெருங்கூச்சலிட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சிறுவர்கள் போட்ட சத்தத்தால் அமைதியாகப் படிக்க முடியாமல் தவித்த முல்லா, ''சிறுவர்களே! சத்தம் போடாதீர்கள்'' என்றால் அவர்கள் கேட்க மாட்டார்கள்., அதனால் அவர், ''சிறுவர்களே ஓடி வாருங்கள், உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்கிறேன்'' என்று கூறினார்.

''சிறுவர்கள் விளையாடுவதை விட்டுவிட்டு முல்லாவிடம் ஓடிவந்தார்கள்.

இப்போது முல்லா ஒரு நல்ல விஷயத்தைச் சொல்லியாக வேண்டுமே!

''சிறுவர்களே, மூன்றாவது வீதியில் பெரிய மாடி வீட்டில் இருக்கிறாரே, ஒரு பிரபு, அவர் இன்றைக்கு விருந்து தருகிறார்.''

முல்லா சொன்னதும் எல்லோரும் 'ஓ' என்று இரைந்து கொண்டு மூன்றாவது வீதியை நோக்கி ஓடினார்கள்.

முல்லா சிறுவர்கள் ஓடிய காட்சியைப் பரர்த்தார். உடனே அவர் புத்தகத்தை மூடி உள்ளே வைத்துவிட்டுத் தமது சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு அவசர அவசரமாக வெளியே கிளம்ப முயன்றார்.

இவ்வளவையும் அருகேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த முல்லாவின் மனைவி, 'எங்கே புறப்பாடு?' என்று கேட்டாள்.

''மூன்றாவது வீதியிலிருக்கும் பிரபுவின் வீட்டுக்கு'' என்று கூறினார் முல்லா.

''எதற்காக?''

''மூன்றாவது வீதியிலிருக்கும் பிரபுவின் வீட்டில் விருந்து என்று சிறுவர்களிடம் பொய் சொல்லி அனுப்பினேன். அப்புறம் எனக்கு ஒரு சந்தேகம். இந்த முல்லாவின் சொல் பலிக்கும் என்பார்களே! ஒருவேளை உண்மையாகவே அங்கே விருந்து நடந்தால் அதை விட்டுவிடக் கூடாதல்லவா? அதனால் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே ஓடினார் முல்லா.

காக்கைக்கு சோப்பு!



முல்லாவின் மனைவி கொல்லைப்புறத்தில் முல்லாவின் உடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள். துணிக்குச் சோப்புத் தேய்த்துவிட்டுச் சோப்புக்கட்டியை அருகே வைத்தாள்.

எங்கிருந்தோ வந்த ஒரு காக்கை அந்தச் சோப்புக் கட்டியைத் தூக்கிக் கொண்டு பறந்துவிட்டது.

முல்லாவின் மனைவி 'ஐயோ' என்றலறினாள்.

வீட்டுக்குள் உட்கார்ந்திருந்த முல்லா கொல்லைப்புறத்துக்கு ஓடினார்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டார் முல்லா.

மனைவி நடந்ததைக் கூறினாள்.

''இதோ பார். என் உடைகளைக் காட்டிலும் காக்கை கறுப்பாக இருக்கிறது. சோப்பு அதற்குத்தான் நிச்சயம் தேவை. எனவே எடுத்துக் கொண்டு போய்விட்டது. போனால் போகட்டும்'' என்று காக்கைக்குப் பரிந்து பேசினார் முல்லா.

முல்லா, பெரிய பணக்காரர் ஒருவரிடம் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் மூன்று முறை கடைவீதிக்குப் போய் வந்தார் முல்லா. எஜமானர் ''ஏன் போனாய்?'' என்று விசாரித்தார்.

''முதல் முறை கோதுமை வாங்கப் போனேன், இரண்டாம் முறை

மூன்று பேர் எதற்கு?



முட்டை வாங்கப் போனேன். மூன்றும் முறை எண்ணெய் வாங்கப் போனேன்'' என்று விளக்கினார்.

கோபம் வந்தது எஜமானருக்கு. ''என்னென்ன தேவையிருக்கும் என்று யோசித்து எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக வாங்கிக் கொண்டு வர வேண்டும்'' என்று உத்திரவிட்டார்.

மறுநாள்.

எஜமானருக்கு உடல்நலமில்லை. முல்லாவை அழைத்து ''மருத்துவரை அழைத்து வா. எனக்கு உடல்நலமில்லை'' என்று கட்டளையிட்டார்.

முல்லா வெளியே போனார். ஒருமணி நேரத்துக்குப் பிறகு மூன்று பேருடன் திரும்பினார். அவருள் ஒருவரைக் காட்டி, ''இவர் மருத்துவர்'' என்றார் முல்லா.

''மற்ற இருவர் யார்?''

ஒருவர் வழக்கறிஞர். ஒருவேளை உங்கள் உடல்நிலை குணமாகாமல் மோசமானால் உயில் எழுதுவீர்களே, அதற்காக அழைத்து வந்தேன். மற்றவர் ஈமச்சடங்கு செய்பவர். நீங்கள் குணமடையாமல் இறந்துவிட்டால், அடக்கம் செய்ய வேண்டுமே, அதற்காக அழைத்து வந்தேன். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருமுறையும் போகாமல் ஒட்டுமொத்தமாகவே அழைத்து வந்தேன்'' என்றார் முல்லா.

முல்லாவின் சாமர்த்தியம் எப்படி?

— டாக்டர் பூவண்ணன் எழுதி வர்த்தமானன் பதிப்பகம் வெளியிட்ட 'முல்லா நஸ்ருதீன்' என்ற புத்தகத்திலிருந்து.





என் குழந்தைப் பருவம்

—டாக்டர். வா. செ. குழந்தைசாமி

புகழ்பெற்ற பொறியியல் நிபுணராகவும் விஞ்ஞானியாகவும் விளங்கும் இவர், தலைசிறந்த ஒரு தமிழ்க் கவிஞராகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவரது புனைபெயர் 'குலோத்துங்கன்'. 'ஆய்வறிவுக் கவிஞர்' என்று போற்றப்படும் இவர், நீர்வளத்துறையிலே பல ஆராய்ச்சிகளைச் செய்து அவை பற்றிப் பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். நீர்வளத் துறையிலே இவர் கண்டுபிடித்த ஒன்றுக்கு 'குழந்தைசாமி மாடல்' (Kulandaiswamy Model) என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்! இத்துறையைச் சேர்ந்த உலக அறிஞர்களால் இவர் பெரிதும் மதிக்கப்படுகிறார். இது தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவுக்கே பெருமை தரக் கூடியது.

தமிழகத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், யுனெஸ்கோ ஆலோசகராகவும் சிறப்புமிக்க பல பொறுப்புகளை வகித்த இவர், தற்போது அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தராக விளங்குகிறார்.

இலக்கியத்தையும் விஞ்ஞானத்தையும் இணைக்கும் இவர், தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் எழுத்துச் சீரமைப்புக்கும் தமது எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் சிறப்பாகத் தொண்டாற்றி வருகிறார். 'வளர்க தமிழ்', 'வாயில் திறக்கட்டும்' என்ற இவரது கவிதை நூல்கள் பலரது பாராட்டையும் பெற்றவை.

நான் பிறந்து வளர்ந்தது வாங்கலாம்பாளையம் என்ற சிற்றூர். தந்தையின் பெயர் செல்லப்ப கவுண்டர் தாயார் மாரியம்மாள். பெற்றோர், சுற்றம் அனைவரும் உழுதுண்டு வாழ் மரபினர். விருந்தோம்பும் வேளாளர்.

எங்கள் ஊரில் ஒரு திண்ணைப் பள்ளி இருந்தது. எல்லா மாணவர்க்கும் சேர்ந்து ஒரே ஆசிரியர்தான். மணலைப் பரப்பி, அதில் எழுதிப் பழகினேன். நான் படித்த காலத்தில் முதலில் திரு M.V. ரங்கசாமி ஐயங்கார்






என்பவர் ஆசிரியராக இருந்தார். அவருக்குப் பின் திரு S. நடராஜப் பிள்ளை என்பவர் ஆசிரியரானார். ஐயங்கார், ஆசிரியர் வேலை மட்டுமன்றி ஆயுர்வேதவைத்தியமும்செய்து வந்தார். அவருக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிப்பதற்கான பல வேலைகளை மாணவர்களாகிய நாங்கள் செய்வோம். பள்ளிக்கூடத்தில் படித்த நேரத்தைவிட, அவருக்குப் பலவகைகளிலும் பணிவிடை செய்யும் நேரம் சற்றுக் கூடுதலாகவே இருக்கும். இது என் தாயாருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. என் தந்தையார், 'ஆசிரியருக்கு வேலை செய்து பையன் குறைந்து போய்விட மாட்டான்: செய்யட்டும்' என்பார்.

ஐயங்காருக்குப்பின் திரு நடராஜ பிள்ளை ஆசிரியராக வந்தபொழுதும் என் 'குருகுல வாசம்' மாறவில்லை. அவர் ஏதோ ஒரு பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். என்ன பரீட்சை என்று அப்பொழுதும் எனக்குத் தெரியாது; இப்பொழுதும் யூகிக்க முடியவில்லை. எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊரில் குடியிருந்தார். ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். இரவு நான் சாப்பிட்டுவிட்டு 'ராந்தல் விளக்கு' என்று கிராமத்தார் கூறும் Hurricane விளக்கை எடுத்துக் கொண்டு அவர் வீட்டுக்குப் போவேன். செய்யுள், உரைநடை ஆகிய அவரது பரீட்சைப் பாடங்களை என்னைப் படிக்கச் சொல்லிவிட்டு, அவர் படுத்துக் கொண்டே கேட்பார். தூக்கம் வரும் பொழுது தூங்கிவிடுவார். நானும் அங்கேயே தூங்கிவிட்டுக் காலையில் வீடு திரும்புவேன். நான் அவருக்காகப் படித்தவை பல எனக்கு மனப்பாடமாய்விட்டன. அவர் சில சமயங்களில் சில பாடல்களை இசையோடு படிப்பார். எனக்கும் விளக்குவார். எனக்கு அப்பொழுது வயது எட்டு அல்லது ஒன்பது இருக்கும். புரிந்தோ, புரியாமலோ தங்கு தடையின்றிப் படிப்பேன். இந்தப் பாடம் ஓதும் பணியை நான் ஆசிரியர் நடராஜ பிள்ளைக்குத் தான் செய்தேன் என்பதில்லை. ஐயங்கார் ஒருமுறை உடல்நலமின்றிப் படுத்திருந்தார். அப்பொழுது என்னிடம் விக்கிரமாதித்தன் கதையைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிவிட்டு அவரும் அவரது மனைவியாரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வாரம் தினமும் சென்று படித்தேன். திரு நடராஜ பிள்ளை என்னை அவரது குடும்பத்தில் ஒருவனாக நடத்தினார். நான் படித்த பள்ளியில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்ற பாகுபாடு பெரிதாக எதுவும் இருந்ததாக நினைவில்லை. நான் அங்கு எந்தப் பரீட்சையும் எழுதியதில்லை. ஆசிரியர் நடராஜ பிள்ளை தனக்குத் தெரிந்த தமிழ், கணிதம் அனைத்தும் எனக்குக் கற்றுக் கொடுத்தார். நான் படித்த வகுப்பு எதுவானாலும் அதற்குச் சற்று மீறிய அளவிலேயே தமிழ்ப் பாடல்களிலும், உரை நடையிலும் கணக்கிலும் எனக்குத் திறன் வளர உதவினார் என்று கூறலாம். அவர் ஆசிரியராக இருந்த

காலத்திலேயே எங்கள் ஊர்ப் பள்ளி ஏனோ சரியாக நடைபெறவில்லை. சில நாட்கள் பள்ளி இருக்கும். பல் நாட்கள் இராது. ஒரு வருடம் போல நான் படிப்பை விட்டுவிட்டு, எங்களது காட்டிலும் தோட்டத்திலும் வேலை செய்து கொண்டிருந்தேன். ஆனால் மேலே படிக்க வேண்டும் என்று விடாது ஆசிரியரிடம் நச்சரித்து வந்தேன். மேலே படிக்கலாம் என்பது பற்றிய சில தகவல்களையே அவர் மூலம்தான் தெரிந்து கொண்டேன். திரு நடராஜ பிள்ளை என்னை மேலும் படிக்க வைக்க வேண்டும் என்று தொடர்ந்து என் தந்தையிடம் வற்புறுத்தி வந்தார்.

என் தந்தை சில வழக்குகளில் ஈடுபட்டிருந்தார். எனவே நீதி மன்றத்திற்குப் போவதற்காக அடிக்கடி கரூர் போவார். அங்கு வக்கீல்கள் வீட்டில் பையன்கள், பெண்கள் படிப்பதைப் பார்க்கும்பொழுது தனது மகனையும் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். ஆனால் கிராமத்துக்குத் திரும்பியபின் அது மாறிவிடும். கரூருக்குச் சென்றபோதெல்லாம் திரு இலட்சுமண பிள்ளை என்பவர் நடத்தி வந்த உணவு விடுதியில் சாப்பிடுவார். தங்குவார். திரு இலட்சுமண பிள்ளை எனது ஆசிரியர் நடராஜ பிள்ளையின் உறவினர். திரு நடராஜ பிள்ளை என்னைப் பற்றிப் பலமுறை சொல்லிக் கேள்விப்பட்டிருந்த திரு இலட்சுமண பிள்ளை என் தந்தையிடம், ''உங்கள் மகனை இங்கு கொண்டு வந்து விட்டு விடுங்கள். அவன் படிப்புச் சம்பந்தமானவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன். செலவு ஒன்றும் உங்கள் சக்திக்கு மேலானதல்ல'' என்று கூறி என் தந்தையைச் சம்மதிக்க வைத்தார். எங்கள் ஊரிலிருந்து கரூர் சுமார் 20 கல் தூரம். கரூரில் சனிக்கிழமை தோறும் சந்தை நடக்கும். அந்தச் சந்தைக்கு எங்கள் ஊர்ப் பக்கத்திலிருந்து வியாபாரத்திற்குச் சோளம், புகையிலை போன்றவற்றை வண்டியில் கொண்டு செல்வார்கள். அவர்களில் எங்கள் உறவினர் ஒருவர் வண்டியில் என்னை வைத்து 'இவனைக் கரூரில் இலட்சுமண பிள்ளை ஓட்டலில் விட்டு விடுங்கள்' என்று என் தந்தை அனுப்பி விட்டார். அது ஒரு முழு இரவுப் பயணம். காலையில் என்னை திரு இலட்சுமண பிள்ளையிடம் ஒப்படைத்தார்கள். என் தந்தை இரண்டு, மூன்று வாரங்கட்கு அப்புறம் கரூர் வந்தார் என்று நினைக்கிறேன். என்னைக் கரூரில்-பள்ளியில் சேர்க்கும் முயற்சியில் திரு இலட்சுமண பிள்ளை ஈடுபட்டார்.

என்னுடைய வயதுக்கு நான் ஆறுவது வகுப்பில் சேர வேண்டும். அதற்கு ஆங்கிலம் தெரிய வேண்டும். பள்ளி திறப்பதற்கு ஒரு மாதம் இருந்தது. அந்த ஒரு மாதத்தில் திரு ரகோத்தம ராவ் என்பவரிடம் ஆங்கிலம் படிக்க திரு இலட்சுமண பிள்ளை ஏற்பாடு செய்தார். நான் கிராமத்தில் படித்த பள்ளியிலிருந்து எனக்கு எந்தச் சான்றிதழும் கிடையாது. கரூர் நக






ராட்சி உயர்நிலைப் பள்ளியில் அப்பொழுதெல்லாம் முறையாகப் பள்ளியில் படிக்காத மாணவர்களைப் பரீட்சை வைத்துச் சேர்த்தார்கள். நான் பரீட்சை எழுதி ஆறாவது வகுப்பில் (அதாவது I Form) சேர்ந்தேன். நான் எழுதிய முதல் பரீட்சையே அதுதான். வகுப்பு ஆசிரியர் திரு நாராயண ராவ் நன்றாகப் பாடம் நடத்துவார். நகைச்சுவையோடு பேசுவார். அந்த வருடம் காலாண்டுத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் எனக்கு முதல் மார்க் வந்தது. முதல் மாணவனாக வருவது பற்றியோ, முதல் மார்க் வாங்குவது பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. மேலே படிக்க வாய்ப்புக் கிடைத்த ஆர்வத்தில் ஊக்கத்தோடு படித்ததன் விளைவுதான் அது. பாடப் புத்தகங்களில் பெரும் பகுதியை மனப்பாடம் செய்துவிடுவேன். காலாண்டுத் தேர்விற்கு அனுப்பிய Progress Report இல் 'முதலாவது மாணவனாகத் தேறியிருக்கிறான்' என்று ஆசிரியர் எழுதியிருந்தார். திரு இலட்சுமண பிள்ளையிடம் கையெழுத்து வாங்கி அதை ஆசிரியரிடம் திருப்பித் தர வேண்டும். அவர் அந்த ரிப்போர்ட் கார்டில் 'இவன் வீட்டில் நன்றாகத் தான் படிக்கிறான். இருந்தாலும் அடித்துப் பாடம் புகட்டுங்கள்' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். நல்லவேளையாக, எந்த ஆசிரியரிடமும் நான் அடி வாங்கியதில்லை. எனக்கு நினைவு தெரிய ஆசிரியர் யாரும் என்னைக் கடிந்து கொண்டதுமில்லை. என் தந்தை மட்டும் அன்பு மிக்கவராயினும் சற்றுக் கண்டிப்பானவர். நான் சிறுவயதில் பெரும்பாலும் அவர் முன்னால் போகமாட்டேன். உள்ளூர அன்புடையவர். அவ்வளவாக அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாதவர். நான் கரூரில் ஆறாவது வகுப்பிலிருந்து (I Form) பதினொன்றாவது வகுப்புவரை (VI Form) நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். காலாண்டுத் தேர்வில் ஆறாவது வகுப்பில் முதல் மாணவனாக வந்ததிலிருந்து, பள்ளிப் படிப்பு முடிய, எல்லா வகுப்புகளிலும் முதல் மாணவனாகவே இருந்தேன்.

நான் ஆறாவது வகுப்பில் சேர்ந்த பொழுது அந்த வகுப்பிற்குப் பழைய புத்தகங்களை விலைக்கு வாங்கினேன். அவற்றை அதே பள்ளியில் உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த திரு சந்தாமியான் என்பவர் Bind செய்து கொடுத்தார். இவர் பின்னர் சென்னையில் ஒரு சிறந்த புகைப்படக் காரராகத் திகழ்ந்தார். அவரிடமிருந்து நான் புத்தகக் கட்டட வேலை (Book Binding) பூப்பந்து மட்டைக்கு (Badminton Bat) நரம்பு கட்டுவது ஆகிய இரு தொழில்களையும் கற்றுக் கொண்டேன். பின்னர் என் வகுப்பிலும், மற்ற வகுப்பிலும் உள்ள மாணவர்கட்கு இவ்விரண்டு வேலைகளையும் செய்து கொடுத்து அதில் வரும் வருமானத்தில் பாடப் புத்தகங்கள் அன்றி மற்ற பொதுப் புத்தகங்களும் வாங்கிக் கொள்வேன். எப்படியோ எனக்கு ஓவியம் வரைவதில் ஆர்வமும், திறமையும் அமைந்திருந்தது. எனவே ஓவியம் வரையும் தாள்கள், பல வண்ணப் பென்சில்கள், வண்ணங்கள் ஆகியவற்றை வாங்கிக் கொள்வேன். உணவு விடுதிக்கு அப்பொழுது தங்குவதற்கும், உணவிற்கும் சேர்ந்து மாதம் ஐந்து ரூபாய். இரண்டாண்டுகட்குப் பின்னர் அது ஏழு ரூபாய் ஆகியது என்று நினைவு. ஆறாவது, ஏழாவது, எட்டாவது வகுப்புக்குப் பள்ளிக்கு மாதக் கட்டணம் 3¼ ரூபாய். உணவு விடுதிக்கும், பள்ளிக்கும் மட்டும் என் தந்தையிடம் பணம் பெற்றுக் கொள்வேன். மற்ற செலவுகட்குப் பெரும்பாலும் பணம் கேட்க மாட்டேன். ஒன்பதாவது வகுப்பிலிருந்து பள்ளிக் கட்டணம் மாதம் ரூ 6. ஒன்பதாவது வகுப்புக்கு வந்த பொழுது எனக்குப் பள்ளியில் ஸ்காலர்ஷிப் (Scholarship) கொடுத்தார்கள். எனவே மாதம் ரூ 6 என் தந்தைக்கு மீதமாயிற்று. இதைக் காரணமாக வைத்து என் தம்பியையும் படிக்க வைக்க வேண்டும் என்று என் தந்தையிடம் வற்புறுத்தினேன். முதலில் ஒரு பையனாவது விவசாயம் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தவர் மனம் மாறி அவனையும் கரூரில் கொண்டு வந்து சேர்த்தார். அந்தக் காலகட்டத்தில் என் தந்தையின் பொருளாதார நிலையும் சற்று நன்றாகவே இருந்தது.

கடைசி இரண்டு ஆண்டுகள் என்னை இலட்சுமண பிள்ளை உணவு விடுதியிலிருந்து, பள்ளியில் இருந்த மாணவர் விடுதிக்கு (Hostel) மாற்றினார். மாணவர் விடுதியில் வசதிகள் அதிகம்.

எனக்கு ஓவியம் வரைவதில் ஈடுபாடு உண்டு என்று கூறினேன் நான் ஏழாவது எட்டாவது வகுப்பில் படித்த பொழுது வகுப்பறையின் சுவர் முழுவதும்நான் போட்ட படத்தைவகுப்பாசிரியர் வாங்கி மாட்டி வைத்திருப்பார். இத்துறையில் என்னை மிகவும் ஊக்கியவர் எனது எட்டாவது வகுப்பு ஆசிரியர் திரு இலட்சுமண ராவ். இவருடைய பரிந்துரையால்தான் பள்ளி நிர்வாகம் எனக்கு ஒன்பதாவது வகுப்பில் ஸ்காலர்ஷிப் கொடுத்தது. நான் ஆசிரியர்களின் புகைப்படங்களைக் கேட்டு வாங்கி அவர்களின் படங்களை வரைந்து கொடுப்பேன். ஆசிரியர்களிடம் நல்ல பெயர் வாங்குவதற்கு அதுவும் உதவியாக இருந்தது. ஆனால் பள்ளி ஓவிய ஆசிரியரின் அபிமானத்தை மட்டும் பெற்றிருக்கவில்லை. என்ன காரணத்தினாலோ நான் குருவிற்கு மிஞ்சிய சீடனாக நடந்து கொள்வதாக அவர் நினைத்தார். அது என் துர்அதிர்ஷ்டம். நான் பொதுவாகப் பெரியவர்களிடம், குறிப்பாக ஆசிரியர்களிடம் நல்லவன் என்று பெயர் வாங்க வேண்டும் என்ற நடைமுறையைப் பின்பற்றியே நடந்து வந்தேன். என் தந்தையின் கண்டிப்பான சுபாவம் நான் பெரியவர்களிடம் பணிவுள்ளவனாகவும், சற்றுப் பயந்தவனாகவுமே நடப்பதற்குக் காரணமாக இருந்தது.

அப்போதைய கல்வி முறையில் ஒன்பதாவது வகுப்பிற்குப் பின் விருப்பப் பாடம் எடுக்க வேண்டும். கணிதம், இயற்பியல், Book Keeping போன்ற பல பாடங்கள் இருந்தன. ஓவியம்கூட விருப்பப் பாடமாக இருந்தது. இதில் எந்தப் பாடத்தை எடுப்பது என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அப்பொழுது கணித ஆசிரியராக திரு கோவிந்தராஜ பிள்ளை என்பவர் இருந்தார். அவர் நன்றாகப் படிக்கும் மாணவர்களைக் கூப்பிட்டுக் கணிதத்தை விருபபப் பாடமாக எடுத்துக் கொள்ளச் சொல்லுவார் தனது பாடத்தில் நல்ல 'ரிசல்ட்' வரவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பார். அவர் என்னைக் கூப்பிட்டுக் கணிதத்தை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளச் சொன்னார். நானும் அப்படியே செய்தேன்.பின்னர்நான்பொறியியல் படிப்பதற்கு அடிகோலியவர் அவர் தான்.பள்ளியில்விருப்பப்பாடமாகக் கணிதம் எடுத்திருந்தால்தான் பின்னர் பொறியியல் படிக்கலாம் என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. பையன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறான்..நன்றாகப் படிக்கிறான் என்பதற்கு மேல் என் தந்தைக்கும் நான் என்ன பாடம் படிக்கிறேன்; அதன் முக்கியத்துவம் என்ன என்பது போன்ற ஈடுபாடோ அதற்கான பின்னணியோ இல்லை. என் தந்தை செல்வர் அல்ல. ஆனால் கிராமத்தில் செல்வாக்கோடு வாழ்ந்தவர். அசாதாரணமான வாதத் திறன் படைத்தவர். சற்று அதிகமான தன்மான உணர்வும், தனக்குச் சரி என்று பட்ட வழியில் செயல்படும் சுபாவமும் உடைய விவசாயி., நான் படித்து ஏதாவது வேலைக்குப் போவதானால் வக்கீல் வேலைக்குப் போக வேண்டும் என்று விரும்பினார். வழக்குகளோடும், வக்கீல்களோடும் அவருக்கு நீங்காத தொடர்பிருந்தது ஒரு காரணமாக இருக்கலாம். நான் அவரைப்புரிந்துகொண்டவரை மாதச் சம்பளம் வாங்கும் உத்தியோகம் எது





வானாலும் அதை அவர் பெரிதாக மதித்ததில்லை.

எட்டாவது வகுப்பு முடிக்கும் வரை, பள்ளிப் பாடம், ஓவியம், மாலையில் விளையாட்டு இவை தவிர உடற் பயிற்சி போன்றவைகளில் மட்டும் ஈடுபாடு இருந்தது. வகுப்பில் சொல்லிக் கொடுத்த அளவிற்குமேல் தமிழில் ஆர்வம் அதிகமாக நான் காட்டவில்லை. அப்பொழுது இந்தி விருப்பப் பாடமாக இருந்தது. இந்தி ஆசிரியராக இருந்த திரு கோபால் என்னிடம் மிகுந்த அன்பு காட்டினார். நான் அவரிடம் படித்து, பிராதமிக், மத்யமா, ராஷ்ட்ரபாஷா ஆகிய மூன்று தேர்வுகளையும், தென்னிந்திய இந்தி பிரசார சபையின் கீழ் எழுதிச் சான்றிதழ் பெற்றேன். ஒன்பதாவது வகுப்பிலும் அதற்குப் பின்னரும் தமிழில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. ஏழாவது வகுப்பு ஒன்றிற்கு ஆசிரியராக இருந்த திரு வேலாயுதக் கவுண்டர், பள்ளியில் அனைவராலும் மதிக்கப்பட்டவர். தமிழறிஞர். அவரிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதும் இந்த மாற்றத்திற்கு ஒரு முக்கிய காரணம். நகராட்சிப் பள்ளிக்குப் பக்கத்தில் பசுபதி ஈசுவரர் கோவில் இருக்கிறது. அங்கு அடிக்கடி சொற்பொழிவுகள் நடக்கும். அவற்றில் சுவாமி சித்பவானந்தா, திருமுருக கிருபானந்த வாரியார் ஆகியோர் சொற்பொழிவு அவ்வப்பொழுது நடக்கும். தவறாது போய்க் கேட்பேன். திரு ஆதித்தனார் நடத்திய 'தமிழன்' என்ற பத்திரிகையிலும், பின்னர் அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' பத்திரிகையிலும் எனக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. தமிழன் பத்திரிகைக்குக் கதை, கட்டுரை, கவிதை எழுதி அனுப்புவேன். வெளிவரும் என்று ஆவலோடு எதிர்பார்ப்பேன். எதுவும் ஏற்றுக் கொள்ளப் பட்டதில்லை. கவிதைகள் எழுதி நானாகத் தொகுத்து வைத்துக் கொள்வேன். எனக்குப் பதினைந்து வயது இருக்கும்: மாணவர் விடுதியில் இருந்த போது விடுதிக்கு பார்வையிழந்த ஒருவர் வந்து புல்லாங்குழல் வாசித்தார். அதில் ஈடுபட்டு அப்பொழுது எழுதிய கவிதையில் ஒரு செய்யுள் பின்வருமாறு:

குழலிலோ, குழலிலுள்ள குறுகிய
வட்டமான
துளையிலோ, தமிழணங்கு தொல்
லுலக கிதற்குத்தந்த
கலைஞனின் விரலிலோ, வாய்க்
காற்றிலோ, இனிமைதோன்றும்
நிலையினை அறிந்தேனில்லை: நெடு
மரம்போல நின்றேன்.

கரூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில், பத்தாவது வகுப்பிலும், பதினோராவது வகுப்பிலும் வாரத்திற்கு ஒரு மணி நேரம் Moral Instruction என்ற பாடத்திற்கு ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் அதை ஒரு Debating வகுப்பாகவே நடத்தி வந்தார்கள். அதில் நான் தீவிரமாகப் பங்கு கொண்டு ஒவ்வொரு வாரமும் பேசுவேன். பத்தாவது, பதினோராவது வகுப்பில் படித்த காலத்தில் பள்ளியின் சார்பில் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்வேன். அந்தக் காலப் பகுதியில் இரண்டாம் உலகப் போரை ஆதரித்துத் தீவிரமான பிரசாரம் நடந்தது. திருச்சியில் National War Front Students' Camp ஒன்றை மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்பாடு செய்திருந்தார். எங்கள் பள்ளியில் என்னை அதற்கு அனுப்பியிருந்தார்கள். அதன் சார்பில் கல்லூரி மாணவர் பேச்சுப் போட்டி ஒன்று நடந்தது. அதில் நானும் பங்கு கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டபொழுது, பள்ளி மாணவனாயினும்

போனால் போகிறது என்று அனுமதித்தார்கள். அதில் எனக்கு முதல் பரிசும், கோப்பையும் கிடைத்தன. தமிழில் எழுதவும், பேசவும் இந்தக்காலகட்டத்தில் எனக்கு வாய்ப்பும், பயிற்சியும் கிடைத்தன. ஆர்வமும் வளர்ந்தது. பிற்காலத்தில் நான் அவ்வளவாக மொழித் தொடர்பில்லாத துறையான பொறியியலுக்குச் சென்றபொழுதும் ஓரளவு தமிழில் எழுதவும், பேசவும் தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருந்ததற்கு எனது உயர்நிலைப் பள்ளிப் பின்னணி காரணமாகும்.

நான் மாணவர் விடுதியில் இருந்த காலத்தில் 'வார்டன்' ஆக இருந்தவர் திரு K.S. ரங்கசாமி ஐயங்கார். அவர் எனது பத்தாவது வகுப்பு ஆசிரியருமாவார். என்னுடைய கல்வியைப் பொறுத்தவரை என் தந்தைக்கு அவர் ஆலோசகராக இருந்தார் என்று சொல்லலாம். அவர் எது சொன்னாலும் அது என் தந்தைக்கு வேதவாக்கு. இன்றும் கரூர் சென்றால் நான் தவறாது காண்பது அவரைத்தான். தளர்ந்த வயதிலும் அன்போடு தழுவிக் கொள்வார்.

எனது பள்ளிப் பருவத்தில், திண்ணைப் பள்ளிக்கூட நிலையிலிருந்து பல முடிவுகள் தற்செயலாக உருவானவை என்றே கூறலாம். வாழ்க்கைப் பந்தயத்தில் மிக வேகமாக ஓட வேண்டும் என்ற ஆசை மட்டும் எனக்கு மிகுதியாக இருந்தது. ஆனால் அதற்கேற்ற அளவில், திசை பற்றிய தெளிவோ, அதைத் தெளிவுபடுத்த உதவும் குடும்பப் பின்னணியோ இருக்கவில்லை. பள்ளிக் கல்வி முடியும்வரை ஒவ்வொரு கட்டத்திலும் அதை, நிர்ணயித்தவர்கள், எனது ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களின் நல்லெண்ணத்தாலும், ஆலோசனையாலும் பெரும்பயன் அடைந்தவன் என்று நான் என்னைக் கூறிக் கொள்ளலாம்.

அடுத்த இதழில்:

என் குழந்தைப் பருவம்

—நீதிபதி

மு.மு. இஸ்மாயில்



பிஞ்சுகளுக் கதையரங்கம்

மோகனும் குமாரும் நண்பர்கள். மோகன் எட்டாம் வகுப்பில் படித்து வந்தான். குமார் பத்தாம் வகுப்பில் படித்து வந்தான். இருவரின் வீடு களும் ஒரே தெருவில், எதிர் எதிராக இருந்தன. மோகன் அடிக்கடி குமாரின் வீட்டுக்குச் செல்வான். குமாரும் மோகனின் வீட்டுக்குச் செல்வான். இருவரும் கதைப் புத்தகங்கள் படிப் பதில் மிக ஆர்வம் காட்டுவார்கள்.

மோகன் பத்திரிகைகளுக்குக் கதை கட்டுரை எழுதத் தொடங்கினான்.



அவனுடைய படைப்புகள் 'பாலர் பூங்கா' இதழில் அவ்வப்போது இடம் பெற்றன. மோகனுக்குப் போட்டி யாக குமாரும் 'பாலர் பூங்கா'விற்குப் பல படைப்புகளை அனுப்பினான். ஆனால், ஒன்றுகூட வெளிவரவில்லை. மோகனின் படைப்புகள் மட்டும் அடிக் கடி பாலர் பூங்காவில் வெளி வருவது குமாருக்குப் பொறாமையாக இருந் தது. இந்தப் பொறாமையே பகையாக மாறியது. மோகனை குமார் வெறுக்கத் தொடங்கினான். மோகனே குமாரிடம், வலிய வந்து பேசினாலும், குமார் முகம் கொடுத்துப் பேச மாட்டான். இன் னும் சொல்லப் போனால் மோகனைப் பழிவாங்கத் தக்க சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான் குமார்.

அன்று விடுமுறையாக இருந்ததால் குமாருக்கு வீட்டில் போரடித்தது. மோகனின் வீட்டுக்குச் செல்லவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. "என்ன செய்யலாம்?" என்று யோசித்தான். நூலகத்திற்குச் செல்வோம் என்று முடிவு செய்து நூலகத்திற்குச் சென் றான்.

குழந்தைகள் பகுதியில் உட்கார்ந்து கொண்டு புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த குமார், ஒரு கவிதைப் புத்தகத்தைப் பார்த்தான். அந்தப் புத்த கத்தை எழுதியவர் "பாலர் பூங்கா" இதழின் ஆசிரியர் 'ரமணி' தான். ஒவ் வொரு கவிதையும் முத்து முத்தாக இருந்தது. இதைப் பார்த்த குமாரின் மனத்தில் ஒரு திட்டம் உருவானது.

நன்றாக இருந்த ஒரு கவிதையை அப்படியே காப்பி அடித்தான் வீட்டுக்கு வந்து ஒரு வெள்ளைத் தாளில் அழகாக அந்தக் கவிதையை எழுதி னான். அதில் அவன் பெயர் போட வில்லை; மோகனின் பெயரையும் விலா சத்தையும் போட்டு "பாலர் பூங்கா" இதழுக்கு அஞ்சலில் அனுப்பினான்.

"பாலர் பூங்கா" ஆசிரியர் அந்தக் கவிதையைப் படித்துப் பார்ப்பார். மோகனின் காப்பி அடிக்கும் குணத் தைப் புரிந்து கொண்டு இனிமேல் மோகனின் படைப்புகளை பாலர் பூங்காவில் வெளியிட மாட்டார் என்று எண்ணி மகிழ்ந்தான் குமார்.

ஒரு மாதம் சென்றது. குமாருடைய அப்பா கூப்பிட்டார். "டேய் குமார், உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இங்கே வந்து வாங்கிக் கொள்." என குமார் விரைந்தான். கடிதத்தை வாங்

கிறான். ஹா! என்ன ஆச்சரியம்! 'பாலர் பூங்கா' ஆசிரியரிடமிருந்து தான் கடிதம் வந்திருந்தது. தான் முன்பு அனுப்பியவற்றில் ஏதேனும் ஒன்றை வெளியிட ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று நினைத்து மகிழ்ச்சியுடன் கவரைப் பிரித்துக் கடிதத்தை எடுத்துப் பார்த்தான். கடிதத்தில் இருந்தது இது தான்:

''நீ, நான் எழுதிய கவிதை ஒன்றை மோகனின் விலாசத்தைப் போட்டு எழுதியிருந்தாய். எப்படிக் கண்டு பிடித்தேனென்றால், உன்னுடைய படைப்புகள் அடிக்கடி தபாலில் எங்கள் பத்திரிகைக்கு வருகின்றன; உன் கையெழுத்தை நான் நன்கு அறிவேன். மோகனின் விலாசத்தைப் போட்டு நீ எழுதிய கவிதையையும் உன் கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கண்டுபிடித்தேன். உன் கெட்ட எண்ணத்தைக் கண்டு வெட்கப்படுகிறேன். இனிமேலாவது பிறரைக் கெடுக்கும் மனப்பான்மையை விட்டுவிடு.''

இதைப் படித்த குமார் ''ஐயோ! என் கெட்ட எண்ணம் எனக்கே பாடம் கற்பித்து விட்டதே!'' என்று கூறிக் கொண்டே சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டான்!



கிட்டுவுக்கு நன்றி

ஜி. அருண் (12661)

மணி எட்டேகால். பாலுவிற்கு ஒன்பது மணிக்கு இண்டர்வியூ. அதனால் அவன் வீடே அமளி துமளிப் பட்டது. பாலு அவன் வீட்டை அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தான். இந்த அவசரத்தில் வேறு, அவனுக்குக் கோபம். ஏன்? அவனுடைய சின்னத் தம்பி கிட்டுவை வேறு அவனுடன் கூட்டிச் செல்ல வேண்டுமாம். கோபம்தானே வரும்?

அவன் கத்தினான். ''நான் இருக்கிற அவசரத்தில், கிட்டுவை வேறு கூட்டிக்கிட்டுப் போகணுமா?''

''கத்தாதேடா. பக்கத்து ஊரில் நமக்கு ரொம்ப வேண்டியவங்க இறந்திட்டாங்க. உடனே போகணும். அங்கே கிட்டு சும்மா இருக்க மாட்டான். அதனால் அவனை நீ கூட்டிக்கிட்டு போ,'' — அவன் அம்மா.

பாலு கத்திக் கொண்டே லபக், லபக்கென்று இட்லியை வாய்க்குள் திணித்துக் கொண்டான். அவன் மறுக்க, இவர்கள் வற்புறுத்த, அங்கே ஒரு போரே நடந்தது. அந்தப் போரில் அவனது தாயும், தந்தையுமே வெற்றி பெற்றார்கள்.

''சரி, வந்து தொலை'' என்று சொல்லிக்கொண்டே ஆத்திரத்துடன் ஸ்கூட்டரை மிதித்தான். கிட்டு பின்னால் அமர்ந்து கொண்டான். அவன் ஸ்கூட்டரில் போகும் போது அவன் முகத்தில், பெரிய ஏரோப்ளேனில் போகிற குஷி இருந்தது.

இண்டர்வியூ நடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். ''உள்ளே வந்து ஏதாவது அமர்க்களப்படுத்தினே, பல்லை உடைத்திடுவேன், ஆமா'' — என்றான் பாலு.

கிட்டு அதற்குத் தலை ஆட்டினான். இன்னும் பாலுவை அழைக்கவில்லை என்பதால் ஒரு பெஞ்சியின் மீது உட்கார்ந்தான். கிட்டு சும்மா இருக்கவில்லை. பெஞ்சியின் மீது உட்கார்ந்திருந்த ஆசாமிகளை எண்ணிக்கொண்டிருந்தான். அதைப் பார்த்த பாலு, ''ஏய், சும்மா இருக்கப் போகிறாயா என்ன?'' என்றான். இதைக் கேட்ட கிட்டு மேலே பேசாமல் முறைத்தான்.

மாடியில்தான் இண்டர்வியூ நடந்து கொண்டிருந்தது. மாடிக்குப் போகும் படியில் கிட்டு உட்கார்ந்து கொண்டு, அவனுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதைக் காண்பிப்பதற்காக, ஒன், டூ என்று சத்தம் போட்டு ஆங்கிலத்தில் படிகளை எண்ணிக் கொண்டிருந்தான். நிமிடத்திற்கு நிமிடம் பாலு

கிட்டுவை அதட்டிக் கொண்டிருந்தான். கிட்டு அதற்கொன்றும் மசியவில்லை. அங்கே அவனுக்குப் பொழுது போகாததனால் படிகளை எண்ணிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் பாலுவிடமே வந்து கிட்டு கூறினான்.

"பாலு அண்ணா, பதினெட்டு (eighteen) படிகள் இருக்கு."

பாலுவிற்கு ஆத்திரமாக வந்தது. அந்த நேரத்தில் மாடியிலிருந்து இண்டர்வியூவிற்காகப் பாலுவிற்கு அழைப்பு வந்தது.

"டேய், எங்கேயாவது போயிடாதே, விஷமம் ஒன்றும் பண்ணாமல் இங்கேயே இரு" என்று கூறிவிட்டு சரசரவென்று படியில் ஏறிப் போய்விட்டான் பாலு.

* * *

வீட்டில் அம்மா, அப்பா எல்லோரும் வந்துவிட்டார்கள். கிட்டுவிற்கு நன்றாக அடியும், திட்டும் கிடைத்திருக்கும் என்று அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கே ஒரே ஆச்சரியம். கிட்டுவின் கையில் இரண்டு சாக்லேட்டைத் திணித்துக் கொண்டே, அவனைப் புகழ்ந்து கொண்டே வந்தான் பாலு.

"என்னடா, என்ன விஷயம்?" — அம்மா.

"நீங்க கிட்டுவைக் கூட்டிக்கிட்டுப் போகச் சொன்னதற்கு ரொம்ப நன்றி" என்றான் மகிழ்ச்சியுடன் பாலு.

"என்ன விஷயம்? அதை முதலிலே சொல்லு" — அப்பா

பாலு, கிட்டுவின் விஷமங்களைக் கூறினான். அதன் பிறகு, ஆபீஸின் மாடியில் நடந்த நிகழ்ச்சியைக் கூறினான்: "மாடியில் ஏறினதும் 'நீ அவசரத்திலே வந்திருப்பாய். அப்படித்தானே?' என்று மானேஜர் கேட்டார்.

நான் உடனே, "இல்லை, நிதானமாகத்தான் வந்தேன்," என்றேன்.

"அப்படியென்றால் நீ எத்தனை படிகளை ஏறி வந்தாய்?" என்றார்.

உடனே, எனக்குக் கிட்டுவின் ஞாபகம் வந்தது. சட்டென்று 'பதினெட்டு' என்றேன். "சபாஷ்! சரியாகச் சொன்னாய்" என்றார் மானேஜர். எனக்குக் கிட்டுவினால் வேலை கிடைச்சிருச்சு. அதனால், கிட்டுவிற்கும், உங்களுக்கும் ரொம்ப நன்றி" என்று அவன் ஆபீஸில் நடந்த கிழ்ச்சிகளை ஒரே மூச்சில் முடித்தான். இதைக் கேட்டு விட்டு அவர்கள் மகிழ்ச்சியுடன் பாலு வாங்கி வந்த மில்க் சாக்லேட்டைச் சுவைத்தார்கள்.

ஞாபக சக்தி மருந்து!

சிலருக்கு நோய் ஏற்பட்டு அதனால் ஞாபக சக்தியை அவர்கள் இழந்து விடுவதுண்டு. அப்படி ஞாபகசக்தியை இழந்தவர்கள் மீண்டும் முன்போல் ஞாபக சக்தியைப் பெறலாமாம். இதற்காக ஏய் செயின்ட் லாப்ஸ் என்ற அமெரிக்கக் கம்பெனி ஒரு மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறது. படித்த பாடங்களை மறந்துவிடும் மாணவர்கள் உடனே இந்த மருந்தைப் பயன்படுத்த நினைக்கலாம். ஆனால், அவர்களுக்கு இந்த மருந்து பயன்படாதாம். வியாதியின் காரணமாக ஞாபக சக்தியை இழந்தவர்களுக்கு மட்டுமே பயன்படுமாம்!

— ஏ. பிரபு (641), பரோடா.





திப்பிலி ராஜாவும் காணாமல் போன நெடுஞ்சாலையும்

வான்மதி

அன்று 'அம்மா ஆசை'. திப்பிலி நாட்டு அம்மாக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தனர். அம்மா ஆசையாகத் தனக்கு நிலாச் சோறு ஊட்டியதால், பௌர்ணமியை 'அம்மா ஆசை' என்று அழைக்க வேண்டுமெனத் திப்பிலி ராஜா உத்தரவிட்டிருந்தார். அது தவிர, அமாவாசையும் வழக்கம் போல் உண்டு.

அரண்மனை நிலாமுற்றத்தில் கூண்டுக் காக்காய்க்குப் பழம் ஊட்டிக் கொண்டே அம்மாதக் கூண்டறிக்கைகளைப் படித்துக் கொண்டிருந்தார் திப்பிலி ராஜா. முதலில் அவர் கிளிதான் வளர்த்தார். அது அரண்மனை ரகசியங்களை வெளியே சொல்லிவிட்டது. காக்காய் எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் கரைந்தது. மேலும், தானே காக்காயைப் பிடித்து வைத்துவிட்டால் தன்னை யாரும், 'காக்காய் பிடிக்க' இயலாது என்பது அவர் திட்டம்!

ஆண்டறிக்கைகளைக் கூண்டறிக்கைகளாக மாற்றியதும் அவர் திட்டம்தான்! அதன்படி, ஒவ்வொரு அமைச்சரும் தன் துறையின் சாதனைகளையும், வேதனைகளையும், பனை ஓலைத் துண்டுகளில் எழுதிக் காக்காய்க் கூண்டுக்குள் போட்டுவிட வேண்டும். 'அம்மா ஆசை'யன்று காக்காய் ஏதாவதொரு ஓலையை எடுத்துக் கொடுக்கும். அதனை நிலவொளியில் படித்துவிட்டுத் தொடர்புடைய அமைச்சரைக் கூப்பிட்டு விளக்கம் கேட்பார்; உதவுவார்; உளறுவார்.

ராஜாவிடமிருந்து தப்பப் பல வழிகளைக் கையாண்டனர் மந்திரிகள்; அரண்மனை நாட்காட்டியில், 'அம்மா ஆசை', அமாவாசை நாள்களைத் தவறாக மாற்றி எழுதிவிடுவார்கள். 'அம்மா ஆசை' நாளன்று ஜன்னலுக்குக் கறுப்புத் திரை போட்டுவிடுவார்கள். நாட்டிய, பாட்டியக் கச்சேரிகளை ஏற்பாடு செய்துவிடுவார்கள்.

அன்று ஒரு மந்திரி, புதிய தந்திரமொன்றினைச் செய்து வைத்திருந்தார். தன் கூண்டறிக்கையின் மேல் நீலகிரித் தைலத்தைத் தடவிக் கூண்டினுள் போட்டுவிட்டார். அதனைக் காக்காய் எடுக்காது என நம்பினார். ஆனால், 'அந்தோ அவர் விதி. காக்காய்க்குத் தலைவலி. தைல ஓலையைத் தேடி எடுத்தது. அதைப் படித்த ராஜாவுக்கு வந்த கோபத்தில் இமைகள் துடித்தன.



மறந்தது?

வேலைக்காரன்: முதலாளி உங்களைத் தேடி ஓர் ஆள் வந்திருந்தார்.

முதலாளி: அப்படியா! அந்த ஆள் சுறுப்பாக இருந்தாரா?

வேலைக்காரன்: அடடா, அதை நான் கேட்க மறந்துட்டேன் முதலாளி!

— வி. எல். ஆசா

"யாரங்கே, மெதுவாக நடந்து போய், நெடுஞ்சாலைத் துறை அமைச்சரை மெதுவாக அழைத்துவா" என்று அவர் அவசர உத்தரவிட்டார்.

லாடம் அடித்த பெரிய பூட்சுகளைப் போட்டுக் கொண்டிருந்த காவலர்கள் வேகமாக ஓடினால், அரண்மனைச் சலவைக் கல், தரை உடைந்துவிடும். மண் நெடுஞ்சாலைகள் பள்ளமாகி விடும் என்ற அச்சத்திலிருந்து அந்த ஆணைகள் பறந்தன; வந்தார் மந்திரி.

"சாலையப்பரே! என்ன இது வரலாறு காணாப் புதுமை. நம் நாட்டில் ஒரு தி. மீ. நெடுஞ்சாலையைக் காணோமே."

எதுவோ காணோம், என்றதும் தன் சட்டைப் பைகளைத் தடவிப் பார்த்துக் கொண்டார் அமைச்சர். அவருக்கு ஞாபக மறதி. ஏதோ ஞாபகத்தில் நெடுஞ்சாலையைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டிருக்கலாம்.

"சென்ற மாத அறிக்கையில் திப்பிலி நாட்டுச் சாலைகளின் மொத்த நீளம் 11 தி.மீ. என்று பார்த்த ஞாபகம். இம்மாத அறிக்கையில் 10 தி.மீ. என்றுதானே இருக்கிறது?" ராஜா கேட்டார்.

"விடுமுறையில் வீட்டுக்குப் போன பள்ளிப் பையன்கள் எடுத்துச் சென்றிருக்கலாம்" என்று விளக்கினார் அமைச்சர். ராஜா ஏற்றுக் கொள்ளவில்லை.

"சென்றமாதஅறிக்கையைஎழுதிய அமைச்சர் வேறு. எதற்கும் நாடெங்கும் உள்ள பள்ளிகளுக்கு நாளை விடுமுறை விட்டுவிட்டு, எல்லா மாணவர்களையும் தேடச் சொன்னால், பொழுது சாய்வதற்குள் காணாமல் போனது கட்டாயம் கிடைத்துவிடும்" என்று உறுதியளித்தார் சாலை அமைச்சர் சாலையப்பர்.

கூண்டறிக்கைகளைப் படித்துவிட்டு, அமைச்சரவையைக் கூண்டோடு மாற்றுவது ராஜாவின் வழக்கம். நெடுஞ்சாலைத் துறையின் முன்னாள் அமைச்சர் விதி விளங்கர் தன் துறையில் பல புதுமைகளைப் புகுத்தினார். அதில் ஒன்றுதான் தி.மீ. அளவு. அதாவது திலோ மீட்டர். எல்லா நாடுகளும் பயன்படுத்தும் மீட்டர் ஸ்கேல்கள் திப்பிலி நாட்டுக்குள் இறக்குமதியானதும், ஒவ்வொன்றிலும் 10 செ.மீ. வெட்டப்பட்டுவிடும். அந்தப் புதிய ஸ்கேலினால் 100 முறைகள் அளந்தால் கிடைக்கும் தூரமே ஒரு திலோ மீட்டர்!

ஒருமுறை ராஜாவின் பிறந்த நாள் ஊர்வலம். ஊர்வலத்தின் முன் 101 குடங்களில் பாலும் தேனும் கழுதைகளின் மேல் ஏற்றி அணிவகுத்தார் விதி விளங்கர். யாரோ ஒரு பொடியன் கழுதை வாலில் டப்பாவினைக் கட்டி விட்டான். கழுதைகள் எல்லாம் கண்டபடி ஓடிக் குடங்களை உடைத்து விட்டன. தெருவெல்லாம் பாலும் தேனும் ஓடின. தொடர்ந்து ஊர்வலத்தில் வந்த ராஜா அதைப் பார்த்து வியந்தார்; மகிழ்ந்தார்.

"தேனும் பாலும்
தெருவில் ஓடும் மாட்சியே!
என்ன காட்சியே!
எருமை சாட்சியே!"

என்று ஒரு முச்சந்திக் கவிஞர் மூக்கால் பாடினார். அவருக்கு ஒரு வடைமாலையைப் பரிசாக அளித்தார் ராஜா.

ஆனால், அன்றிரவு ராஜா குடிக்கப் பாலும் தேனும் இல்லை. அவை வீணாவதற்குக் காரணம் விதி விளங்கரே என்று விசாரித்தறிந்த ராஜா உடனே அவரை வேலையிலிருந்து விலக்கிவிட்டார். ஆனால், விதி விளங்கர் அரண்மனையிலிருந்து விலகவில்லை.

"மன்னர் பணியே மக்கள் பணி!"
"என் கடன் பணி செய்து நடப்பதே"
என்பது அவர் கொள்கை. மாறு வேடம் போட்டுக் கொண்டார். பெயரை மாற்றிக் கொண்டார், சோலையப்பன் என்று. மந்திரி வேலைக்கு மனுப் போட்டார். முதலில் பேனா சரியாக எழுதவில்லை. சோலையப்பன், சாலையப்பன் போல் தெரிந்தது. பெயர்ப் பொருத்தம் பார்த்து ராஜா அவரை மந்திரியாக்கிவிட்டார். இவ்வளவு தொல்லைப்பட்டுக் கிடைத்த துறையில், இப்படி நெடுஞ்சாலை காணாமல் போய்விட்டதே!
மறுநாள் விடியற் காலை 9.00 மணிக்கு ராஜா காலையுலா சென்ற பொழுது, எதிரில் இரைக்க இரைக்க ஓடி வந்த சுப்பன்,
"ராஜா, ராஜா, நில்லுங்கள்" என்று வணங்கினான்.
பொடியன் சொல்லி நாம் நிற்பதா என்று நினைத்த ராஜா பக்கமிருந்த கிலோ மீட்டர் கல்லின் மீது உட்கார்ந்தார். கல் பூமிக்குள் கொஞ்சம் அழுந்தியது.
"இவ்வளவு விடியற்காலையில் ஏன் பள்ளிக்கூடத்திற்கு ஓடுகிறாய் பையா?"
"அரண்மனையை நோக்கி மாணவர் ஊர்வலம் புறப்படப் போகிறது. நல்ல வேளை, தேடிப் போன ராஜாவைத் தெருவிலேயே பார்த்துவிட்டேன்."
"ஒழுங்காகப் படிக்காமல் ஊர்வலமா?"
"ஒழுங்காகப் படிக்கத்தான் ஊர்வலம். இந்த மாதம் கடைகளில் நாங்கள் வாங்கிய ஸ்கேல்களினால் அளந்து போடும் கணக்குகளுக்கு எல்லாம் தப்பும் தவறுமாக விடைகள் வருகின்றன. அதே ஸ்கேல்களினால் அடியும் கிடைக்கின்றது."
"என்ன அநியாயம்? விடைகள் தவறு என்பதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?"
"புத்தகத்தின் கடைசியில் கொடுத்துள்ள விடைகளைப் பார்த்து."
"புத்தக விடைகளை உடனே மாற்ற ஆணையிடுகிறேன்."
"வேண்டாம் அரசே! இதோ பாருங்கள்." — என்று சுப்பன் இரண்டு ஸ்கேல்களை எடுத்துக் காட்டினான். புதிய ஸ்கேல் நீளமாகவும்,



பழைய ஸ்கேல் குட்டையாகவும் இருந்தது. ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்பொழுது சாலையப்பர் ஒரு குட்டை ஸ்கேலைக் கொண்டு சாலையை வேர்க்க, விறுவிறுக்க அளந்து கொண்டு வந்தார். குனிந்தபடியே அளந்து கொண்டு வந்தவர் திலோ மீட்டர் கல்வரை அளந்துவிட்டு, 'அப்பாடா!' என்று நிமிர்ந்தபொழுது அதன் மேல் உட்கார்ந்திருந்த ராஜாவைப் பார்த்துத் திடுக்கிட்டு, எண்ணி வந்த அளவு எண்ணிக்கையை விட்டு விட்டார்.

ராஜா கையில் இரு ஸ்கேல்கள். ஸ்கேலுக்கு ஒரு 'திரு' வீதம், இரு ஸ்கேல்களுக்குத் 'திருதிரு' என்று மந்திரி விழித்தார். சுப்பன் விளக்கினான்:

"விதி விளங்கர் அமைச்சராக இருந்தபோது, ஸ்கேல்களை 10 செ.மீ. வெட்டிக் குறைத்துத் 'திப்பிலி மீட்டர்' என்ற புதிய அளவு முறையைப் புகுத்தினார். புதிய சாலைகள் போட இடமில்லை. எனினும், இருக்கின்ற சாலைகளைத் தேவையில்லாமல் வளைத்து வளைத்து மலைப் பாதைகள் போலப் போட்டு, அதையெல்லாம் அளந்து, நாட்டில் சாலைகளின் நீளம் அதிகரித்துள்ளது என்று காட்டிவிட்டார். சாலையப்பர் மந்திரியானபின் ஸ்கேல்களை வெட்டுவதில்லை. எனவே தான் கணக்குகளுக்கு விடைகள் தவறாக வருகின்றன. நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமும் குறைந்துவிட்டது."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்."

"மிளகு நாட்டுப் பத்திரிகையில் வந்தது."

"அடேடே! நம் நாட்டுச் செய்திகளைச் சரியாகத் தெரிந்து கொள்ள இனிமேல் பக்கத்துநாட்டுப்பத்திரிகைகளைத்தான் படிக்க வேண்டும்" என்ற ராஜா, காணாமல்போன நெடுஞ்சாலை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் தன் கழுத்தில் இருந்த முறுக்கு மாலையை மந்திரிக்கும் மாணவனுக்கும் சேர்த்தே அணிவித்தார். அவர்கள் 'கறுக்', 'முறுக்' என்று சாப்பிடத் தொடங்கினர்.

"இனிமேல் தி.மீ. வேண்டாம். கி.மீ. தான் வேண்டும்" என ஆணையிட்டார் ராஜா.

"தி.மீ. கற்களிலுள்ள 'தி' எழுத்தின் காலைச் சுரண்டி எடுத்துவிட்டால் அது 'கி' ஆகிவிடும். பள்ளிக்கூடங்களுக்கு ஒருநாள் விடுமுறை விட்டால்எல்லாக் கற்களையும்சுரண்டி விடுவோம்" என்றான் சுப்பன்.

"வேண்டாம்! வேண்டாம்! சுரண்டலற்ற சமுதாயம் அமைப்பதே என் அரசின் கொள்கை. வெள்ளை வர்ணம் அடித்துத் 'த'வைக் 'க' ஆக்கிவிடலாம்" என்றார் ராஜா.


"அது முடியாது அரசே. நம் நாட்டில் வெள்ளை வர்ணம் கூடக் கறுப்புச் சந்தையில்தானே கிடைக்கிறது! மஞ்சள், பச்சை வர்ணங்கள் பத்திரிகைகளுக்கும், கறுப்பு சட்டங்களுக்கும் செலவாகிவிடுகின்றன. மீதி வர்ணங்களை வானவில்லில்தான் காண முடியும். ஒரு சுலப வழி. இதோ நீங்கள் உட்கார்ந்திருக்கும் கல்லைப் பாருங்கள். 'கி.மீ.' என்றுதான் தெரிகிறது. கல் கொஞ்சம் அழுந்திவிட்டதால், 'தி'யின் வால் பகுதி மண்ணில் புதைந்துவிட்டது. இதே போல நீங்கள் நாளுக்கொரு கல்லில் உட்கார்ந்து எழுந்தால் போதும்" என்று மந்திரி சொன்னதும், 'ஆஹா ஆஹா! நல்ல யோசனை!" என்று அதை ஏற்றுக் கொண்டு எழுந்து நடந்தார் ராஜா.

எதுக்காக அப்படி?


"ஏன் சார், இப்படி ரெண்டு கையையும் விரிச்ச வச்சபடி போறீங்க?"

"என் வீட்டு ஜன்னலுக்கு கண்ணாடி வாங்க அளவு எடுத்துக்கிட்டுப் போறேன்."

— ஏ. ஆர். வீரராகவன்




புதையல் வீடு
டாக்டர்
பூவண்ணன்
அக்டோபர்'86
கோகுலம்
இதழில் ஆரம்பம்



தற்சமயம் உரிமை, கடமை என்னும் சொற்கள் எங்கும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் உண்மையான பொருளைப் பலர் அறிவதில்லை. அவை இரண்டிற்கும் உள்ள உறவையும் புரிந்து கொள்வதில்லை.

கடமை என்ற மரத்தின் பழம்தான் உரிமை. மரமில்லாமல் பழம் எப்படிக் கிடைக்கும்? கடமையைச் செய்தால்தான் உரிமையைப் பற்றிப் பேச முடியும். ஓர் அலுவலகத்தில் ஒருவன் வேலை செய்கிறான். வேலை செய்தவனுக்கு ஊதியம் பெற உரிமையுண்டு. ஆனால், ஒரு மாதம் வேலையைக் கடமையாகச் செய்தால்தான் உரிமையாகிய ஊதியத்தைப் பெறமுடியும்.

வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, திருக்குறள் போன்ற நூல்கள் கடமையை வற்புறுத்துகின்றன. 'கடமையைச் செய். பயனை எதிர்பாராதே!' என்று கண்ணபிரான் பகவத் கீதையில் கூறியுள்ளார். பயனை எதிர்பார்த்துச் செய்யும் கடமை உண்மையான கடமையாகாது. எதிர்பார்த்த பயன் கூடியோ குறைந்தோ போனால், அதற்கேற்பக் கடமையுணர்ச்சி மாறும். அந்த இடத்தில் நேர்மை, நியாயம், ஒழுங்குமுறை முதலியவை பொருத்தமான முறையில் அமையா. கடமைக்கான உரிமையை எதிர்பார்ப்பது நியாயம்தான். ஆனால், வரும் பயனை அனுபவிக்க ஆண்டவன் அருள் வேண்டியிருக்கிறது. இந்தக் காரணங்களினால்தான் கண்ணபிரான் பயனை எதிர்பாராதே என்றார்.

நாம் கடமையைச் செய்வதற்கு உரிமையோடு முயல வேண்டும். கடமை முடியும்பொழுதுதான் உரிமை வருகிறது என்று கருத வேண்டாம். முழு மனத்தோடு கடமையாற்றத் தொடங்கும்பொழுதே உரிமையும்கூட வருகின்றது. கடமை ஆற்றுவதற்கு முன்பே உரிமையை நினைத்துவிட்டால் கடமை அரைகுறையாக நின்றுபோய் விடும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கான கல்வி, உணவு, உடை முதலியவற்றைக் கொடுக்கக் கடமைப் பட்டு இருக்கிறார்கள். அதே சமயம், குழந்தைகள் அவற்றை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு உரிய கடமைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்று கவனிக்க வேண்டும். அதுபோல குழந்தைகளும் பெற்றோர்களிடமிருந்து கல்வி முதலியவற்றை எதிர்பார்க்கும் உரிமை பெற்றவர்கள், அவர்கள் அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கடமைகளைச் செயல்படுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஆசிரியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நன்றாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே சமயம் மாணவர்கள் தங்கள் பணிகளை நன்றாகச் செய்

கிறார்களா என்று மேற்பார்வை செய்யும் உரிமையையும் பெற்று இருக்கிறார்கள். மாணவர்கள் ஆசிரியரிடமும் கல்வி பயில உரிமை பெற்றிருக்கிறார்கள். அத்துடன் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நன்றாகப் படிக்க மாணவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

செல்வந்தர்களும் வசதி உள்ளவர்களும் தொழில்களைப் பெருக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். அதே சமயம் தங்கள் தொழிலில் நேர்மை, தொழிலாளிகளின் நலம், பொது ஜன சேவை முதலியவற்றை மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் வேலை பார்க்கும் தொழிலாளிகள் விசுவாசத்தோடும் கடமை உணர்வோடும் வேலை பார்க்க வேண்டும். அதே சமயத்தில் தங்களுக்கு உரிமையான நியாயமான ஊதியத்தினைப் பெறவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

ஒரு நாடு தன் நாட்டு மக்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து தரக் கடமைப்பட்டிருக்கிறது. அத்துடன் நாட்டு மக்கள் அனைவரிடமிருந்தும் நாட்டுப் பற்றை எதிர்பார்க்கும் உரிமையும் அந்த நாட்டிற்கு உண்டு. நாடு தரவேண்டிய சகலவிதமான வசதிகளையும் உரிமையுடன் எதிர்பார்க்கும் மக்கள், தங்கள் நாட்டுப் பற்றை உயரிய ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் காட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

இதுவரை நாம் கடமைகளையும் உரிமைகளையும் நன்கு அறிந்துகொண்டோம். கடமையாற்றும் பொழுது வரும் பலனை ஆண்டவனுக்குச் சமர்ப்பித்துவிடுவோம். கடமையை முழு மனத்துடன் செய்வோம்.

திருக்குறள் :

குடி செய்வல் என்னும் ஒருவற்குத்
தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

குழந்தை இலக்கியப் போட்டி:

குழந்தை எழுத்தாளர் சங்கம் இந்த ஆண்டு இரண்டு வகையான போட்டிகளை அறிவித்துள்ளது.

ஏவி.எம். தங்க, வெள்ளிப் பதக்கப் பரிசுகள்:

இந்த ஆண்டு வாழ்க்கை வரலாறு, அறிவியல் ஆகிய இரு துறைகளுக்கும் ஏவி.எம். பரிசுகள் வழங்கப் பெறும்.

எல்லப்பா–ரங்கம்மாள் நினைவுப் பரிசுகள்:

முதல் பரிசு ரூ 1000/–; இரண்டாம் பரிசு ரூ 500/–

கோவை திரு ஈ. வெங்கடேசலு அவர்கள் தம் பெற்றோர் நினைவாக வழங்கும் பரிசுத் திட்டம். இந்த ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாக வைத்து எழுதப் பெற்ற சிறுவர் நாவலுக்கு வழங்கப் பெறும்.

போட்டி விதிகள் :

1. புத்தகமாக வெளியிடுவதற்கேற்ற கையெழுத்துப் பிரதிகளில் இரண்டு பிரதிகளை 30.9.1986க்குள் குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏ.எல். 183, அண்ணாநகர், சென்னை—40 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்; 2. முழு அளவு வெள்ளைத் தாளில் சுமார் 80 பக்கங்கள் இருப்பின் நல்லது; 3. எழுதியவரின் பெயரும், முகவரியும் மட்டும் முதல் பக்கத்தில் குறிப்பிட வேண்டும். அதன் கீழே 'இந்தக் கையெழுத்துப் பிரதியில் கண்டவை தான் சொந்தமாக எழுதியவையே. இதற்கு முன் புத்தகத்தில் இடம் பெறாதவை' என உறுதி அளித்துக் கையெழுத்திட வேண்டும்; 4. பரிசு பெறும் பிரதிகளின் உரிமை நூலாசிரியருக்கே உரியது; 5. அவை நூல் வடிவம் பெறும்போது 'குழந்தை எழுத்தாளர் சங்கம் 1986 ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் ஏவி.எம். அறக்கட்டளை தங்க/வெள்ளிப் பதக்கப் பரிசு பெற்றது' என்றோ "எல்லப்பா—ரங்கம்மாள் முதல்/இரண்டாம் பரிசு பெற்றது' என்றோ குறிப்பிட வேண்டும்; 6. முன்பே ஒரு துறையில் பரிசு பெற்ற எழுத்தாளருக்கு மறுமுறையும் அதே துறையில் பரிசு வழங்கப்படமாட்டாது.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* பேச்சுப் போட்டிகளில் அநேக மாணவர்கள், தங்கள் ஆசிரியர்கள் எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து, அப்படியே மேடையில் பேசுகின்றனர். இவர்களுடன் சொந்தமாகச் சிந்தித்துப் பேசுகிறவர்களால் போட்டியிட்டு வெற்றி பெற முடிவதில்லை. சுயமாகச் சிந்தனைசெய்துபேசுகிறவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா?

— அ. கார்மேகம், மானாமதுரை.



கட்டாயம் மதிப்புக் கொடுக்க வேண்டும். ஒரு பேச்சுப் போட்டியிலே கலந்து கொண்டான் நாலாவது படிக்கும் ஒரு மாணவன். அவன் பேசும்போது, 'நான் என் வாழ்நாளில் பாரதியைப் போல ஒரு கவிஞனைக் கண்டதில்லை. ஷேக்ஸ்பியரைவிட, மில்டனைவிட, ஷெல்லியைவிட மிக உயர்ந்தவன் பாரதி' என்று குறிப்பிட்டான். பத்து வயதைக்கூடக் கடக்காத அச்சிறுவன், 'நான் என் வாழ்நாளில்...' என்று ஆரம்பிக்கிறான்! ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி போன்றவர்களின் கவிதைகளை அவனுக்கு எழுதிக் கொடுத்த ஆசிரியரே படித்திருப்பாரா என்பது சந்தேகம். அத்துடன் மாணவர்கள் பேசும்போது பெரியவர்களை மரியாதையாகக் குறிப்பிடுவதே நல்லது. 'அவன்', 'இவன்' என்றெல்லாம் குறிப்பிடுவது நல்லதன்று. இவையெல்லாம் அவனுக்கு எழுதிக் கொடுத்த ஆசிரியரால் வந்த கோளாறுதான்! இருந்தாலும், மேடையில் ஏறிக் கூச்சமில்லாமல் பேச, சொற்களைத் திருத்தமாக உச்சரிக்க, தொடக்கத்தில் ஆசிரியர் உதவுவதைத் தவறு என்று சொல்ல முடியாது. நாளடைவில் சிந்தித்துப் பேசும் திறமையை அவர்கள் பெற வேண்டும்.

* பிருந்தாவனக் கவியரங்கம், கதையரங்கம் போல் ஓவியத்திற்கும் இடம் அளிப்பீர்களா?

— க. பால முருகன், மதுரை—10.

அளிப்போம். இந்தியன் இங்கைப் பயன்படுத்திச் சொந்தமாக வரைந்து அனுப்பினால், தகுதி பார்த்து வெளியிடுவோம். ஆயினும், கலர் ஓவியங்கள் இப்போது வேண்டாம்.

* டி.வி. பார்ப்பதால் கண்ணுக்குக் கெடுதல் என்கிறார்களே?

— எஸ். ராமானுஜம், திருச்சி—5

அளவுக்குமீறினால்எதுவுமேகெடுதிதான்

* நம் தேசம் ராக்கெட்டை முதல் முதலாக எப்போது செலுத்தியது என்று கூறுவீர்களா?

— க. முருகேசன், அரியலூர்.

1987ல் ரோகிணி என்னும் ராக்கெட்டைச் செலுத்தியது.

* உலகத்திலே காது கேளாதவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?

— பி. லலிதகுமாரி, கும்மிடிப்பூண்டி.

உலகிலுள்ள மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதம் பேருக்குக் காது கேட்பதில்லை. இவர்களில் அரைகுறையாகக் கேட்காதவர்களும் உண்டு. ஒரு காது மட்டும் கேட்காதவர்களும் உண்டு. அடியோடு கேட்காதவர்களும் உண்டு.

* பிறந்த நாளை நட்சத்திரப்படி கொண்டாடுவதா? அல்லது அம்மாதத் தேதிப்படி கொண்டாடுவதா? இவற்றில் கொண்டாடப்படும் முறை எது?

— கி. அங்குராஜன், உடுமலைப்பேட்டை.

நட்சத்திரப்படி கொண்டாடுவதுதான் சரியான முறை. இருந்தாலும், பெரிய தலைவர்கள் அறிஞர்கள் பிறந்த மாதம், நட்சத்திரம் ஆகியவற்றை அறிந்து கொண்டாடுவது சிரமம். அவர்கள் பிறந்த ஆங்கில மாதம் தேதியை நினைவில் வைத்துக் கொண்டாடுவது எளிது.

*** கத்தரிச் செடி முதல் முதலாக எங்கு பயிர் செய்யப்பட்டது?**

— எம். சித்ரா, தூத்துக்குடி.

கத்தரியின் தாயகமே இந்தியாதான்.

*** நம் நாட்டுச் சுதந்திரப் போரில் முதல் முதலாகச் சிறை சென்ற பெண்மணி யார்?**

— பெ. ஏழுமலை, தஞ்சாவூர்.



சரோஜினி தேவி.

*** இரும்பைக் கண்டு பிடித்தவர் யார்?**

— சி. செந்தில்நாதன், வெங்கரை.

இரும்பைக் கண்டு பிடித்தவர் இவர்தான் என்று ஒருவருடைய பெயரைச் சொல்ல முடியாது. 4000 முதல் 6000 ஆண்டுகளுக்குள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

*** தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி பாட மொழியால் நன்மைதானே?**

— இரா. நைனுமலைராஜ்,
இரா. புதுப்பாளையம்.

தமிழ் மொழிக்குத்தான் முதல் இடம். அடுத்து ஆங்கிலமோ, இந்தியோ இருக்கலாம்.

*** சிறுவர்களுக்காக முதல் முதலாக வெளி வந்த தமிழ்ப் பத்திரிகை எது? எப்போது யாரால்வெளியிடப்பட்டது? அதுதொடர்ந்து வருகிறதா?**

— என். வடிவேலு, அக்ரஹாரம்.

'பால தீபிகை' என்பதுதான் தமிழில் முதல் முதலாக வெளிவந்த சிறுவர் பத்திரிகை. நாகர்கோயிலில் இருந்த கிறிஸ்தவப் பிரசார சபையாரால் 1840ல் வெளியிடப்பட்டது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாக வெளிவந்த அப்பத்திரிகை 13 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.

*** பீடிசிகரெட் குடிக்கும் அப்பாவால்பிள்ளைகளுக்குக் கெடுதல் உண்டா?**

— சி. குமார், சென்னை—10.

உண்டு என்றுதான் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். புகை பிடிப்பவருக்குப் பிறக்கும் குழந்தையின் சிறுநீரில் நிகோடின் என்ற விஷப் பொருள் காணப்படுகிறதாம். அதிகமாய்ப் புகைப்பவரின் குழந்தையிடம் அதிக விஷம் இருக்குமாம்!

*** 'குயிலுக்குக் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கத் தெரியாது. அதனால், காக்கையின் கூட்டில்தான் குயில் முட்டையிடும்' என்று படித்திருக்கிறேன், காக்கையின் கூட்டில்தான் முட்டையிட வேண்டுமா? வேறு ஒரு பறவையின் கூட்டிலே முட்டையிடக் கூடாதா?**

— ப. மதிவாணன், மதுரை—20.

காக்கையின் கூட்டில்தான் பெரும்பாலும் முட்டையிடும். இன்னொரு பறவையின் கூட்டிலும் சில சிறு வகைக் குயில்கள் முட்டையிடுவதுண்டு. அந்தக் கூடு யாருடைய கூடு தெரியுமா? தவிட்டுக் குருவியின் கூடு!

*** வாலிபால் எந்த நாட்டு விளையாட்டு? அது எந்த ஆண்டு துவங்கியது?**

— எஸ். கந்தகுமார், வேதாரண்யம்.

1895ல் அமெரிக்காவில் தொடங்கப் பெற்றது. வில்லியம் மார்கன் என்ற ஓர் உடற்பயிற்சி டைரக்டரால்.


*** நந்தவனத்தில் ஓர் ஆண்டி — அவன்**
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான்ஒருதோண்டி— அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி.

— இந்தப் பாடலை எழுதியவர் யார்?

— ந. பொன்ராஜ், சுமுதி.



இப்பாடலை இயற்றியவர் பெயர்: கடுவெளிச்சித்தர்.



பாரதியார் வாழ்விலே

பாரதியாரின் முன்னோர் வாழ்ந்த ஊர்:

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிவலப் பேரி என்ற ஊர்தான் பாரதியாரின் முன்னோர் களின் ஊர். பாரதியாரின் தந்தையான சின்னச்சாமி ஐயர் கல்வி, கேள்விகளில் சிறந்த வர். தமது கல்வி கேள்விகளால் முன்னுக்கு வரும் நோக்கத்துடன் அவர் தம்முடைய மாமனார் ஊராகிய எட்டயபுரத்துக்குக் குடியேறினார்.

முதல் பாட்டு:

ஆங்கிலத்தில் 'ஸானட்' என்று ஒரு பாடல் உண்டு. அதில் 14 வரிகள் இருக்கும். அதே போல் பாரதியாரும் 14 வரிகளில் ஒரு பாடல் எழுதினார். அதற்குப் பெயர் 'தனிமை இரக்கம்'. 1904 ஜூலையில் மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேகபானு' என்ற பத்திரிகை யில் அது வெளி வந்தது. பத்திரிகையில் வெளிவந்த பாரதியாரின் முதல் பாட்டு இதுவே.

தமிழ்ப் பண்டிதர் வேலை:

அதே ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதி பாரதியார் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் பண்டிதராக வேலையில் சேர்ந்தார். அது தற்காலிக வேலைதான். மாதம் சம்பளம் 17½ ரூபாய். அங்கு அவர் வேலை பார்த்தது 3 மாதம் 10 நாட்களே!

சகுந்தலா என்ற பெயர்:

பாரதியார் காளிதாசருடைய 'சாகுந்தலம்' என்ற நாடகத்தைப் படித்துக் கொண்டிருந்த சமயம், அவருடைய மனைவி செல்லம்மாளுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கும் செய்தி வந்தது. உடனே, குழந்தைக்கு 'சகுந்தலா' என்று பெயர் வைக்கும்படி எழுதினார்.

முதல் கவிதை நூல்:

முதல்முதலாக வெளிவந்த பாரதியாரின் கவிதை நூலின் பெயர் 'ஸ்வதேச கீதங்கள்' என்பதே. 1908 ஆம் ஆண்டு வெளிவந்த இந்த நூலில் 14 பாடல்களே இருந்தன. 'வந்தே மாதரமென்போம்', 'மன்னும் இமயமலை,' 'எந்தையும் தாயும்', 'வாழிய செந்தமிழ்' அவற்றுள் சில.

பாப்பா பாட்டு

பாரதியார் தம்முடைய இரண்டாவது பெண் பாப்பா என்ற சகுந்தலாவுக்காகப் பாடியது தான் 'பாப்பா பாட்டு'. 1915 பிப்ரவரியில் 'ஞான பாநு' என்னும் பத்திரிகையில் இது

வெளிவந்தது. அப்போது அந்தப் பாடலில் 56 வரிகளே அச்சாகியிருந்தன. இப்போதுள்ள அந்தப் பாடலில் உள்ள வரிகள் 64.

'அல்லா' பாட்டு:

பொட்டல் புதூர் என்ற ஊரிலே முஸ்லிம் வாலிபர் சபையிலே நபிகள் நாயகம் பிறந்த நாளில் 'அல்லா, அல்லா, அல்லா!' என்று தாம் இயற்றிய பாடலை அரங்கேற்றினர் பாரதியார்! 1920 ஆம் ஆண்டில்.

அஇ இஇ:

இல்லை என்ற சொல்லே பாரதிக்குப் பிடிக்காது. வீட்டில் அரிசி இல்லை என்ருல், அஇ இஇ (அ—இ) என்றே தெரிவிக்க வேண்டுமென மனைவிக்கு உத்தரவிட்டிருந்தார் பாரதியார். அரிசிக்கு இப்படி சிரமப்பட்டாலும், காக்கை குருவி அணிலுக்கு சமையல் அரிசியை எடுத்துப் போட்டு பாரதியார் மகிழ்வார்.

காந்திஜிக்கு அறிமுகம்:

இவர் எங்கள் தமிழ்நாட்டுத் 'தேசிய கவி' என்று மகாத்மா காந்திக்கு பாரதியாரை அறிமுகப்படுத்தினர் ராஜாஜி. பாரதியார் காலமான பிறகு அவரது பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மகாத்மா காந்தி நடத்தி வந்த 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளியிட்ட பெருமையும் ராஜாஜிக்கு உண்டு.

விளக்கெண்ணெய்ச் செட்டியார்:

பாரதியார் புதுச்சேரியில் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரரை, விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்று பாரதியார் அன்புடன் அழைப்பார். அவர் மிகவும் பொறுமைசாலி. வாடகை கேட்க பயபக்தியுடன் நுழைவார். வாய் திறந்து கேட்க மாட்டார். பணம் இருந்து பாரதி கொடுத்தால் வாங்கிக் கொள்வார். இல்லையென்ருல், பாரதியார் பாடிக் கொண்டிருப்பதைச் சிறிது நேரம் கேட்டுவிட்டுச் சந்தடியின்றிப் போய்விடுவார். கண்டிப்பு தெரியாத காரணத்துக்கே பாரதியார் இவரை 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அழைத்தார்.

பாரதியாரும் யானையும்:

பாரதியார் காலமானபோது அவருக்கு வயது 39 நிரம்பவில்லை. 38 வயதும் 4 மாதங்களுமே ஆகியிருந்தன. அவரைக் கீழே தள்ளிய திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானைக்கு வயது 40. அதன் பெயர் அர்ஜுனன். பாரதியாரைக் கீழே தள்ளிய இரண்டு ஆண்டுகளில் அதுவும் இறந்துவிட்டது.

— ஆதாரம்; ரா. அ. பத்மநாபனின் 'சித்திர பாரதி' என்ற நூல்.
வெளியிட்டோர்: பாரதியார் சங்கம், சென்னை—86.



மு.மு.மு. அருமையான கதை

* 'அக்கினி பூதம்' கதை கதையளவில் முற்றும். ஆனால், எங்கள் நெஞ்சங்களில் என்றும் தொடரும்.

— ரா. கோபிநாதன் (10732), பெரியகுளம்.

* அக்கினி பூதம் அருமை. மிகவும் அருமை. சிறுவர்கள் செய்யும் வீர விளையாட்டுகளெல்லாம் கோழைகளுக்கு நல்ல பாடம் புகட்டுகின்றன.

— செ. முரளி (12466), மயிலாடுதுறை.

* 'அக்கினி பூதம்' தொடர்கதை முழுவதையும் சேர்த்து, 'கோகுலம்' என்று அட்டையில் ஒட்டி நூலகத்தில் வைத்துள்ளேன்.

— எம்.ஏ. சுப்பிரமணியன், முருகன்புதூர்.

* 9 மாதங்களாக 'அக்கினி பூதம்' எங்களை மகிழ்ச்சி, வியப்பு, திகில் ஆகியவற்றில் ஆழ்த்தியது. அரைக்கால் சட்டை வீரர்களை அப்படியே மலையில் 'அம்போ' என்று விட்டு விடாமல், அவர்களை மீண்டும் தமிழோங்கிபுரத்துக்கு அழைத்து வந்து அரசாங்கத்திடம் முனியாண்டித் தாத்தா கூறியதைக் கூறி அவர்களுக்குப் பரிசு வாங்கிக் கொடுத்திருக்கலாம். திரு தங்கமணி எங்கள் அபிமான எழுத்தாளராகிவிட்டார்.

— டி. சாவித்திரி (554), பழனி.

* சிறு வயதிலே, தாய் தற்கொலை செய்து கொண்டதால், தாயின் அன்பைப் பெற முடியாமல் போன பெ. தூரன் அவர்களின் 'குழந்தைப் பருவம்' என் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது.

— ஜி. லட்சுமணன் (12858), சென்னை—19.

* என் தந்தையின் குழந்தைப் பருவம் பற்றிய கட்டுரையைப் படித்தேன். அவர்கள் சொல்ல, அதைக் கேட்டு, தாங்கள் எழுதியிருப்பீர்கள். மிக அழகுபட இருந்தது. என் இதயங்கனிந்த நன்றி.

— விஜயவல்லி மாரிமுத்து, வெள்ளாளபாளையம்.

* 'ஓர் அற்புதம் நடந்தது' என்ற பேரளம் புகழ்மதியின் கதையைப் படித்தவுடன் பிரமித்து மெய்சிலிர்த்தேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் படித்த புனிதமான கதை இது.

— பானுமதி கோபாலகிருஷ்ணன், காரைக்கால்.

* 'முத்துவின் முத்தான முடிவு' கதையில் முத்து நம் நாட்டுக்காக எடுக்கும் முடிவு என் மனத்தை நெகிழச் செய்தது.

— வி. அறிவழகன் (13339), மன்னார்குடி.

* நாட்டுப்பற்றை வளர்க்கும் அருமையான கதை — முத்துவின் முத்தான முடிவு.

— கே. ஆர். ராமசாமி (8998), காரைக்குடி.

* கல்வியின் பயன் பற்றி ஜெகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறிய கருத்துக்கள் ஒவ்வொன்றும் கருத்தாழத்துடன் அமைந்து சிந்திக்க வைத்தது!

— பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்.

* சின்னஞ்சிறு குழந்தைகளின் கவிதைத் திறனையும் கதை எழுதும் திறனையும் வளர்க்கும் பத்திரிகையாக 'கோகுலம்' திகழ்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு பக்கமும் மாணவர்களின் அறிவு வளர்வதாகவே அமைந்துள்ளது.

— வி. பட்டாபிராமன், ஆசிரியர், ஓமகுப்பம்.

* சென்ற இதழில் தாங்கள் கூறியுள்ள அறிவுரைப்படி குழந்தைகளுக்குத் தனியாக நூலகம் அமைப்பது சம்பந்தமாக திண்டுக்கல் நகரசபைத் தலைவர் அவர்களை அணுகியுள்ளேன். நல்ல பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

— எஸ்.பி. மணிகண்டன் (12747), திண்டுக்கல்.

* 'கடவுளுக்கு நன்றி' கதையைப் படித்து என் சோம்பேறித்தனத்தை விட்டொழித்தேன். 'அக்கினி பூதம்' இவ்வளவு விரைவில் முடியும் என்று எதிர்பார்க்கவில்லை.

— கி. இராமு, அம்மாப்பேட்டை.

* கவியரசன் காளிதாசன் என்ற கதையைப் படித்தேன். ஒவ்வொரு படத்திலும், ஒவ்வோர் எழுத்திலும் உயிர் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

— சி. எல். சரவணன் (706), மதுரை—1.

* 'அளகேசனும் அற்புதபூதமும்' கதையில் வரும் பூதம் போல் நம் வீட்டிலும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

— என். சுந்தர்ராஜன் (9049), சிங்காரப்பேட்டை.

* 'துப்பறியும் டைகர்' மிகவும் அருமை.

— சிவ. வசந்த் (13229), புதுக்கோட்டை.

* பனிக்கட்டி எளிதில் உருகிவிடும். அதை விட எளிதில் உருகும் நம் மனம் — புரியவில்லையா? 'நண்பனின் தம்பி' கதையைப் படித்திருந்தால் புரியும்.

— எம். எஸ். சுரேஷ் (7005), சென்னை—7.

கோகுலம்

சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3786 ஜோ. சுபின் பெர்மிருபின், 'ரூபின்' 1—67 ஏ, மார்த்தாண்டம்—629 165, குமரி மாவட்டம்.

3787 **T. Arun 733, Lakshmibai Nagar, New Delhi-110 023.**

3788 கே. ஷோபா, 5, கோமுட்டி தெரு, அரியலூர்—621 704.

3789 க. கோகிலவாணி, த/பெ. மா. கணபதி, ஆசிரியர், பழையனூர், சங்கமங்கலம் அஞ்சல், நாகை வட்டம்—611 108.

3790 செ. சித்தார்த்தன். 18 ஏ, திருமலைசாமிபுரம், திண்டுக்கல்.

3791 பி. பாபு, த/பெ. டி.கே. பாலகிருஷ்ணன், போஸ்டல் டிபார்ட்மெண்ட், சின்ன மனூர் 626 515.

3792 என். ஆர். மணிகண்டன், 9, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர், திருச்சி மாவட்டம் 621 207.

3793 எல். போஸ்கோ வாஸ், த/பெ.-எம். கே. லாரன்ஸ் வாஸ், ரயில்வே பீடர் ரோடு, தங்கச்சிமடம், இராமநாதபுர மாவட்டம்.

3794 எஸ். சோபனா, த/பெ. எஸ். சங்கர நாராயணன், வரதராஜபுரம் போஸ்ட், தொட்டியம், திருச்சி மாவட்டம்.

3795 தி. வாசு, 64, ஆத்துக்கடைத் தெரு, திருவல்லிபுத்தூர்—626 125.

3796 கே. ஸ்ரீராம், 5, கோமுட்டி தெரு, அரியலூர், திருச்சி மாவட்டம், 621 704.

3797 லெ. வள்ளிக்கண்ணு, 29, மு.தெ. வீதி, கோட்டையூர் அஞ்சல், இராமநாதபுர மாவட்டம், 623 106.

3798 கே. அனிதா, 11, பட்டேல் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை—33.

3799 ஆர். சாய்ராம், பி—30, ஏ/2, டாக்டர்ஸ் காலனி, மதுரை—2.

3800 ம. நன்னில வேலன், தா/பெ. பி. மேனகா ராஜீவி, மகப்பேறு உதவியாளர், இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி, சிங்காநல்லூர், கோவை 641 015.

3801 பா. லெட்சுமி, 1 தருமகோயில் தெரு, நாகப்பட்டினம்.

3802 கு. மாலதி, 213, வேலாயுதம் நகர், ஜெயங்கொண்டம் 621 802.

3803 என். சந்தோஷ் குமார், 17, சடையப்ப தேவர் வீதி, கணேசபுரம், இராமநாதபுரம் 641 045

3804 பி. ஆவுடையப்பன், த/பெ. பண்டார சிவன் பிள்ளை, மாஜி பிரசிடெண்ட், கிழக்குத் தெரு, ராதாபுரம் 627 111

3805 வீ. மனோகர், 43, தென்மேற்கு போக்ரோடு, தி. நகர், மதராஸ்—17.

3806 ஆர். சந்திரசேகர், 75—எஃப், சிங்கராயர் காலனி வடக்குத் தெரு, மதுரை—2.

3807 மு. பார்மணி த/பெ. மூதூர் முருகேசன், பாரப்பட்டி, காஞ்சரம்பேட்டை அஞ்சல், மதுரை—14.

3808 எம். முருகேசன், த/பெ. கே. மெட்டையன், கார்பெண்டர், கே.சி.சி. கம்பெனி, பெலத்தூர் (அஞ்சல்), ஓசூர் தாலுகா, தர்மபுரி மாவட்டம்.

3809 ஜெ.வினோத்குமார்,8 எ/8,ஏகாம்பரம்தெரு,வேதாசலநகர்,செங்கல்பட்டு—603001

3810 எஸ். கண்ணன், 6, கம்பட்ட விஸ்வநாதர் சன்னதி, கும்பகோணம்.

3811 என். ஹரிணி, சி 3/23, எஃப், பெல் ட்வுன்ஷிப், திருச்சிராப்பள்ளி.

3812 எ. பருவதலக்ஷ்மி, 105, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம்—626 501

3813 **K. Krishnakumar, Plot No. 5, Lalitha Nagar, Jamai Usmania, Hyderabad-500 044.**

3814 என். கிருஷ்ணா, 2, 2வது கிராஸ் தெரு, கண்ணன் நகர், சென்னை—91.

3815 ஹரிஹரகிருஷ்ணன், த/பெ. டி.பி. சுப்பிரமணிய நாடார், டி.பி.எஸ். ஆயில் மில்ஸ், ஆலங்குளம், தென்காசி தாலுகா—627 851.

3816 ஜி.கே. விஜயமுத்து, 9, 'ஐ' பிளாக், வாரன் ரோடு, சென்னை—4.

3817 ஆர். அகிலன், 88, தெற்கு இராமலிங்க நகர், வயலூர் ரோடு, திருச்சி—620 017.

3818 பி. ஆனந்த், 47, ராமலிங்க நகர், சவுத் எக்ஸ்டென்ஷன், வயலூர் ரோடு, திருச்சி—17

3819 எஸ். மகேந்திரன், 18, பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

3820 சு. லலிதா, 8, சஞ்சீவ ராவ் சந்து, சின்னக் கடைத் தெரு, திருச்சி—8.

3821 தி. சுந்தரராமன், 147/5, டி.எஸ்.ஆர். பெரிய தெரு, கும்பகோணம்—612 001.


3822 க. முருகானந்தம், 132, மூன்றாம் தெரு, கருணாவதி நகர், போஸ்டல் காலனி அஞ்சல், தஞ்சாவூர்—613 006.


3823 அ. முகமது இஸ்மாயில், 42, மெயின் ரோடு, திருப்பாலைத்துரை, பாபநாசம், தஞ்சை மாவட்டம்—614 205.

3824 என். ராதிகா, 44, நடுத் தெரு, மைலாப்பூர், சென்னை—600 004.
3825 ஏ. லாரன்ஸ், த/பெ. ஜெ. அற்புதம், டிரைவர், தேவகி ஷெட் எதிர்ப்புறம், துறையூர் ரோடு, பெரம்பலூர், திருச்சி மாவட்டம்.
3826 சு. சோமசுந்தரம், சி—7, ராமசாமி ராஜா நகர்.
3827 எஸ். முத்துவேல், த/பெ. எம். சங்கரலிங்கம், அரசினர் உயர்நிலைப் பள்ளி, செந்துறை அஞ்சல், மதுரை மாவட்டம்—624 403.
3828 ந. அருள்மொழி, த/பெ. கே.எம். நடராஜன்,.பலசரக்கு மளிகை, மெயின் பஜார், பேரையூர் அஞ்சல், மதுரை மாவட்டம்.
3829 கெ. விஜயா, 18, கோனூர்பேட்டை சந்து, பாளையங்கோட்டை.
3830 எல். லலிதா! 64, தேர்முட்டி சந்து, கீழ ஆண்டார் வீதி, திருச்சி—620 002.
3831 எஸ். கற்பகம், 4, ஜவஹர் குறுக்குத் தெரு, காந்தி நகர், மதுரை—625 020.
3832 எஸ். வெங்கடேசன், 4, ஜவஹர் குறுக்குத் தெரு, காந்தி நகர், மதுரை—625 020.
3833 ரா. விஜயஸ்ரீ, 6/1600, பச்சண்ணைச் சந்து, மேலவீதி, தஞ்சாவூர்—613 009.
3834 பி. ஜெயஸ்ரீ, 58, மாசிலாமணி தெரு, வேலூர்—632 001.
3835 சு. செந்தாமரை, 23—ஏ, 'இ' பிளாக், II தெரு, அண்ணாநகர், சென்னை—600040.
3836 ஏ. சுப்பிரமணியன், 64/சி, நாடிமுத்து நகர், பட்டுக்கோட்டை.
3837 ரா.தி. அகிலா, 6/72, பெருமாள் கோயில் தெரு, காளையார் கோயில், சிவகங்கை தாலுகா, ராமநாதபுரம் மாவட்டம்—623 551.
3838 **V. Balaji, 33-153, Shakti Nagar, Ramakrishnapuram (P.O.), Secunderabad-500 556.**
3839 பி. ரவிச்சந்திரன், 22—டி, எம்.டி.எச். ரோடு, வில்லிவாக்கம், சென்னை—49.
3840 க. பாலமுருகன், 2/25, தென்நடு வீதி, வாரியங்காவல் (அஞ்சல்), உடையார் பாளையம் தாலுகா, திருச்சி மாவட்டம்—621 806.
3841 க.சா. புருசோத்தமன், 12, சுப்ரமண்ய சுவாமி கோவில் தெரு, கிருட்டிணகிரி.
3842 கே. விஜயகுமார், 5—டி, பவர் ஹவுஸ் காலனி, கிருஷ்ணகிரி.
3843 கே. சீனிவாசன், 44, எஸ்.ஓ. குவார்ட்டர்ஸ், மேட்டூர் அணை—636 401.
3844 வே. வெங்கடராமானுஜ மாதவி, 42, இல்லை மேஸ்திரி வீதி, புதுச்சேரி—605001.
3845 வி. மாலதி, 2, ஏ, நடு அக்ரஹாரம், அரியலூர்—621 704, திருச்சி மாவட்டம்.
3846 ஏ. அப்துல் மாலிக், சூபூர் தெரு, நெய்வேலி ரோடு, வடலூர்.
3847 வி. பாலமுருகன், 10, பெரிய கிணற்றுத் தெரு, விருது நகர்—626 001.
3848 எஸ். முரளி, 23, இந்திரா நகர், பொள்ளாச்சி—642 002.
3849 பி. அருண் வைத்தீஸ்வரன், 29, வேம்புலியம்மன் கோயில் தெரு, பழவந்தாங்கல், சென்னை—61.
3850 எஸ். பாலசுப்பிரமணியம், 6, 5 வது தெரு, ஜெய்நகர், அரும்பாக்கம், சென்னை—106.
3851 சி.வி. ஈஸ்வர், 18, ஆ.ச. கோயில் தெரு, 3 வது சந்து, எல்.ஐ.ஜி. காலனி, சென்னை—81.
3852 கோ. ராதிகா, எம்.அய்.ஜி. பிளாட், 4, பிளாக் 4, பத்தாவது அவென்யூ, அசோக் நகர், சென்னை—83.
3853 க. நாகராஜன், கதவு எண்: 65, நெசவாளர் காலனி, பி.என். ரோடு, திருப்பூர்—2.
3854 வி.எஸ். பாலஸுப்ரமணியன், 2/257, ரத்தினம் பிள்ளை காலனி, புதூர், ஒரத்த நாடு—614 625.
3855 சொ. இராமசாமி, 30, ரங்கநாதன் சாலை, அண்ணாமலைநகர்—608 002.
3856 **S. Mahesh, 242, 67th Cross V Block, Rajaji Nagar, Bangalore-560 010.**
3857 **G. ஸ்ரீவித்யா, D/o. N. Ganesan, Stanmore Group Office, Monica Estate, Valparai (p.O.) (Via Pollachi**
3858 கே. பாலசந்தர், C—75, இந்து காலனி, நங்கைநல்லூர், சென்னை—61.
3859 **A.R. Subramanian, 46, East Park Road, 17th Cross, Malleswaram, Bangalore-560 055.**
3860 சு. இராமச்சந்திரன், தண்ணீர் பந்தல் தோட்டம், வெள்ளமடை (அஞ்சல்)
3861 கே. சரவணன், 15 டி, கே.எஸ்.கே. இல்லம், நரசிம்ம நகர், செய்யாறு. (வ.ஆ.)
3862 ஓ. சாரதா தேவி, 18 ஏ, கூத்தரிசிக்காரத் தெரு, கரூர்—639 001.
3863 ஏ.பி.எம். முரளிதரன், 3/41, அண்ணா அருள்கம், பழனியப்பா நகர், செய்யாறு—604 407.
3864 பொ. செல்வி, கீரணி அம்மாள் மரக்கடை, ஆத்தங்குடி—623 101.
3865 **B. Arul Murugan, R 14/42, New Raj Nagar, Ghaziabad-201 001.**
3866 பி. கார்த்திகேயன், த/பெ. பொதுக்குட்டி நாடார், கோம்பவிளை, அகஸ்தீஸ்வரம் அஞ்சல், குமரி மாவட்டம்—629 701.
3867 எஸ்.பி. நித்யர், த/பெ. சங்கு வர்ணப் பெருமாள் நாடார், முகிலன் குடியிருப்பு, அகஸ்தீஸ்வரம்—629 701.
3868 இரா. ரமேஷ்பாண்டி, 30, ஆசாரிமார் தெரு, அருப்புக்கோட்டை—626 101.
3869 ச.ப. சங்கர், 15, ஸ்டேட் பேங்க் 3 வது காலனி, தாகூர் நகர், எஸ்.எஸ். காலனி, மதுரை—16.


(இன்னும் வரும்)


பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் சந்தோஷமாக வாழ்ந்த நாட்கள்... அர்ஜுனன் ஒரு சமயம் தீர்த்த யாத்திரை கிளம்பினான்.
சென்று வா சகோதரா!
இமயத்தில் தொடங்கி தென்னாடெங்கும் சுற்றிய அர்ஜுனன்...
இப்படியே மேற்குக் கடற்கரையோரமாக வடக்கே செல்வேன்.
பிரபாஸ தீர்த்தத்தை அடைந்து குளித்து இளைப்பாறினான் வில் விஜயன்...
துவாரகை அருகே வந்துவிட்டேன். கண்ணனைக் காணாமல் போவதா?...
அர்ஜுனன் மகன்
அபிமன்யு
கதை: ஆனந்தி படம்: விஜு
அத்துடன் சுபத்திரையைக் காணவும் சந்தர்ப்பம் கிடைக்குமானால்... நினைக்கவே இனிக்கிறதே...!
துறவிக் காவி ஆடை அணிந்தான் அர்ஜுனன். ஜடா மகுடதாரியாய் ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தான்.
அடாடா! மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறதே!


துவாரகையில் கண்ணன் சிரித்தான். அருகில் சத்யபாமா...
சுவாமி! என்ன இது? எதற்குச் சிரிக்கிறீர்கள்...?
கொட்டும் மழையில் அர்ஜுனன் காவி உடை தரித்து ஆலமரத் தடியில் உட்கார்ந்திருப்பதை நினைத்துத் தான்!
என்னைச் சந்திப்பதில் அவனுக்கு என்ன கஷ்டம்! என் தங்கை சுபத்திரையைக் காணத்தான் அந்தக் கோலம்!
வேடிக்கைதான்! ஏன் உங்களைக் காண அவர் தவமிருக்க வேண்டுமா என்ன?
சுவாமி! போய் அழைத்து வாருங்கள், பாவம்!
அர்ஜுனன் இருக்குமிடத்தைக் கண்ணன் அடைந்து...
யார் அர்ஜுனா! அடையாளமே தெரியவில்லையே!
கண்ணா! இருட்டையும் மழையையும் பொருட்படுத்தாமல் என்னை அழைத்துப் போக வந்தாயா!...
...எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி நான்!
அது சரி தலயாத்திரை உன்னைத் துறவியாகவே மாற்றிவிட்டதே...




நான் என்னவோ என் தங்கை சுபத்திரையை உனக்குக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தேன்...
கண்ணா! உனக்குத் தெரியாததா? .. சுபத்திரையைக் காணத் தான் வேஷம் பூண்டேன்!
ஓஹோ!
கண்ணன் யோசனைப்படி வேடதாரி அர்ஜுனன் கோவில் பிராகாரத்தில் ஒரு மேடையில் அமர்ந்திருக்க...
அண்ணா! கோவிலை வலம் வருவோமா?
உம்.. உம்...
அதோ முன்னால் வருகிற அந்தப் பெண்தான் சுபத்திரையாக இருக்க வேண்டும்.... என்னை விரும்புவாளா?
சந்நியாசியை நெருங்கியதும் பலராமர்...
சுவாமி! எந்த ஊர்? தங்கள் தேவைகளைக் கட்டளையிடுங்கள்!
கால்நடையாகத் தேசம் முழுதும் சுற்றி வந்தேன். இந்த மழைக் காலத்துக்கு மட்டும் தங்க இடம் தந்தால் போதும்.
கண்ணா! சுபத்திரையின் நந்தவனத்தில் ஒரு குடில் இருக்கிறதே, அங்கு இவர் தங்கலாம்! சுபத்திரை பணிவிடை செய்வாள்.


கண்ணன் கள்ளத்தன மாகச் சிரித்து ரகசிய மாக...
அண்ணா! இது சரியா? இந்த இளைஞரைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாதே... சுபத்திரையின் நந்தவனத்திலா.....
பெரியவர்களை நிந்திக்காதே! சொன்னதைச் செய்!
தன் யுக்தி பலித்ததைக் கண்டு மகிழ்ந்த கண்ணன், அர்ஜுனனுடன் அந்தப்புரத்தை அடைந்தான்....
ருக்மிணி! சத்யபாமா! வந்திருப்பது யார் பாருங்கள்!
அடையாளமே தெரியவில்லையே!
சத்யபாமா அர்ஜுனனைக் கலங்க அடித்தாள்...
சுபத்திரைக்கு அதிர்ஷ்டம் தான். துரியோதனன் பெண் கேட்டு அனுப்பியிருக்கிறார். இவர் அண்ணா பலராமருக்கும் சம்மதம் தான்!
கண்ணன் அர்ஜுனனுடன் நந்தவனத்தை அடைந்து...
கவலைப்படாதே. என் தங்கை உன்னை விரும்பினால் அவள் உனக்குத்தான். இந்தக் குடிலில் தங்கியிரு. பிறகு சந்திக்கிறேன்.
அதிதியாக வந்த துறவிக்குப் பணிவிடை செய்ய வந்தாள் சுபத்திரை....
சுவாமி! நமஸ்கரிக்கிறேன்.
உனக்கு அர்ஜுனன் போன்ற கணவன் வருவான்!


மகிழ்ச்சியில் சுபத்திரைக்கு மெய்சிலிர்த்தது...
சுவாமி! தாங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா?
ஓ! மாவீரன்! பேரழகன்! ...ஒருவேளை அவனையே கூட நீ மணாளனாக அடையலாம்!
அவர் தீர்த்தயாத்திரை போயிருப்பதாக அண்ணா சொன்னார்?
அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். ஒருவேளை இங்கு வரக்கூடும்!
ஒரு நாள் அர்ஜுனன் ஸ்நானம் செய்துவிட்டு வரும் போது...
ஆ! இரண்டு தோள்களிலும் வில் தழும்புகள். இவர் அர்ஜுனனே தான்!
அன்று மாலை...
சுபத்திரா! உனக்கு உடம்பு சரியில்லை என்றாயே... போய்ப் படுத்துக் கொள்... சந்நியாசிக்கு ருக்மிணி பணிவிடை செய்வாள்!
சுபத்திரைக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் கண்ணனின் கட்டளையை உடனே ஏற்றாள்... அவள் போனதும்...
நாங்கள் எல்லோரும் நாளை சிவ பெருமானுக்கு விழா நடத்த அருகிலுள்ள தீவுக்குப் போகிறோம். இனி உன்பாடு... சுபத்திரை பாடு!


என்னுடைய தேரை இங்கே விட்டுப் போகிறேன்.
சுபத்திரை மிக சாமர்த்தியமாகத் தேர் ஓட்டுவாள்!
கண்ணா! உனக்கு எப்படி நான் நன்றி கூறுவேன்!
கண்ணன் சுபத்திரையைத் தனிமையில் சந்தித்து....
அண்ணா! இதெல்லாம் என்ன நாடகம்?
எல்லாம் உன்னைத் துரியோதனனிடமிருந்து காப்பாற்றி அர்ஜுனனிடம் ஒப்படைக்கத்தான்!
பலராமன் அண்ணாவுக்குத் தெரிந்தால்....?
...அர்ஜுனன் சந்நியாசி வேடம் பூண்டிருக்கிறான்... நாங்கள் விழாவுக்காக வேறிடம் செல்கிறோம்... இந்தச் சமயம் பார்த்து உனக்கும் உடம்பு சரியில்லாமல் இருக்கிறது... எங்களுடன் நீ வர முடியாது...! புரிகிறதா...?
அவரை உத்தேசித்துத் தானே இந்த நாடகமெல்லாம்? அவர் உன்னை துரியோதனனுக்கு மணமுடித்துக் கொடுக்க விரும்புகிறார். எனவேதான்....
பலராமன் அண்ணாவை நினைத்தால்தான் பயமாயிருக்கிறது...
அவரை நான் சமாதானப் படுத்தி விடுவேன்; நீ அர்ஜுனன் சொல்கிறபடி செய்!


கண்ணன் பலராமன் முதலான அனைவரும் சிவன் விழா வுக்காகச் சென்று விட்டனர்...
சுபத்திரா! உன்னை உயிரினும் மேலாக நேசிக்கிறேன். உன்னை இந்திரப்பிரஸ்தம் அழைத்துப் போக ஆசைப்படுகிறேன். கண்ணனின் ஆசிகள் நமக்குண்டு.
உங்கள் விருப்பம் என் பாக்கியம்.
அர்ஜுனன் கட்டளைப்படி சுபத்திரை கண்ணனின் தேரைத் தயார் செய்தாள். அது நூதன அமைப்பு கொண்டது.
என் செல்லக் குதிரைகளே! பலராம அண்ணாவின் கோபத்திலிருந்து நீங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்!
சந்நியாசி உடையைக் களைந்து விட்டுப் பட்டுப் பீதாம்பரங்களுடன் வந்தான் அர்ஜுனன்...
சுபத்திரா! தேரை நீ ஓட்டு! நம்மைப் பின்தொடர்ந்து யாராவது வந்தால் என் காண்டீபம் சித்தமாயிருக்கும்!
கோட்டை வாசலைத் தாண்டி ரதம் வெகு வேகமாகச் செல்ல...
மோசம் போனோம்! இளவரசி தான் அது!
கூடச் செல்வது அர்ஜுனன் போலிருக்கிறதே!
பலராமனுக்குச் செய்தி எட்ட...
அக்கிரமம்! சந்நியாசி வேடத்தில் வந்த அர்ஜுனன் சுபத்திரையைக் கடத்திக் கொண்டு போய் விட்டானமே!
என் ரதத்தையும் அருமைக் குதிரைகளையும் கூடக் கடத்திக் கொண்டு போய் விட்டானாம்!



கிருஷ்ணா! இது உனக்குத் தெரியாமல் நடந்திருக்காது! ஏன் அனுமதித்தாய்!
ஆம் என் தவறு தான்! அதனால் நானே அர்ஜுனனுக்குப் பாடம் கற்பிக்கிறேன்! ... கொண்டு வாருங்கள் என் ரதத்தை! எடுத்து வாருங்கள் கதையை!
அண்ணா! நான் ஆரம்பத்திலேயே எச்சரித்தேன்... இளம் வயது சந்நியாசி... சுபத்திரையின் நந்தவனக் குடிலில் தங்குவதா? சுபத்திரை பணிவிடை செய்வதா? என்று... நீங்கள் கேட்கவில்லை...
பலராமரின் ரதங்கள் வாயு வேகமாக அர்ஜுனனைப் பிடிக்கப் பறந்தன...
அண்ணா! கொஞ்சம் யோசியுங்கள்! நம் தங்கை சாரத்தியம் செய்கிறாள்.. அதனால் அவர்களை உங்களால் பிடிக்க முடியாது... மேலும்....
...சுபத்திரை தானே தேரோட்டிச் சென்றாள் என்றால் என்ன அர்த்தம்? விரும்பிப் போயிருக்கிறாள் என்று தானே...? நம் தங்கைக்கு நல்ல கணவன் கிடைத்திருக்கிறான். ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்?
உன் சூழ்ச்சி தான் இது! துரியோதனனுக்கு நான் என்ன பதில் சொல்வது?
சுபத்திரையின் மனம் விரும்பிய மணாளன் அமைந்ததாகக் கூறி கல்யாணத்துக்கு அழைப்பிதழ் அனுப்ப வேண்டியது தான்!


துவாரகையிலிருந்து பலராமர், கிருஷ்ணர் முதலிய அனைவரும் இந்திரப்பிரஸ்தம் வந்திருந்து சுபத்திரைக்கும் அர்ஜுனனுக்கும் அற்புதமாகத் திருமணம் நடத்தி வைத்தார்கள்.
ஆண்டுகள் சென்றன... சுபத்திரைக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது...
இவனுக்கு அபிமன்யு என்று பெயர் சூட்டுவோம்!
கண்ணன் வந்தான்...
மாவீரனின் பத்தினியாகிய நீ, இன்று ஒரு மாவீரனுக்குத் தாயும் ஆகிவிட்டாய்! உலகம் உள்ளளவும் அபிமன்யுவின் பெயர் நிலைத்திருக்கும்!
சகுனியின் சூதினால் பாண்டவர்கள் நாடு இழந்து வனவாசம் மேற்கொண்டனர்... சுபத்திரை அபிமன்யுவைச் சூரப்புலியாக வளர்த்தாள்...
நெஞ்சை நிமிர்த்தி... விழிகளைக் கூர்மையாக்கி... காதுவரை நாணை இழுத்து....


அட! வாட்போரிலும் வல்லவனாகி விட்டாயே!
இளம் வயதிலேயே அபிமன்யு அறிவாற்றலிலும் போர்த்திறனிலும் தந்தைக்கு நிகரானான்.
ஒரு நாள்...
அம்மா அப்பா எப்போ வருவார்?
கண்ணே! அவர் வனவாசம் சென்றிருக்கிறார். தவமிருந்து வரங்களைப் பெற்று வருவார்!
சில காலம் சென்று பலராமர் பரபரப்புடன் வந்து...
சுபத்திரா! பாண்டவர்கள் விராட தேசத்தில் இருக்கிறார்களாம்! உடனே புறப்படு! அபிமன்யுவும் உடன் வருகிறான்!
விராட மன்னன் மகளை அபிமன்யுவுக்கு மணம் பேசியிருக்கிறார்களாம்!



உத்தரைக்கும் அபிமன்யுவுக்கும் விவாகம் மிகச் சிறப்பாக நடந்தது.
பாண்டவர்களே! கௌரவர்களால் இதுவரை நீங்கள் அடைந்த துயரங்களையெல்லாம் இந்த ஆனந்தக் காட்சி மறக்கச் செய்து விடுகிறது, இல்லையா?
கண்ணா! தங்களை நண்பனாகப் பெற்ற எங்களுக்கு என்ன குறை?
கல்யாணத்துக்குப் பிறகு பாண்டவர்கள் யுத்தத்துக்குத் தயாரானார்கள்....
அபிமன்யு! இன்று உனக்குப் பத்ம வியூகத்தைப் பிளக்கும் முறையைக் கற்றுத் தருகிறேன்....
அரசனை மத்தியில் வைத்து எந்தப் பக்கமும் அவனை எதிரி அணுகமுடியாமல் சிவந்த ஆடைகளை அணிந்த வீரர்கள் தாமரை மலரின் இதழ்களைப்போல் சுற்றி நின்று காப்பார்கள்...
அர்ஜுனன் அபிமன்யுவுக்குச் செயல்முறையிலும் பத்ம வியூகம் பற்றி கற்றுக் கொடுக்கத் தொடங்கினான்...


அப்போது.....
பிரபோ! ஹஸ்தினாபுரத்திலிருந்து தூதர்கள் வந்திருக்கிறார்கள்! தருமர் உங்களை அவசரமாக அழைக்கிறார்!
அபிமன்யு! பத்ம வியூகத்துக்குள் புகும் முறையைக் கற்றுக் கொண்டாய்... வெளியேறும் வழியைப் பிறகு கற்றுத் தருகிறேன்!
குருக்ஷேத்திரத்தில் பஞ்ச பாண்டவர்கள் கௌரவர்களை எதிர்த்துத் தர்மயுத்தம் செய்தனர். கண்ணன் பார்த்தனுக்குச் சாரதியாகி பாண்டவருக்கு உதவினர்.
பதின்மூன்றாம் நாள் போரில் துரோணர் கௌரவ சேனையைப் பத்ம வியூகமாக வகுத்தார்.
துரியோதனா! கவலைப் படாதே! எனது பத்ம வியூகத்தைப் பாண்டவரால் தகர்க்க முடியாது!
தருமரைக் கவலை சூழ்ந்தது...
பீமா! அர்ஜுனன் சம்சப்தகர்களுடன் போரிடப் போயிருக்கிறான். இந்தச் சமயம் பார்த்து துரோணர் பத்ம வியூகம் அமைத்திருக்கிறார்... என்ன செய்யப் போகிறோம்?


அண்ணா! எப்படியாவது வியூகத்தின் மத்தியில் இருக்கும் துரியோதனனை அணுகி அவனை வெல்வேன்! ஆசீர்வாதம் செய்யுங்கள்!
பீமன் தலைமையில் பாண்டவர்களும் அவர்களின் நண்பர்களான பல அரசர்களும் கடுமையாகப் போரிட்டனர். ஆனாலும் துரோணரை வெல்ல முடியவில்லை... வியூகத்தை உடைக்க முடியவில்லை.
தருமர் அபிமன்யுவை அழைத்து...
குலக்கொழுந்தே! பத்ம வியூகத்தைப் பிளக்கும் ஆற்றல் அர்ஜுனன் இல்லாத இந்த நேரத்தில் உன் ஒருவனிடம்தான் இருக்கிறது.
பத்ம வியூகத்தை உடைத்து முன்னேறக் கற்றுக் கொண்டேன்! வெளிவரும் வித்தையை இன்னும் அப்பா சொல்லித்தரவில்லையே!
கவலைப்படாதே! நீ வியூகத்தைப் பிளந்துவிட்டால் நானும் மற்றவர்களும் உட்புகுந்து எதிரிகளைச் சிதறடித்து விடுவோம்!


அபிமன்யு
தேர் ஏறினான்...
தந்தை
அர்ஜுனரும்
மாமா கிருஷ்ணரும்
பெருமைப்படும்படி
யுத்தம் செய்வேன்!
ஆஹா!
பத்ம வியூகத்தை
உடைத்து அபிமன்யு
பாய்ந்து சென்ற திறமை
கண்டு எதிரிகளே
வியந்தனர்!
அற்புதம்!
வியூகத்தை அபிமன்யு தகர்த்த
இடத்தைக் கௌரவர் பக்கம்
இருந்த ஜயத்ரதன் என்ற அரசன்
தன் படைகள் கொண்டு
வளைத்து மூடி விட்டான்.
அர்ஜுனா! உன்னைப் பழி வாங்கி
விட்டேன்!
ஜயத்ரதன் கதை...
ஒரு சமயம் அர்ஜுனனால்
தோல்வியடிக்கப் பட்ட
ஜயத்ரதன் அவமானம்
அடைந்து கடுந்தவம் புரிந்தான்..
சிவபெருமான்
பிரத்யட்சமாக...
பகவானே! நான் தனியே நின்றாலும் பாண்ட
வர்களை வெல்லும் சக்தியை அளிக்க வேண்டும்.
அர்ஜுனனைத் தவிர மற்றவர்களைத் தடுத்து
நிறுத்தும் ஆற்றலை உனக்களித்தேன்!


ஜயத்ரதன் அர்ஜுனனைப் பழிவாங்க சந்தர்ப்பம் பார்த்திருந்தான்....
உடைந்த வியூகத்தை மூடி விட்டேன். அர்ஜுனன் மகனைப் பின் தொடர முடியாமல் பாண்டவரைத் தடுப்பேன்! ஹ..ஹ... ஹா....
பாண்டவர்கள் உக்கிரமாகப் போரிட்டுப் பார்த்தனர். ஆனால் பயனில்லை. வரம் பெற்று நின்ற ஜயத்ரதனை வெல்ல முடியவில்லை.
பாண்டவர் மனம் பதைத்தது...
அண்ணா! மோசம் போய் விட்டோம். பதினாறு வயது பாலகனைத் தனியாக அனுப்பி விட்டோமே!
வியூகத்தினுள் சிக்கிய அபிமன்யு வீரத்துடன் போரிட்டு துரியோதனனின் மகனைக் கொன்றான். துச்சாதனன் தோற்றோடினான்.
என்னை யாரென்று நினைத்தாய்! அர்ஜுனன் மகனடா நான்!
வெற்றிமேல் வெற்றி பெற்றான் அபிமன்யு. ஆனாலும் தனி ஒருவனாகப் போரிட்டதில் களைத்தான். கவலையும் சூழ்ந்தது....
ஏன் அவர்கள் என்னைத் தொடர்ந்து வரவில்லை? வியூகத்தை விட்டு வெளியேற என்னால் முடியாதே?
துரோணர், கிருபர், அசுவத்தாமா, கர்ணன் போன்ற மாவீரர்களால் கூட அபிமன்யுவை வெல்ல முடியவில்லை. சகுனி துரியோதனனிடம்....
அபிமன்யுவிடம் கருணை காட்டித் தனித்தனியாகப் போரிடுகிறார்கள். அவ்வாறு இவனை ஜெயிக்க முடியாது. அத்தனை பேரும் சேர்ந்து கொன்றால் தான் உண்டு... உம்... ஆணையிடு!


துரியோதனனின் கட்டளையை ஏற்று... கர்ணன் பின்புறமாகச் சென்று அபிமன்யுவின் வில்லின் நாணை அறுத்தான். துரோணர் அவன் குதிரைகளையும் கிருபர் சாரதியையும் கொன்றனர்...
பின்புறமாகத் தாக்குவது யுத்த தர்மமா?
அதே சமயத்தில் துரோணர் அபிமன்யுவின் வாளை உடைத்தார். கூடவே கர்ணன் அவன் கேடயத்தைச் சிதைத்தான்.
நிராயுதபாணியான அபிமன்யு, தேர்ச் சக்கரத்தை எடுத்துச் சுழற்றினான்...
ஒவ்வொருவராக வாருங்கள்! யுத்தம் செய்கிறேன்!
ஆனால் அவனை ஆறு மகா வீரர்கள் சூழ்ந்து தாக்கினார்கள். தேர்ச் சக்கரம் சுக்கலாயிற்று...
கோழைகள்! கோழைகள்!
இறுதிவரை போராடிக் களைத்து மூர்ச்சித்து விழுந்த அபிமன்யுவின் தலையில் துச்சாதனனின் மகன் கதையால் அடித்து அவனைக் கொன்றான் - செத்த பாம்பை அடித்த சூரனைப் போல!
அர்ஜுனன் திரும்பி வந்து ஜெயத்ரதனைப் பழிவாங்கினான். அபிமன்யுவின் வீரமும் தியாகமும் தர்ம யுத்தத்தில் பாண்டவரின் இறுதி வெற்றிக்கு அடித்தளமிட்டன. வீர மரணத்தினை அடைந்து புகழ் பெற்ற சிரஞ்சீவி அபிமன்யு.

சிறியதும் பெரியதும்

கமுதி அரி



இளந்தமிழன் அம்மாவிடம் பள்ளிக்கூடம்போகமாட்டேன் என்று தகராறு செய்து கொண்டிருந்தான். காரணம், அவன் வைத்திருக்கின்ற பென்சில் மிகவும் சிறியதாக இருக்கிறதாம். மற்ற மாணவர்கள் வைத்திருக்கும் பென்சிலைவிட அவன் வைத்திருக்கின்ற பென்சில் மிகவும் சிறியதானதால் எல்லோரும் 'புழுக்கைப் பென்சில்' என்று கேலி செய்கிறார்களாம்!

''அப்பாவிடம் சொல்லி உனக்குப் பெரிய பென்சில் வாங்கித் தரச் சொல்கிறேன். இப்போ பள்ளிக்கூடம் போ'' என்றாள் அம்மா.

''போகமாட்டேன். புதுப் பென்சில் வாங்கித் தந்தால்தான் போவேன்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் இளந்தமிழன். பாவம், அம்மாவிடம் அப்போதைக்குக் காசு இல்லை என்பதை அவன் அறியவில்லை.

''நீ வரவர பெரிய பிள்ளை இல்லையா? ஆறும் வகுப்பு வேறே படிக்கிறே. பெரிய பிள்ளை மாதிரி நடந்துக்கணும்'' என்று சமாதானப்படுத்தினாள். பெரிய பிள்ளை என்றதுமே இளந்தமிழனின் மனம் குளிர்ந்தது.

''அப்பா வந்ததும் சொல்லி வாங்கித் தரணும்'' என்று சொல்லிக் கொண்டே புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

வழியில்.... தெருக்கோடியில்....

''தம்பீ! கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தருகிறாயா?'' என்றது ஒரு குரல்.

இளந்தமிழன் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒரு முனிவர் உட்கார்ந்து இருந்தார். அவருக்கு இரண்டு கால்களுமே இல்லை. பார்க்கப் பாவமாக இருந்தது. தன் வாட்டர்பேக்கைத் திறந்து தண்ணீர் குடிக்கச் சொன்னான்.

வாட்டர் பேக்கில் உள்ள தண்ணீர் முழுவதையும் குடித்து முடித்தார் முனிவர். அவ்வளவு தாகம் அவருக்கு! குடித்து முடித்த பெரியவர், 'அப்பா, நீ தக்க சமயத்தில் என் தாகம் தீர்த்தாய். இந்தப் பரதேசியிடம் உனக்குக் கொடுப்பதற்கு எந்தப் பொருளும் இல்லை. இருந்தாலும் நீ விளையாட்டுப் பிள்ளையாதலால் விளையாடுவதற்கு ஒரு வரம் தருகிறேன்'' என்றார்.


''வரமா? என்ன அது? சீக்கிரம்.... எனக்குப் பள்ளிக்கு நேரமாகிறது'' என்றான் இளந்தமிழன்.

''நீ ஏதேனும் ஒரு பொருளைக் கையில் எடுத்து அதைப் பெரியதாகவோ, சிறியதாகவோ நினைத்த மாத்திரத்தில் மாற்றிக் கொள்ளலாம். அதுவும் அந்தப் பொருள் உன்னிடம் இருக்கும் வரைதான்! உன்னிடம் இருந்து விடுபட்டு விட்டால், அது சுய உருவம் பெற்று விடும்'' என்று வரம் தந்தார்.

இளந்தமிழனுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி! ''தாத்தா, என் குட்டிப் பென்சிலைப் பெரிதாக்க முடியுமா?'' என்று கேட்டான்.

''ஓ, முடியும்!'' என்றார்.

''ஏரோப்ளேனைச் சிறிதாக்க முடியுமா?'' என்று ஆவலுடன் கேட்டான்



இளந்தமிழன்.

''அதுவும் முடியும். ஆனால் இந்த வரத்தை நீ இரண்டு முறைதான் பயன்படுத்த முடியும்'' என்றார் முனிவர்.

துள்ளிக் குதித்துக் கொண்டு வகுப்பறையினுள் சென்றான் இளந்தமிழன். அப்போது வகுப்பறை மாணவர்களில் சிலர் ''டேய்! புழுக்கைப் பென்சில்காரன் வந்துவிட்டான்டா....'' என்றனர். மாணவர்கள் 'கொல்'லென்று சிரித்தனர்.

இளந்தமிழன் புத்தகப் பையிலிருந்து புழுக்கைப் பென்சிலைக் கையில் எடுத்தான். 'பெரியதாகு' என்றான். அடுத்த விநாடி..... அந்தப் புழுக்கைப் பென்சில் 'ஒட்டடைக் குச்சி' அளவுக்குப் பெரியதாகிவிட்டது! மாணவர்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் வாய் பிளந்து நின்றனர்.

''டேய் இளந்தமிழா! நீ என்ன மந்திரவாதியா?'' என்று கேட்டார் குமார்.

''ஆமாண்டா'' என்று பெருமையோடு தலையாட்டினான் இளந்தமிழன்.

''அப்படியானால் எங்க வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற மடத்திலே ஒரு யானை இருக்கிறது. அதை நீ பொம்மை மாதிரி சிறிதாக்கி விடுவாயா?'' என்று கேட்டான் ரமேஷ்.


ஆசிரியர் வரும் சப்தம் கேட்கவே அனைவரும் அமைதியாயினர். இளந்தமிழன் பெரிதான பென்சிலைக் கீழே போட்டான். அது உடனே சிறிதாகி விட்டது!

மாலை நேரம்.

பள்ளி முடிந்து ரமேஷும் இளந்தமிழனும் ரமேஷ் வீட்டிற்கு அருகில் உள்ள மடத்திற்கு வந்தனர். யானைப் பாகன் எங்கோ வெளியே சென்றிருந்தான். இளந்தமிழன் யானையின் அருகில் சென்றான். அதைத் தொட்டுக் கொண்டே, 'சிறிதாகு' என்றான். யானை அடுத்த விநாடியே விளையாட்டுப் பொம்மையைப் போல் சிறிதாகி விட்டது! இளந்தமிழன் சிறிதான யானையைத் தன் கால் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

''இளந்தமிழா!'' என்று அம்மாவின் அழைப்புக் குரல் கேட்டவுடன் எரிச்சலுடன், ''என்ன அம்மா!'' என்று அம்மாவிடம் சென்றான். ''அப்பா வரும் நேரமாகிவிட்டது. சீக்கிரம் துவையல் அரைக்க வேண்டும். போய் நாலணாவுக்குப் பொரிகடலை வாங்கிட்டு வா'' என்று காசையும் கையில் திணித்தாள் அம்மா.

கடையில் சென்று வாங்கிய பொரிகடலைப் பொட்டலத்தை யானையை வைத்திருந்த கால் சட்டைப் பையினுள்ளேயே போட்டுவிட்டான். வீடு வந்து பார்த்தபோது வெறும் பேப்பர் மட்டுமே இருந்தது. பொரிகடலையை யானை தின்றுவிட்டது! அம்மா திட்டுவார்களே என்ற பயத்துடன் தன்னிடம்



தந்தை: ஏண்டா....! கோபால் நேற்று புதுச் செருப்பு வாங்கிக் கொடுத்தேனே! எங்கே?''

கோபால்: புதுச் செருப்பு கடிக்கும் என்று பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டேன் அப்பா! பழசாகவும் ஒரு மாதம் கழித்துப் போட்டுக்கிறேன்!

— தேனி. எஸ். மாரியப்பன்


உள்ள காசுக்குப் பொரிகடலை வாங்கி விடலாம் என்று மீண்டும் கடைக்குப் புறப்பட்டான் இளந்தமிழன். அப்போது.....

"இளந்தமிழா! மூக்குப் பொடி மட்டை ஒன்று வாங்கி வா" என்று பக்கத்து வீட்டுத் தாத்தா பத்துக் காசைக் கையில் கொடுத்தார்.

மீண்டும் கடைக்குச் சென்ற இளந்தமிழன் தான் வாங்கிய பொரி கடலையைக் கையிலும், மூக்குப் பொடி மட்டையை யானை இருந்த கால் சட்டைப் பையிலும் போட்டுவிட்டான். வீட்டிற்கு அருகில் வரும் போது.... மூக்குப் பொடி தின் பண்டம் இல்லை என்றாலும், யானை பொடி மட்டையை விரித்து ஓர் உறிஞ்சு உறிஞ்சியது.

எரிச்சலடைந்த யானை 'ஹச்' சென்று தும்மியது. இளந்தமிழன், 'ஐயோ, அம்மா' என்று அலறினான். யானை போட்ட தும்மலில் கால் சட்டைப் பை கிழிந்து, அதன் வழியே யானை 'தொப்' பென்றுகீழேவிழுந்தது. கண நேரத்தில் அவனிடமிருந்து விடு பட்ட யானை தன் சுய உருவம் பெற்றது. கோபம் கொண்ட யானை இளந்தமிழனைத் துரத்தியது.

நல்லகாலம், அப்போது யானையைத் தேடி வந்த யானைப் பாகன் யானையைச் சமாதானப்படுத்தி இழுத்துச் சென்றான். முனிவர் கொடுத்த வரம் நிறைவு பெற்றது!



பொறுமையே பெருமை


கோதாவரி ஆற்றில் ஏகநாதர் என்னும் முனிவர் குளித்து முடித்துக் கரை ஏறினார். கரையின் மேல் உட்கார்ந்திருந்த ஒருவன், வெற்றிலை போட்டு அந்த எச்சிலை, குளித்துக் கரையேறிய ஏகநாதர் மீது துப்பினான். உடனே அவர், 'அட நாராயணா' என்று சொல்லி மீண்டும் ஆற்றில் இறங்கிக் குளித்தார். அவர் கரையேறும் போது முன்போலவே அவன் அவர் மீது மறுபடியும் எச்சிலைத் துப்பினான். 'அட நாராயணா' என்று சொல்லிவிட்டு ஏகநாதர் திரும்பவும் ஆற்றில் இறங்கிக் குளித்தார். இப்படி அந்த ஆள் 108 முறை துப்பியும் ஏகநாதர் சளைக்காமல் 'அட நாராயணா!' என்று கூறிக் கூறிக் குளித்தார். கடைசியாக, எச்சிலைத் துப்பியவன் காலில் ஏகநாதர் விழப் போனார்.

"அப்பா, இன்று 108 தடவை 'நாராயணா' என்று உச்சரிக்கக் கூடிய புண்ணியம் எனக்குக் கிடைத்ததே, அதற்கு நான் உனக்கு நன்றி செலுத்த வேண்டும்" என்றார்.

உடனே அவன், அவரைத் தடுத்து நிறுத்தி, "என்னை மன்னித்தருள வேண்டும். இவ்வூரில் உள்ள ஒரு பணக்காரர் உங்களுக்குக் கோபம் வரும்படி செய்தால், எனக்குப் பணம் தருவதாகச் சொன்னார். அதனால்தான் இப்படிச் செய்தேன்" என்றான்.

"உனக்குப் பணம் கிடைப்பதாக இருந்தால், நான் கோபப்பட்டிருக்கலாமே!" என்று ஏகநாதர் பொறுமையாகக் கூறினார். பொறுமையுடன் விளங்குவதால்தான் பெரியோர்கள் பெருமை அடைகிறார்கள்.

— 'சுகி சிவம்' பேசியதைக் கேட்டு எழுதியவர்: அ. சாகிர் (5450), மழையூர்.



ப்ருந்தாவனம்

—ட்டி?

1. ஆண்கள் உடுத்துவது ...?
2. புலியுடன் போரிட உதவுவது ...?



3. அம்மாவுக்கு அம்மாவை அழைப்பது ...?
4. தேர்விலே அவனை நான் முந்துவேன் என்பதற்குப் பெயர் ...?
5. தெருவைச் சுத்தம் செய்பவன் ...?

விடை: 1. வேட்டி, 2. ஈட்டி, 3. பாட்டி, 4. போட்டி, 5. தோட்டி.

— சி. மு. கருணாகரன் (12,142), அம்மையார் குப்பம்.

கை மகிமை!

"நீ உன் தாத்தாவின் கையாலே தான் மருந்து வாங்கிக் குடிப்பாயாமே, ஏன்?",

அதுவா! தாத்தா கை நடுக்கத்திலே அவர் கொடுக்கும் மருந்தில், பாதி மருந்து சிந்திவிடும், அதற்காகத் தான்!"

— பி. ஆனந்த் (13.562), பாபநாசம்.



சரியான பதில்!

விருந்திற்கு வந்திருந்த ஒரு பெண்மணி மிகவும் அடக்கமாக இருந்தாள். அவளுக்கு அருகில் இருந்த ஒரு பெண்மணி, தன் நகைகளின் அருமை பெருமைகளைக் கூறி, "நான் என்னுடைய நகைகளில் அழுக்குப் படிந்துவிட்டால் என்ன செய்வேன், தெரியுமா? வைர நகைகளை வெந்நீரிலும், மாணிக்க நகைகளை சிவப்புத் திராட்சையிலும், மரகதங்களை உயர்ந்த ரக மதுவிலும் வைடூரியம், முத்து போன்றவைகளைப் பசும்பாலிலும் சுத்தம் செய்வேன்... ஆமாம், நீங்கள் உங்கள் நகைகளை எப்படிச் சுத்தம் செய்வீர்கள்?" என்று அந்த அடக்கமான பெண்மணியைப் பார்த்துக் கேட்டார்.




"நான் என் நகைகளைச் சுத்தம் செய்யவே மாட்டேன். அழுக்குப் படிந்த அவைகளைத் தூக்கி எறிந்துவிட்டுப் புதிதாக வாங்கி விடுவேன்" என்று பதிலடி கொடுத்தாள்.

பெருமையடித்துக் கொண்ட பெண்மணி அவமானத்தால் தலை குனிந்தாள்.

— க. ஸ்ரீராம் (8477), நெய்வேலி—1.

கருணையே கருணை!

ஒரு சிறுவன் விநாயகரிடம் சென்று, "விநாயகப் பெருமானே, என் கஷ்டம்



திர பத்து ரூபாய் தேவைப்படுகிறது. எப்படியாவது எனக்குக் கிடைக்கும் படி செய்தால், உனக்குப் பாதியைத் தந்துவிடுகிறேன்'' என்று வேண்டிக் கொண்டான்.

அவன் திரும்பிச் செல்லும் போது பாதையிலே ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கண்டெடுத்தான். உடனே அவன், அந்த நோட்டுடன் விநாயக ரிடம் ஓடினான். ''விநாயகப் பெருமானே! உன் கருணையே கருணை! பத்து ரூபாய் நோட்டாகத் தந்தால், ஒரு வேளை அதை மாற்ற எனக்குச் சிரமமாயிருக்குமே என்று நினைத்து, நீ உனக்குச் சேர வேண்டியதை முன்பே எடுத்துக் கொண்டு, என் பங்கைத் தந்திருக்கிறாயே! ஆஹா! உன் கருணையே கருணை!'' என்றான்.

— ப. தேவேந்திர குமார் (1418), சென்னை — 7.

கல்வி

அறிவை வளர்ப்பது கல்வி.
ஆசையை ஒழிப்பது கல்வி.
இளமையில் வேண்டியது கல்வி.
ஈகையைக் கற்பிப்பது கல்வி.
உண்மையை உணர்த்துவது கல்வி.
ஊக்கம் அளிப்பது கல்வி.



எவரும் விரும்புவது கல்வி.
ஏணியாய் உயர்த்துவது கல்வி..
ஐயம் அகற்றுவது கல்வி.
ஒழுக்கம் சேர்ப்பது கல்வி.
ஓய்வின்றி வளர்வது கல்வி.
ஔவை அளித்ததோ அற்புதக்கல்வி.

— ப. விஜயகுமார் (241), புரசைவாக்கம்.

திருவிழாவில் நகைச்சுவை



ஒருதடவை நான் பக்கத்துக் கிராமத்தில் நடந்த திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது வயதான ஓர் அம்மாள், தன் பேத்திக்கு ஒரு பலூன் வாங்கிக் கொடுத்திருந்தாள். வாங்கிய சிறிது நேரத்திலேயே அது 'படீர்' என்று வெடித்துவிட்டது. ''ஐயோ! என் பலூன் வெடித்து விட்டதே!'' என்று பேத்தி அழுதாள்.

உடனே அந்த வயதான அம்மாள் தன் பேத்தியைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அக்குழந்தையின் சட்டை, பாவாடையைத் தடவித் தடவிப் பார்த்தாள். இதைக் கண்ட எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னம்மா தேடுறீங்க?'' என்று ஒருவர் கேட்டார்.

''அட, ஒண்ணுமில்லேப்பா. பலூன் வெடிச்சுதில்லே. அப்ப என்னோட பேத்தி சட்டை பாவாடையிலே தீ எதுவும் புடிச்சிருக்கான்னு பார்த்தேன்'' என்ற அந்த அம்மாளின் பதிலைக் கேட்டு எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தோம்.

— எஸ். கோகுலகிருஷ்ணன் (7755), திருக்கோகர்ணம்.

எப்படி விழுந்தார்?




''எங்கள் வீட்டிற்கு வந்த தபால்காரர் வழுக்கி விழுந்து விட்டார்.''

''எப்படி?''

''தபால்னு.''

— ஏ. பி. திருமகள் செல்வி (13,331), உசிலம்பட்டி.

அமெரிக்காவில் பெருமாள் கோயில்!



அமெரிக்காவில் நியூயார்க் நகரிலிருந்து சுமார் 400 மைல் தொலைவில் உள்ள பிட்ஸ்பர்க்கில் இருக்கிறது ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில். ஆந்திராவில் உள்ள திருப்பதி தேவஸ்தான உதவியுடனும் அமெரிக்காவில் வாழும் இந்தியர்களின் உதவியுடனும் 1978 இல் இக்கோயில் கட்டப்பட்டது.

— ஆர். வெங்கடேசன் (6068), உசிலம்பட்டி.

சுதந்திர தினங்கள்


இந்தியா — ஆகஸ்ட் 15
இந்தோனேஷியா — ஆகஸ்ட் 17
மலேசியா — ஆகஸ்ட் 31
சூடான் — ஜனவரி 1



பர்மா — ஜனவரி 4
இஸ்ரேல் — ஏப்ரல் 3
அமெரிக்கா — ஜூலை 4

— ப. தினேஷ்குமார் (3321), சென்னை — 7.

டிரைவராயிருந்தவர்



கார்டூன் படத் தயாரிப்பின் தந்தை எனப் போற்றப்படுபவர் வால்ட் டிஸ்னி. அவர் தமது 19 வது வயதில் இரண்டாவது உலகப் போரில் பிரான்ஸ் நாட்டில் ஆம்புலன்ஸ் வண்டியை ஓட்டும் டிரைவராகப் பணி புரிந்தார்.

— எஸ். மாதவன் (204), திருச்சி — 14

சண்டையை நிறுத்த...


ஜப்பானில் உள்ள ஒரு விடுதியில் ஒருநாள் இருவர் சண்டை போட்டுக்



கொண்டார்கள். வாய்ச் சண்டை முற்றி, சிறிதுநேரத்தில் கைகலப்பாக மாறியது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார் அந்த விடுதியின் உரிமையாளர். சண்டையை நிறுத்துவது எப்படி என்று யோசித்தார். உடனே தம்மிடமிருந்த டேப் ரிகார்டரில் தேசிய கீதத்தைப் போட்டார். மறுநிமிடம் இருவரும் சண்டையைநிறுத்திவிட்டுநேராகநிமிர்ந்து நின்று தேசிய கீதத்துக்கு மரியாதை செலுத்தினர். இதுபோன்ற தேசப் பற்று நமக்கும் இருந்திருந்தால், ஆங்கிலேயர் நம் நாட்டை அடிமைப்படுத்தியிருக்க முடியுமா?

— இரா. பிரஸன்னு (10,025), சேலம் — 1.


சென்னைக்கு முதல் இடம்!



இந்தியாவிலேயே பின் கோடு (Pincode) எண்கள் அதிகமாக உள்ள நகரம் சென்னைதான்! 600001 முதல் 600098 வரை உள்ளது. இரண்டாவது இடம் பம்பாய்க்கு. 400001 முதல் 400093 வரை உள்ளது. மூன்றாவது இடம் கல்கத்தாவிற்கு. 700001 முதல் 700070 வரை உள்ளது. நான்காம் இடம்தான் டில்லிக்கு. 110001 முதல் 110062 வரை உள்ளது.

— க. ப. சிவா (3450), திருநெல்வேலி — 7.

தலைமாற்று சிகிச்சை!



அமெரிக்க டாக்டரான ராபர்ட் ஒயிட் என்பவர் ஒருவரது தலையை எடுத்து மற்றவருடைய உடலுடன் பொருத்தி வாழவைக்க முடியுமெனக் கூறுகிறாராம். இந்த டாக்டர் இது பற்றிய ஆராய்ச்சியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளாராம். இச்செய்தியை நான் ஒரு வார இதழில் படித்தேன்.

அமெரிக்கர்கள் தற்போது கண்டு பிடித்துள்ள தலைமாற்று சிகிச்சையை நம் முன்னோர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்ததாகத் தெரிகிறது. அஸ்வினி குமாரர்களான இரட்டையர்கள், ஒரு முனிவரின் தலையை எடுத்துவிட்டு, அதற்குப் பதில் ஒரு குதிரையின் தலையைப் பொருத்தினார்கள் என்று நம் புராணத்தில் வருகிறதே, இது உண்மையாக இருக்கலாமோ!


— ரா. க. கௌ. கருணாகரன் (883), சேலம் — 1.

தடங்கலுக்கு வருந்துகிறேன்

ஆசிரியர்: ராமு நீ வீட்டிலே ஒழுங்காகப் பாடங்களைப் படிப்பதே இல்லையாம். எப்பொழுதும் டி. வி. பார்த்துக் கொண்டே இருக்கிறாயாமே? நேற்று பிற்பகல் ஏன் நீ பள்ளிக்கு வரவில்லை?


ராமு: இடையில் ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்துகிறேன்.

— ஏ. பரிமளநாதன் (10,894), திருப்பூர் — 4.



சித்திரப் புதிர்! — 14

ஆழி




1


இங்கேயுள்ள பிராணிகளில் ஒன்று மட்டும் வித்தியாசமானது. எது? ஏன்?



2 இந்த வாத்துக்குஞ்சு தன் தாயைச் சென்றடைய, சரியான வழியைக் காட்டுங்கள்!








3 மேலே உள்ள வட்டத்தின் ஒரு பகுதி கீழே இருக்கிறது. நான்கில் எந்தப் பகுதி அது?

4



அழுது கொண்டிருக்கிற இந்தச் சிறுமியின் முகத்திலுள்ள ஒரு கோட்டை மட்டும் மாற்றி வரைந்தால் சிரிக்க வைத்து விடலாம். எப்படி?



5 இந்த நான்கு பிராணிகளில் எது அதிக ஆண்டுகள் வாழக்கூடியது?

விடை: வேறு பக்கம்

டாக்டர் பக்கம்

வயிற்றுப் போக்கு

டாக்டர்: கு. கணேசன்



நம் நாட்டில் நூற்றுக்கு இருபது குழந்தைகளுக்கு எங்காவது வயிற்றுப் போக்கு (Diarrhoea) இருந்து கொண்டு தானிருக்கிறது. அந்த அளவிற்கு குழந்தைகளுக்குச் சர்வ சாதாரணமாக வரக்கூடிய நோய் வயிற்றுப் போக்கு.

பிறந்த குழந்தைகள், வளரும் குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் என்று எல்லா வயதினரையும் இது பாதிக்கக் கூடியதுதான் என்றாலும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால், அவர்களுக்கு மட்டும் எளிதில் பாதிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

வயிற்றுப் போக்கு சுகாதாரக் கேட்டின் விளைவாக வரக்கூடிய நோய். எனவே சாக்கடையும் கழிவுப் பொருள்களும் நிறைந்த அசுத்தமான சுற்றுப்புறச் சூழலில் வளரும் குழந்தைகளுக்கு இந்த வயிற்றுப் போக்கு அடிக்கடி வரலாம். அதைப் போலவே வறுமையின் காரணத்தால் சரியான ஊட்டச் சத்து இல்லாமல் வளரும் குழந்தைகளுக்கும், தேவையான அளவு தாய்ப் பால் இல்லாத குழந்தைகளுக்கும், சுத்தமும் சுகாதாரமும் அறிந்திராத குழந்தைகளுக்கும் அதிகமாக வயிற்றுப் போக்கு வரலாம்.

வயிற்றுப் போக்கை ஆரம்பத்திலேயே கவனித்துக் குணப்படுத்த வேண்டியது மிகமிக அவசியம்.

காரணம் —


வயிற்றுப் போக்கு முற்றிய நிலையில் வரும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதில் சிரமங்கள் இருப்பதோடு, உயிருக்கும் ஆபத்து வரலாம்.

சமீபத்தில்கூட தஞ்சாவூரிலும், காமராஜர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகிலும் வயிற்றுப் போக்கு அதிகமாகப் பரவியதால், பத்திற்கு மேற்பட்ட பச்சிளங் குழந்தைகள் இறந்து விட்டதாகச் செய்தித் தாளில் படித்திருப்பீர்களே.....!

இந்தியா இலங்கை, போன்ற வளரும் நாடுகளில் குழந்தைகளின் இறப்பு விகிதம் (Infant Mortality Rate) இன்னமும் குறையாமலிருப்பதற்கு இந்த வயிற்றுப் போக்கும் ஒரு காரணம் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இதிலிருந்து வயிற்றுப் போக்கை உடனடியாகக் கவனித்து, கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறதில்லையா?

சரி, குழந்தைகளே, இப்போது வயிற்றுப் போக்கு எதனால் வருகிறது



ஸ்டேஷன் பெயர்

"அம்மா நீ புத்தகம் படிச்சுக்கிட்டிருந்தப்போ இதுக்கு முந்தி ஒரு ஸ்டேஷனிலே வண்டி நின்னு கிளம்பிச்சே, அந்த ஸ்டேஷன் பெயர் என்னம்மா?"

"நான் கவனிக்கலேயே, அது சரி, எதுக்குக் கேட்கிறே?"

"அந்த ஸ்டேஷன்லே தங்கச்சி இறங்கிப் போச்சு, அதுதான்!"

என்பதைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறேன் —

உங்களின் வழக்கமான உணவு முறையிலிருந்து திடீரென்று மாறுபட்டாலும், ருசிகாரணமாகவும், ஆசையினாலும் அளவுக்கதிகமாக உணவு உட்கொண்டாலும், போதுமான இடைவெளி விடாமல் அடிக்கடி சாப்பிடுவதாலும் வயிற்றுப் போக்கு வருகிறது.

நாம் சாப்பிடும் உணவுகளிலோ, அல்லது குடிநீரிலோ, சிகல்லா (Shigella), சால்மனெல்லா (Salmenella) ஈகோலை (E. Coli) போன்ற பாக்டீரியாக் கிருமிகள் இருந்தாலும், புரோட்டோஜோவா (Protozoa) மற்றும் வைரஸ் (Virus) கிருமிகள் இருந்தாலும் வயிற்றுப் போக்கு நிச்சயம் வரும்.

வயிற்றில் புழுக்களின் (Worms) தொந்தரவு அதிகமாக இருந்தாலும் வயிற்றுப்போக்கு வரலாம்.

மழைக் காலங்களில் 'காலரா' (Cholera) எனப்படும் நச்சுக் கிருமிகள் திடீரென்று உற்பத்தியாகி 'காலரா' நோயைப் பரப்பும். அப்போதும் மிக மோசமான வயிற்றுப்போக்கும் வாந்தியும் உண்டாகும்.

ஆமாம், இந்தக் கிருமிகள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன என்றுதானே கேட்கிறீர்கள்?

அதையும் சொல்கிறேன். கேளுங்கள்.

சாக்கடைத்தண்ணீரும், கழிவுநீரும் தேங்கிக் கிடக்கின்ற தெருக்களிலும், குப்பை கூளங்கள் நிறைந்த இடங்களிலும், மலங் கழிக்கப் பயன்படும் பொது இடங்களிலும், கண்மாய், குளக்கரை போன்ற இடங்களிலும் இந்நோய்க் கிருமிகள் அதிகமாக வாசம் செய்யும்.

இவை ஈக்கள், கொசு, கரப்பான் பூச்சி, எறும்பு போன்றவற்றால் நமக்குப் பரவிவிடும்.

பொதுவாக வயிற்றுப் போக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் மாதங்களில் அதிக அளவில் குழந்தைகளிடத்தில் பரவும். அதற்குக் காரணம், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் உள்ள தட்பவெப்பநிலை வயிற்றுப் போக்குக் கிருமிகள் வளர்வதற்குச் சாதகமாக அமைகிறது. அதே மாதிரி மழைக் காலங்களான ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் மாதங்களில் கொசுக்கள் அதிகம் உற்பத்தியாவதால், அவை வயிற்றுப் போக்கை அதிகமாகப் பரப்பிவிடுகின்றன.

இந்நோய்க் கிருமிகள் உணவு மூலமாகவும், குடிநீர் மூலமாகவும் நம் உடலுக்குள் நுழைந்ததும் உணவுப் பாதைவழியே சிறுகுடலை அடைகிறது. அவை அங்குள்ள திசுக்களைத் தின்று புண்ணாக்குகிறது. இதன் காரணமாக, சிறுகுடல் ஜீரணிக்கும் சக்தியை இழந்து தண்ணீர் மாதிரி மலத்தை வெளியேற்றிவிடுகிறது. இதுதான் வயிற்றுப் போக்கு.

சில வகைக் கிருமிகள் திசுக்களைத் **தின்னாமல் விஷத்தை (Toxin) மட்டும்** இரத்தத்தில் செலுத்திவிடுகின்றன. அவை இரத்தத்தில் உள்ள நீர்ச் சத்தையெல்லாம் இழுத்து வந்து மலத்துடன் வெளியேற்றி விடுகின்றன. இது குழந்தைகளை மிகவும் ஆபத்தான கட்டத்திற்குத் தள்ளிவிடுகிறது.

வயிற்றுப்போக்கை ஆரம்பத்திலேயே எப்படி அறிந்து கொள்வது என்பதை இங்கே பார்ப்போம்.

சிலருக்குஒருநாள் அல்லது இரண்டு நாட்களுக்கு லேசான காய்ச்சல் வரும். அத்துடன் வயிற்றில் வலி எடுக்கும். பிறகு, வயிற்றுப்போக்கு ஆரம்பிக்கும். சிலபேருக்கு, திடீரென்று வயிற்று

வலியுடன் கூடிய வயிற்றுப்போக்கு வரலாம். இன்னும் சிலருக்கு வாந்தி, வயிற்று வலி, வயிற்றுப் போக்கு என்று எல்லாத் தொந்தரவுகளும் சேர்ந்தே வரக்கூடும்.

இதுவே 'காலரா' நோயாக இருந்தால், அரை மணிக்கொரு தடவை வெறும் தண்ணீராய் வயிற்றுப் போக்கு இருக்கும். வாந்தியும் வரும்.

எதுவாக இருந்தாலும், உடனடியாக மருத்துவரைச் சந்தித்து, ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

கிராமங்களில் வயிற்றுப்போக்கு வந்தால் வயிற்றைத் தட்டிவிட்டால் சரியாகிவிடும் என்ற மூட நம்பிக்கை உண்டு. இது தவறு.

வயிற்றுப்போக்கு அதிகமாகிவிட்ட நிலையில் இரத்தத்தில் உள்ள நீர்ச்சத்து அனைத்தும் மலத்திலும் வாந்தியிலும் வெளியேறிவிடுவதால் இரத்தக்குழாய்கள் சுருங்கி, அசதியும் மயக்கமும் உண்டாகும். நடக்க இயலாது. வயிறு வீங்கிக் கொள்ளும். இந்த நிலையில் வரும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் சிரமங்கள் ஏற்படும்.

எந்த நோயையும் ஆரம்பத்தில் கவனித்துவிட்டால் ஆபத்து குறைவு தானே?

சாதாரண ஊசி மருந்துகளில் குணப்படுத்திவிடக்கூடிய வயிற்றுப் போக்கை நம் அலட்சியப் போக்கினால் அதிகமாக்கிவிட்டால், அக்குழந்தைகளுக்கு சிரை (Vein) வழியாக குளுகோஸ் (I.V. Drip) ஏற்றி, பலவகையான ஊசி மருந்து செலுத்தி, நான்கைந்து நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்க வைத்து வைத்தியம் பார்க்க நேரிடும்.

இந்த அவஸ்தை தேவைதானா?

வேண்டாமே!

நோய் எதுவானாலும் வந்த பிறகு சிகிச்சை செய்வதைவிட வருமுன் காப்பதே சிறப்பல்லவா?

வயிற்றுப்போக்கைப் பற்றித்தெரிந்து கொண்ட நீங்கள், அதனை வரவிடாமல் தடுக்க, சில வழிமுறைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் இல்லையா?

அதற்காகத்தான் இந்தத் தடுப்பு முறைகள்:

— உங்கள் உணவு முறைகளைத்





பரிசுக் கத்தி

"என்னடா கோபு, தம்பியோட பிறந்த நாளுக்கு கத்தி வாங்கிக் கொடுத்திருக்கே?"

"அவன்தான் அடிக்கடி கத்தி, கத்தி அழுதுக்கிட்டிருந்தானே!"

— ஆர். பி. ராஜ்

திடீரென்று மாற்றிக் கொள்ளாதீர்கள். எல்லாச் சத்துக்களும் அடங்கிய, எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். எதையும் அளவோடு சாப்பிடுங்கள். அதையும் நேரத்தோடு சாப்பிடுங்கள்.

— சாப்பிடுமுன் கைகளை நன்றாகக் கழுவுங்கள்.

— சாப்பாட்டுப் பாத்திரங்கள் வெந்நீரில் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

— ஈக்கள் மொய்க்காதபடி உணவுப் பண்டங்களை மூடிப் பாதுகாக்க வேண்டும். ஈக்கள் மொய்த்த பண்டங்களைக் கடைகளில் வாங்கிச் சாப்பிடாதீர்கள்.

— பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

— கொதித்து ஆற வைத்த நீரையே குடிநீராகப் பயன்படுத்துங்கள்.

— குளத்து நீரைக் குடிக்கப் பயன்படுத்தக்கூடாது.

— கிணற்று நீரை குளோரின் போட்டு சுத்தப்படுத்த வேண்டும்.

— பழங்களாக இருந்தால் தண்ணீரில் நன்கு கழுவிய பிறகே சாப்பிட வேண்டும். காய்கறிகளையும் தண்ணீரில் கழுவிய பிறகே சமையலுக்கு உபயோகிக்க வேண்டும்.

— குழந்தைகளுக்குப் புட்டிப் பால் கொடுப்பதாக இருந்தால், பால் புட்டியை, குறைந்தது அரை மணி நேரமாவது கொதிநீரில் போட்டுக் கழுவ வேண்டும். ஈக்கள் பூச்சிகள் இல்லாத இடத்தில் பால் புட்டியை வைக்க வேண்டும்.

— அடிக்கடி வீட்டைக் கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டிற்குள் கோழி, புறா, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளை நடமாடவிடக் கூடாது.

— தெருக்களில் அசுத்தமான இடங்களில் உட்காரவோ, விளையாடவோ, மலம் கழிக்கவோ கூடாது. அதே மாதிரி வீட்டிலும் கண்ட இடங்களில் அசுத்தம் செய்யக் கூடாது.

— மலம் கழிக்க கக்கூஸைப் பயன்படுத்துங்கள். பொது இடங்களில் மலம் கழிக்கக் கூடாது.

— தெருவில் நடக்கும்போது செருப்பணிந்து கொள்வது நல்லது. செருப்புகளுடன் வீட்டிற்குள் நடக்காதீர்கள். செருப்பில் ஒட்டிக் கொண்ட கிருமிகள் வீட்டிற்குள் வந்து விடலாம்.

— கழிவுப் பொருள்களைத் தனியாகக் கூடையில் போட்டு அவ்வப்போது வெளியேற்றி விடுங்கள். ஈக்களும் மற்ற கிருமிகளும் வளர்வதற்குண்டான சூழ்நிலையை உருவாக்காதீர்கள்.

— தெருக்களில் அசுத்தமான கழிவு நீரும் சாக்கடைத் தண்ணீரும் தேங்கிக் கிடந்தால் நோய்க் கிருமிகள் அவற்றில் சுகவாசம் செய்யும். எனவே அவற்றைச் சுத்தப்படுத்த ஏற்பாடு செய்யுங்கள்.

— மழைக் காலங்களில் கொசுக்களின் உபத்திரவத்தைத் தவிர்க்க, கொசு வலையை உபயோகிக்கலாம் அல்லது கொசு விரட்டும் வத்திகளைப் பயன்படுத்தலாம்.

— காலரா நோய் பரவும்போது காலரா தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டியது அனைவரின் கடமையாகும்.

இதுபோல் உங்களையும் உங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணிக் காத்தால், வயிற்றுப் போக்கு என்ற நோய் வரவே வராது என்பது மிகத் தெளிவான உண்மை!



என் பொழுதுபோக்கு

ஓய்வு நேரந்தனைப் பயனுள்ள வகையில் செலவிட நான் தபால் தலை சேகரித்தலையும் பறவைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தலையும் கொள்கிறேன். பறவைகளைப் பற்றிய தகவல்கள் திரட்டுவதுதான் தலையாயது.

மேலை நாடுகளில் என் போன்ற இளஞ்சிறுர்களிடையே **Birds Watching** என்ெருரு பொழுது போக்கு உள்ளதாம். அவர்கள் கானகங்களில் திரிந்து பல்வேறு பறவைகளை நேரில் பார்த்து விவரங்களைச் சேகரிப்பார்களாம். எனக்கும் இத்தகு ஆர்வம் ஏற்பட்டது. நான் வசிக்கும் போக்குவரத்து மிக்க பகுதியில் பறவைகளுக்கு ஏற்ற சூழ்நிலை இல்லாததால் எனது ஆர்வம் தடைப்பட்டது.

'கோகுலம்' இதழ் ஒன்றில் இரு சிறுவர்களின் உரையாடல் வடிவில் எனது ஆர்வத்தைப் பெருக்கும் திறவுகோல் வெளியிடப்பட்டிருந்தது. ஒருவன் கூறும் அரிய தகவல்களைக் கேட்டு மற்றவன், 'பறவைகளில் இத்தனை விஷயங்களா? என வியக்கிருன். இவ்வுரையாடல் எனது ஆர்வத்தினைச் செயலாக்க உதவியது.

பல்வேறு இதழ்களிலும் வானெலியிலும் பெரியவர்களின் வாய்மொழி மூலமாகவும் கிடைத்த அரிய தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்து இதுவரையில் மாறுபட்ட பண்புகளைக்கொண்ட சுமார் நூற்றுப் பத்து பறவைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துள்ளேன்.

டாக்டர் எட்வர்ட் ஜென்னரைப் போலச்சிறந்தமருத்துவராயும்பறவையியல் ஆராய்ச்சியாளராயும் எதிர்காலத்தில் திகழ வேண்டும் என்பதே எனது எண்ணம்.

டாக்டர் சலீம் அலி என்பார் நமது நாட்டில் பறவையியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புதிய அத்தியாயம் ஒன்றினையே படைத்து வருகிருர். அவர் படைக்கும் அத்தியாயத்தில் நானும் பங்கு பெற்று நமது நாட்டைப் பறவையியலில் வெகுவாகப் புகழ்பெறச் செய்ய விரும்புகிறேன்.

நான் திரட்டிய சில தகவல்கள்:

போலிக்ஸ்

ரோமானிய இதிகாசங்களில் போலிக்ஸ் என்னும் பறவை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இப்பறவையானது சுமார் 500 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து எரிந்து அச்சாம்பலிலேயே மறு அவதாரம் எடுத்து விடுமாம்!

காக்கை

காக்கை இல்லாத ஒரே சம வெப்ப நிலையுள்ள நாடு நியூஸிலாந்துதான். காக்கை இனத்தைச் சேர்ந்த பறவைகள் ருக்ஸ், ரேவன்ஸ், மேக்பீக், ஜேய்ஸ், ஜேக்டாவ் ஆகியவை ஆகும்.

— எஸ். நாகூர் ரோஜா (10,069)

பூந்தாவனக் கவியரங்கம்

நிலவில் பாட்டி!

பாட்டி சுட்ட இட்டலி — அது
பறந்து சென்று வானிலே
ஒட்டிக் கொண்டு சிரிக்குது — தினம்
ஓரக் கண்ணால் பார்க்குது.

வட்ட மான இட்டலி — அதன்
கிட்டச் சென்ற பாட்டியும்
இட்ட விசில் ஒட்டிக் கொண்டு
சட்டி னியைத் தேடுறாள்.



ஒட்டிக் கொண்ட பாட்டி — நன்றாய்
உட்கார்ந் தங்கே இருந்திட
வட்ட மான வெண்ணிலா — ஆஹா!
எட்டிப் பார்த்துச் சிரிக்குது!

— எஸ். கனகராஜ், (1174),
கவற்குளம் தேரிவிளை.

நாடு உயர உழைப்போம்

நேருவிற்குப் பிடித்தது ரோஜா — அவர்
நெஞ்சில் அமர்ந்திடும் ஜோராய்.

காந்தியின் முகத்தில் புன்சிரிப்பு — நாம்
கண்டதும் அடைவோம் பூரிப்பு

பாரதி கண்களில் தீரம் — அது
பலருக்கு அளித்திடும் வீரம்



வ.உ.சி. கப்பலை ஓட்டினார் — சுதந்திர
வேட்கை தன்னை ஊட்டினார்

இவர்களால் அடைந்தோம் சுதந்திரம் — நாடு
இனிஉயர உழைப்போம் தினம்தினம்.

— ஏ. எல். ராமு (3674), மதுரை.

நத்தை

நத்தை யம்மா நத்தை
நடை பயிலும் நத்தை

முதுகு மேலே வீட்டைச்
சுமந்து செல்லும் நத்தை!



இடைஞ்சல் யாரும் செய்தால்
இழுத்துக் கொன்றும் தலையை

நாள் முழுக்க நடக்கும்
நான்கு மீட்டர் செல்லும்

எலும்பு இதற்கு இல்லை
இதனை நீங்கள் அறிவீர்.

வீதி ஓரம் செல்லும்
மிகவும் சாதுப் பிராணி.

— ஏ.பி. ராஜசேகரன் (5270),
ஆவத்திபாளையம்.

நாடு காக்கும் சிப்பாய்

வீரமுடன் சென்றிடுவார் சிப்பாய்;
வீரத்தோடு வென்றிடுவார் சிப்பாய்;
காக்கி உடை அணிந்திருப்பார் சிப்பாய்;
கம்பீரமாய்ச் செயல்படுவார் சிப்பாய்.

துப்பாக்கி ஏந்திடுவார் சிப்பாய்;
துரத்திடுவார் எதிரிகளை சிப்பாய்;
நேர்நின்று போர்புரிவார் சிப்பாய்;
நேர்மை யோடுவென்றிடுவார் சிப்பாய்.

நாடுகாக்கும் வல்லவராம் சிப்பாய்;
நாட்டுக்காக உயிர்விடுவார் சிப்பாய்;
நன்மை பல செய்திடுவார் சிப்பாய்;
நல்லோர்கள் போற்றுகின்ற சிப்பாய்.



சின்னஞ் சிறு வயதினிலே
சிப்பா யாக மாறிடவே
சிறந்த உறுதி கொண்டுள்ளேன்
சிறந்த குடிமகன் ஆகிடுவேன்.
நாட்டைக் காக்க முயன்றிடுவேன்
நல்ல தொண்டு செய்திடுவேன்.

— கி. செல்வக்குமார் (10,631),
சாணார்பட்டி.

எங்கள் வீட்டுப் பூனை



எங்கள் வீட்டுப் பூனைக்கு
எந்தக் குறையும் இல்லையே!
பாலும் சோறும் தருகிறேன்
பட்ச ணங்கள் தருகிறேன்
காப்பி கூடக் கொடுக்கிறேன்
கையில் தூக்கிக் கொஞ்சுறேன்
பட்டுப் போன்ற மேனியைத்
தொட்டுத் தொட்டுப் பார்க்கிறேன்

— எஸ். சாந்தி (12406),
சென்னை—23.


குமணன் பேசினன்



பேசினான் குமணன் மளமளவென்று
தட்டினர் கைகளை படபடவென்று
வந்தார் தலைவர் சரசரவென்று
தந்தார் பதக்கம் பளபளவென்று

அடைந்தான் வீட்டை மடமடவென்று
பிரித்தான் பரிசை கிடுகிடுவென்று
சிரித்தாள் தங்கை கலகலவென்று
விடிந்தது பொழுது, பலபலவென்று

— எம். சிவகுமார், (7158),
மதுரை—6.


நொண்டிக் கழுதை
ஓவியர் - ராஜு : கதை - மு. சிவாஜி.
ஒரு காட்டில் சைவப்பிராணிகள் மட்டும் வசித்து வந்தன.
திடீரென்று நரியும், கரடியும் அந்தக் காட்டிற்குள் நுழைந்தன.
நரியையும், கரடியையும் பார்த்த மற்ற வன விலங்குகள் பயந்தன.
நரியும், கரடியும் வருகிறது. ஓடி ஒளிந்து கொள்வோம்.
நம்மைப்பார்த்ததும் எல்லோரும் நடுங்குகிறார்கள். இனி இந்தக் காட்டிற்கு நான் தான் ராஜா. நீ மந்திரி.
ஒரு நாள் நரியும், கரடியும் காட்டில் வேட்டையாடும் போது நரி களைப்படைந்து விட்டது.
இனி நாம் நடக்கக் கூடாது. மிருகங்களின் மீது அமர்ந்துதான் வேட்டையாட வேண்டும்.
அதோ ஒரு நொண்டிக் கழுதை நிற்கிறதே!
கழுதையை நரி அணுகியது.
கழுதை அண்ணாச்சி! ஏன் ஒரே சோகமாக இருக்கிறீர்கள்?
பட்டணத்திலிருந்து என்னைத் துரத்திட்டாங்க. இப்ப எனக்கு பசிக்குது.
பழத்தோட்டத்தை காட்டுகிறேன். ஆனால் நாங்கள் வண்டியில் வருவோம். நீ தான் இழுத்துப்போகணும்.
வண்டிக்கு என்ன செய்வீர்கள்?
இந்தக் காட்டில் யாரோ ஒரு வண்டியை விட்டு விட்டுப்போயிட்டாங்க. அதை நாம் பயன் படுத்திக்கலாம்.



வண்டி இருந்த இடத்திற்கு கரடி எல்லோரையும் அழைத்துச்சென்றது.
வண்டியில் நரியும், கரடியும் உட்கார்ந்திருக்க நொண்டிக் கழுதை இழுத்துச் சென்றது.
எனக்கு பசிக்கிது சீக்கிரமாக பழத் தோட்டத்தைக் காட்டுங்க.
அதுக்குள்ளேயும் தோட்டம் வருமா? ஆசையைப்பாரு. கொஞ்சம் இரு. நான் மீன் பிடிச்சு தின்னுட்டு வாரேன்.
கொஞ்சம் இரு நான் தேன் சாப்பிட்டு வந்திடறேன்.
நரியும், கரடியும் சாப்பிட்டு விட்டு வண்டியில் ஏறி அமர்ந்தன. பசியோடு வண்டியைக் கழுதை இழுத்துச் சென்றது.
ஐயோ! பசி தாங்க முடியலே. தோட்டம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறதோ?
கழுதை மயங்கி கீழே விழுந்து விட்டது. அதை மிருகங்கள் பார்த்தன.
நொண்டிக்கழுதையை வண்டி இழுக்கச் சொன்னது மகாக்கொடுமை.
இதற்கு, தண்டனையாக இந்த வண்டியில் கழுதையையும், மிருகங்களையும் உட்கார வைத்து நீங்கள் இருவரும் வண்டி இழுக்கணும்.
யானையின் மிரட்டலுக்கு நரியும், கரடியும் அடி பணிந்தன.
நொண்டிக் கழுதை நம்மை இழுத்தது. இப்ப வட்டியும் முதலுமாக இழுக்க வேண்டியதாகி விட்டது.

(வி)சித்திரச் செய்திகள்




எலியினால் அபராதம்!

பிரான்ஸைச் சேர்ந்த நிக்கோலாஸ் என்னும் இளைஞர், விடுமுறையில் லண்டனுக்குச் சென்றார். அப்போது அவர் பிரியமாக வளர்த்து வந்த ஓர் எலியையும் கொண்டு போனார். லண்டன் போலீஸார், அவர் எலி வைத்திருந்ததை ஆட்சேபித்து வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கில் நிக்கோலாஸுக்கு ரூ. 2500/- அபராதம் விதிக்கப்பட்டது!

அழுகைப் போட்டி




இந்தோனேஷ்யா நாட்டில், மத்திய ஜாவா பகுதியில் செமராங் என்னும் இடத்தில் அழுகைப் போட்டி ஒன்று நடத்தினார்கள்! அந்தப் போட்டியில் 28 பேர்கள் கலந்து கொண்டார்கள். அதில், தாயைப் பிரிந்து அழும் குழந்தையைப் போல அழுத 'ரகமத் செடியோகோ' என்பவருக்கு முதல் பரிசு கிடைத்தது!



தலைமுடியில் ரயில்!


ரஷ்யாவில், உக்ரேன் குடியரசில், ஜெமரின்கா என்னுமிடத்தில் வசிக்கும் 'மிகாயில் மசிக்யுக்' என்பவர் மனிதனின் தலைமுடி ஒன்றில், ரயில் எஞ்சினுடன் உள்ள ரயில் பெட்டிகளை மிக நுட்பமாகச் செய்திருக்கிறார்! மனித முடி ஒன்றில் 3,500 ரயில் பெட்டிகளை உருவாக்க முடியும் என்கிறார் அவர்!

உயிரை மீட்ட பாப்பாப் பாட்டு!




பிரிட்டனில் 'எப்ரிஸ்ட்வைத்' என்னும் ஊரைச் சேர்ந்தவன் சாம் இவான்ஸ் என்னும் 5 வயதுச் சிறுவன். ஓர் அறுவைச் சிகிச்சையின் போது அவனுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவன் பிழைக்க மாட்டான் என்றே டாக்டர்கள் முடிவு செய்து விட்டனர். செயற்கைச் சுவாச, இதயத் துடிப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டன. இதை அறிந்த அவனுடைய வகுப்புத் தோழர்கள் ஒன்று சேர்ந்து, பாப்பாப் பாடல்கள் பலவற்றைப் பாடி டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து கொண்டு வந்தனர். அதை அவனது படுக்கை அருகே வைத்து, அவனது மனச்சாந்திக்காகத் தொடர்ந்து பாடச் செய்தனர். என்ன ஆச்சரியம்! அந்தச் சிறுவனின் உணர்வு கொஞ்சங் கொஞ்சமாகத் திரும்பியது. பாடல் ஒவ்வொன்றையும் அவன் ரசித்துக் கேட்கலானான். ஏழு வாரங்களில் அவன் முற்றிலும் குணம் அடைந்து பள்ளிக்குத் திரும்பினான்!

சாய்ந்து வரும் கோபுரம்!



இத்தாலியில் உள்ள பைசா நகரின் சாய்ந்த கோபுரம் உலகப் பிரசித்திப் பெற்றது. 1173 ஆம் ஆண்டு அது கட்டப்பட்டது. கடந்த 68 ஆண்டுகளில் அது ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1 மி. மீ. அளவு சாய்கிறதாம். கட்டப்பட்ட நாளிலிருந்து அது இதுவரை சுமார் 5 மீட்டர் சாய்ந்து விட்டதாம். ஒருநாள் இந்தக் கோபுரம் தரையில் சாய்ந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.




கிறுக்கலின் விலை 10,000 டாலர்!

யு. எஸ். ஜனாதிபதி ரீகன் சும்மா இருக்கும்போது, அல்லது ஏதாவது யோசனையில் இருக்கும் போது, மேஜைமேல் இருக்கிற காகிதத்தில் கிறுக்குவது உண்டு. அப்படிக் கிறுக்கிய எட்டு காகிதங்களைச் சமீபத்தில் ஏலம் விட்டார்கள். அந்தக் கிறுக்கல் சுமார் 10,000 டாலருக்கு ஏலம் போயிற்று!

60 அடி நீள எலும்புக்கூடு!

வடமேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டில் 'டினோசார்' என்னும் ராட்சத மிருகத்தின் எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 60 அடி நீளமும் 20 டன் எடையும் உள்ள இந்த எலும்புக் கூடு 16 கோடி ஆண்டுகளுக்கு முந்தியது!



— ஆழி

அவர் செய்த உதவி

ஜிலாபா தேவி



பிச்சைமுத்துவின் மனம், அவ் வூருக்கு வந்துள்ள பொருட்காட்சி யையே சுற்றிச் சுற்றி வந்தது. அந்தப் பொருட்காட்சியை அவனுடைய வகுப்பு நண்பர்கள் ரஹீம், தாமஸ், சீனுவாசன், லதா, சுப்ரியா, சுரகுரு, தேவி, சுரமுத்து, எல்லாரும் பார்த்து விட்டார்களாம். மிகமிகநன்ருகஇருக் கிறதாம். அவர்கள் சொன்னது முதல் பிச்சை முத்துவின் மனத்தில் தொட் டில் ராட்டினமும், ஜயின்ட் வீலும், மக்மல் பூரியும், மசாலா பாலும் நினை வுக்கு வந்து வந்து வாட்டின.

"ம்... எப்படியும் இந்தப் பொருட் காட்சியை இன்ருே நாளையோ பார்த்து விட வேண்டும். ம்... பஸ்ஸுக்குப் போக அறுபது, வர அறுபது... நூற்று இருபது... பொருட்காட்சிக்குப் போக ஒரு ரூபாய்... அப்புறம் உள்ளே செலவு... எப்படியும் ஐந்து ரூபாய் இருந்தால் போதும். ம்..." என்று நினைத்தபடி, கிழிந்த புத்தகப் பையைத் தோளில் மாட்டியபடி புறப்பட்டான்.

இவன் பள்ளிக்குள் நுழையவும் இரண்டாவது மணி அடிக்கவும் சரி யாக இருந்தது.

இறைவணக்கக்கூடத்தில்மாணவர் கள் கூடினர்.

சந்திராவும் புவனேசும் வழக்க மாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடு வார்கள். ஆனல், அன்றைக்குப் புதி தாக ஒருவர் பாடினர். பாட்டு மிக இனிமையாக இருந்தது. அந்த மனித ருக்கு அறுபது வயது இருக்கும். கந்தை யான வேஷ்டி, சட்டைதான். ஆனலும், கசக்கிக் கட்டியிருந்தார்!


பாட்டு முடிந்ததும் தலைமை ஆசிரி யர் பேசினர்:

"அன்புள்ள மாணவ மாணவி களே, இப்போது நம்மிடையே தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடியவரின் பெயர் திரு. தண்டபாணி. ஓர் அலுவலகத் தில் பெரிய வேலையில் இருந்தவர். ஆனல், துரதிர்ஷ்டவசமாக ஏதோ கண் நோய் வந்து இரண்டு கண்களும் குருடாகி, அல்லல் படுகிருர். இப் போது சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்படுகிருர். எனவே, இவர் ஒவ் வொரு பள்ளியாகச் சென்று தன்னு டைய இசையால் மாணவர்களை மகிழ்

சித்திரப் புதிர் - 14

விடைகள் :

1. மீன் (கால்கள் இல்லை)
2. நீங்களே கண்டுபிடிக்கலாம்
3. இ.
4. வாயின் கோட்டை கீழ்நோக்கி வளைக்க வேண்டும்.



வித்து அவர்கள் தரும் பணத்தில் சாப்பிட்டு வருகிறார். இவருடைய இசை நிகழ்ச்சி இன்று மாலை மூன்று மணிக்கு நடக்கும். குழந்தைகள் பெற்றோரிடம் தொல்லை தராமல் தங்களிடம் உள்ள காசுகளை அளித்து உதவ வேண்டும். மாணவர்கள் வகுப்புத் தலைவர்களிடம் தந்து விடுங்கள். அவர்கள் வகுப்பு ஆசிரியர்களிடம் தரட்டும். ஆசிரியர்கள் என்னிடம் தருவார்கள். மாணவர்கள் தரும் காசை எழுதிக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் 'நாம் குறைவாகக் கொடுத்திருக்கிறோமே!' என்ற தாழ்வு மனப்பான்மை குறைவாகக் கொடுத்தவர்களுக்கு ஏற்படும்... முடிந்ததைக் கொடுங்கள்'' என்று முடித்தார் தலைமை ஆசிரியர்.

தண்டபாணி இரண்டு கரங்களையும் கூப்பிக் கும்பிட்டார்.

மாணவர்கள் தத்தம் வகுப்புகளுக்குச் சென்றனர்.

அந்தந்த வகுப்புகளில் வசூல் தீவிரமாய் நடந்தது.

பிச்சைமுத்து படிக்கும் ஏழாம் வகுப்பிலும் அப்படியே. மானீட்டர் அபயநாதன் வசூலில் இறங்கினான்.

''டேய் பிச்சை... இந்தாடா... நாற்பது காசு...''

''இந்தாடா ஒரு ரூபா வைச்சுக்கடா...''

''முப்பது பைசா இந்தா...''

எல்லாக் காசையும் வாங்கிச் சேர்த்தான், அபயநாதன். எண்ணிப் பார்த்தான். பதினெட்டு ரூபாய் அறுபத்தைந்து காசுகள் இருந்தன.

இடைவேளை மணி அடித்தது.

இரண்டு பீரியட் போனதே தெரியவில்லை.

அபயநாதன் சேர்ந்த பணத்தை ஜாமெட்ரி பாக்சில் போட்டுப் பத்திரப்படுத்தியபடி வெளியே வந்தான். பிச்சைமுத்து அவனைப் பின்தொடர்ந்தான்.

''எலே.. அபயா? எவ்வளவுடா பணம் சேர்ந்திருக்கு?''

''ம்... பதினெட்டு ரூபா, அறுபத்தஞ்சு காசு... என்கிட்டே ஒரு ரூபா இருக்கு. அதையும் சேர்த்துத் தரப் போறேன்...'' என்றான் அபயநாதன்.

பிச்சைமுத்துவின் மனம் வேலை செய்தது.

''எப்படியும் இன்று பொருட்காட்சியைப் பார்த்துவிட வேண்டும். அதற்கு இதோ காசு...'' மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

''டேய்... அபயா... பொருட்காட்சி பார்த்துட்டியா?''

''இல்லேடா... ரெண்டு மூணு ரூபா ஆகும்... கையிலே பணம் இல்லேடா...''

''போடா மக்கு... கையிலே இவ்வளவு பணம் வைச்சுக்கிட்டு, பணம் இல்லேன்னு அழுவறியே...''

''இது பள்ளிக்கூடப் பணம்டா... பாவம்... அந்தக் கண்ணில்லாதவருக்குக் கொடுக்கறதுக்காகச் சேர்த்ததுடா'' என்றான் அபயநாதன்.

திடீரென்று எங்கேயோ ஓடினான் பிச்சைமுத்து.

அதற்குள் மணி அடித்துவிட்டது.

நேரம் கழித்து வகுப்பில் நுழைந்தான் பிச்சைமுத்து. அடிக்கடி அப்படித்தான் செய்வான் அவன்.

''டேய் அபயா. மற்ற எல்லா வகுப்பிலேயும் கேட்டுட்டேன். நூத்தி இருபது ரூபா அங்கே சேர்ந்திருக்கு. இது வரைக்கும் அந்த ஆளுக்கு யாரும் நூறு ரூபாய் கூடக் கொடுத்ததில்லையாம்... அதனாலே ஒரு ஐடியா... அப்படிச் செஞ்சா... நீயும் நானும் பொருட்காட்சிக்குப் போயிட்டு ஜாலியா வரலாம்'' என்றான்.

''எப்படிடா?'' புரியாமல் கேட்டான் அபயநாதன்.

''நம்ம வகுப்பிலே... பத்து ரூபாய்

அறுபத்தஞ்சு காசுதான் சேர்ந்திருக்குன்னு... ஆசிரியர்கிட்டே கொடுத்திடு. மீதி எட்டு ரூபாயிலே நீயும் நானும்பொருட்காட்சிக்குப்போயிட்டு வந்திடலாம்...'' என்றான்.

''டேய், டேய்... அது பாவம்டா... பார்வையில்லாதவர் பணத்தைத் திருடக் கூடாதுடா...''.

''நாம என்ன, அவரோட சட்டைப் பையிலிருந்தா திருடினோம்? நீ வசூல் செய்தே...எடுக்கிறே... இதிலேஎன்ன தப்பு? பதினெட்டு ரூபா அறுபத்தஞ்சு பைசா வசூல் ஆகாமே, பத்து ரூபாய் அறுபத்தஞ்சு பைசா மட்டும் சேர்ந்துச் சின்னு என்ன பண்ணுவே?''

''என்ன பண்ணுவேன்? இவ்வளவு தான் டீச்சர் சேர்ந்ததுன்னு கொடுப்பேன்...''

''இப்போ அது மாதிரி கொடுத்திடேன்.''

''தெரிஞ்சு போயிட்டா...'' பயத்துடன் கேட்டான் அபயநாதன்.

''எப்படிடா தெரியும்? அதான் லிஸ்ட் எழுத வேண்டாம்னு தலைமை ஆசிரியரே சொல்லிட்டாரே... ம்... தைரியமாச் செய்யடா... பொருட்காட்சி இனிமே எப்போ வருமோ...?'' என்று தைரியப்படுத்தினான்.

அசட்டுத் தைரியம் வென்றது.

மாலையில் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது.

பள்ளியின் சார்பில் நூற்று முப்பது ரூபாய் 65 காசு தந்தனர்.

கூட்டம் நாட்டுப் பாடலான 'ஜன கண மண' பாடலுடன் முடிந்தது.

''டேய்... ஆறு மணிக்குப் பொருட்காட்சி... நீ வீட்டுக்குப் போயிட்டு அஞ்சு மணிக்கெல்லாம் பஸ் ஸ்டாப்புக்கு வந்துடு... இருபது—ஏ பஸ் வரும். போயிடலாம்...'' என்றான் பிச்சை முத்து.

''ம்... இந்தாடா... இந்தப் பணத்தை நீயே வைச்சுக்கடா'' என்று எட்டு ரூபாயை பிச்சைமுத்துவிடம் நீட்டினான் அபயநாதன். அவனுடைய கைகள் நடுங்கின. அபயநாதன் சந்து திரும்பித் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

மணி ஐந்தரை.

இருபது—ஏ பஸ் வந்தது.

பொருட்காட்சி பஸ்.

கூட்டம் நிரம்பி வழிந்தது.

பிச்சைமுத்துவும் அபயநாதனும் முண்டியடித்து ஏறிவிட்டனர்.

இரண்டு கண்டக்டர்கள் டிக்கெட் கொடுத்தனர்.

''இரண்டு டிக்கெட் 'எக்ஸிபிஷன்' ஐந்து ரூபாய்த் தாளை நீட்டினான் பிச்சைமுத்து.

டிக்கெட்டையும் மீதி சில்லறையையும் கண்டக்டர் தந்தார்.

சின்ன பேப்பர் மணி பர்சில் பத்திரமாக வைத்துத் தன் கால் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான், பிச்சைமுத்து.

திடீரென்று பஸ் நின்றது.

பஸ்ஸின் இருபுறமும் டிக்கெட் பரிசோதகர்கள் 'திபுதிபு' என்று பஸ்ஸுக்குள் ஏறி டிக்கெட் கேட்டனர்.

பிச்சைமுத்துவிடமும் வந்தனர்.

பிச்சைமுத்து கால் சட்டைப் பையில் கையை விட்டான்.

திடுக்கிட்டான்.

அவன் முகம் பேயறைந்தது போல ஆயிற்று.

''என்னடா...? டிக்கெட் எங்கே...?'' சிங்கத்தைப் போல உறுமினார் செக்கிங் இன்ஸ்பெக்டர்.

''வந்து சார்... வந்து... காகித மணி பர்சில்... வைத்தேன் சார்... பர்சைக் காணோம் சார்... கண்களில் அழுகை முட்டக் கூறினான்.

அபயநாதனின் உடம்பு நடுங்கியது.

''என்னடா ரெண்டு பயலுகளும் நடிக்கறீங்களா? எங்களுக்கெல்லாம் சின்ன வயசிலேயே காது குத்தியாச்சு... ரெண்டு டிக்கெட்டைக் காட்டு... இல்லேன்னா.... அபராதம்... ரெண்டரையும் ரெண்டரையும் அஞ்சு ரூபாய் கட்டுங்க... அதுவும் இல்லேன்னா... மைனர் ஜெயிலில ரெண்டு சீட்டு ரிசர்வ் பண்ணிடச் சொல்றேன்...'' செக்கிங் இன்ஸ்பெக்டர் கறாராகச் சொன்னார்.

''நாங்க ஸ்கூல் பையங்க சார்,... ஏமாத்தலே.''

''ஓகோ... ஸ்கூல் பையன்களா? எந்த ஸ்கூல்?'' என்று கேலியாகக் கேட்டார், செக்கர்.

''வெக்காளி அம்மன் மிடில் ஸ்கூல்



சார்...'' அபயநாதனின் குரல் கேட்டதும், ''தம்பிகளா, இப்படி வாங்க'' என்று யாரோ கூப்பிட்டார்.

மாணவர்கள் பின்புறம் திரும்பினர்.

அங்கே —

மாலையில் பாடிய தண்டபாணி உட்கார்ந்திருந்தார், உடல் ஊனமுற்றோர் சீட்டில்.,

மாணவர்களுக்குச் சந்தோஷம்.

''சார்..சார்... இவரை வேணும்னுக் கேளுங்க சார். இவர் கூட எங்க ஸ்கூலுக்கு மூணு மணிக்கு வந்து நல்ல நல்ல பாட்டுகளாகப் பாடினுர் சார்...'' படபடப்பும், ஆவேசமும் நிறைந்த குரலில் கெஞ்சினுன் பிச்சைமுத்து.

''ஆமாம்சார், இவரையே கேளுங்க சார். இவர் கூட 'திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது. அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது... திருடனுப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது... திருடாதே... பாப்பா திருடாதே'ங்கிற பாட்டைப் பாடினுர்... கேளுங்க சார்...'' என்றுன் அபயநாதன்.

செக்கர் தண்டபாணியைப் பார்த்தார்.

''சார்... இந்தப் பையன்கள் சொல்றது உண்மைதான். நான் வெக்காளி அம்மன் மிடில்ஸ்கூலிலேபாடினேன்.. இந்தாங்க அஞ்சு ரூபா... அவங்களுக்காக...'' என்று தன் 'பேக்'கைத் திறந்து, தடவிப் பார்த்து ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினுர்.

''தம்பிகளா... எங்கே போறீங்க?''

''பொருட்காட்சிக்குப் புறப்பட்டோம். பணம் போயிடிச்சு...'' அழுதான் பிச்சைமுத்து.

''அழாதேப்பா... இந்தா... இந்தப் பத்து ரூபாயை... இரு இரு... ஏதோ சில்லறைக் காசு கூட இருக்கு... இதை எடுத்துக்கிட்டுப் போயி பொருட்காட்சியைப் பார்த்துவிட்டு கவனமா வீட்டுக்குப் போங்க...'' தண்டபாணி ஒரு பத்து ரூபாய்த் தாளேயும், கொஞ்சம் சில்லறையையும் தந்தார்!

சரியாகப் பத்து ரூபாய் அறுபத்தைந்து காசு இருந்தது. இரண்டு பேரும் திகைத்தனர்!

குயில் - ஓர் அன்புத் தெய்வம்

பிரேமா பாலசுப்ரமண்யம்

அன்று கணேஷின் வீடே அமர்க்களப்பட்டது. காரணம்.... லக்ஷ்மிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளதுதான். லக்ஷ்மி என்றதும் ஏதோ பெண்மணியைக் குறிப்பதாக எண்ண வேண்டாம். அன்பாலும்பாசத்தாலும் தன்னுடைய வாழ்வையே காவியமாக்கிய குயிலி என்னும் கன்றுக் குட்டியின் தாய்தான் லக்ஷ்மி. ஆம். லக்ஷ்மி சலவை செய்தது போன்ற ஓர் அழகிய வெண்ணிறப் பசு மாடு.

கன்றுக் குட்டி, தாயைப் போல அல்லாமல் குயிலைப் போல் கருமை நிறமாக இருந்ததால், அவள் பிறந்த அன்றே கணேஷின் தாய் பார்வதியும், ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக வேலை பார்க்கும் அவன் தந்தை மகாதேவனும் சேர்ந்து அவளுக்கு 'குயிலி' என்று பெயர் வைத்தனர். அவள் பிறந்து சில நிமிடங்களில் பார்வதியின் உதவியோடு அழகாக பால் குடித்தாள். சில நாட்கள் சென்றதும் பால் குடித்த மகிழ்ச்சியில் துள்ளி விளையாட ஆரம்பித்தாள். குயிலி ஓட ஆரம்பித்து விட்டால் எவராலும் அவளைப் பிடிக்கவே முடியாது. கணேஷும் அவன் பெற்றோரும் குயிலியிடம் விளையாடுவதொன்றையே தம் முக்கிய பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். குயிலி அபூர்வமாகச் செய்த செயல்களுக்கு அளவே இல்லை. அதனை முழுமையாக உணர்ந்தவர்கள் 'மாடுதானே! அதற்கு ஏது அறிவு இருக்கப் போகிறது?' என்று ஒருபோதும் நினைக்க மாட்டார்கள்.

வீட்டிற்கு யாராவது வந்தால் உடனே, 'அம்மா' என்று குரல் கொடுத்து, தன் எஜமானர்களுக்குத் தெரிவிப்பாள். குயிலிக்கு தன் தாய் லக்ஷ்மியிடமிருந்து நிறையப் பால் கிடைத்தது. போதாதகுறைக்கு சாம்பார் சாதம், காப்பி, சோற்றுக் கஞ்சி, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, காய்கறித் தோல்கள், முறுக்கு, பிஸ்கெட், வாழைப்பழம் இவை போன்ற 'நொறுக்குத் தீனி'களும் அவளுக்கு நிறையக் கிடைத்தன. குயிலிக்குக் கொடுப்பதற்காகவே அவ்வீட்டில் அனைவரும் வாழைப் பழத்தைத் தின்பார்கள். அவளுக்குத் தோலோடு கொஞ்சம் பழத்தையும் தருவது என்பது அனைவரின் வழக்கமாயிற்று.

எந்தப்பொருளை உண்ணக்கொடுத்தாலும் குயிலி எழுந்து நின்றுதான் உண்பாள். கையிலிருக்கும் பழத்தோல், காய்கறிகளின் தோல் போன்றவற்றை அவள் வாங்கித் தின்னும் அழகே அழகு. கையை வாயினுள் விட்டால்கூட கொஞ்சமும் விரலைக் கடித்துவிடாமல் நாக்கை நீட்டி அவள் பெற்றுக் கொள்வாள்.

மகாதேவனின் குடும்பத்தில் எவர் வெளியூர் சென்றுவிட்டு வந்தாலும் முதலில் அவர்கள் செல்வது குயிலியிடமே. அவளுக்கும் அவர்களைப் பிரிந்த ஏக்கம் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும். அவர்களை லேசாக நக்கியும், முகர்ந்து பார்த்தும் தன் அன்பை வெளிப்படுத்துவாள். தன் அருகில் எவர் வந்தாலும் அவர்களை உரசிக் கொண்டு நின்றால்தான் குயிலிக்குத் திருப்தி.

அனைவருக்கும் குயிலியிடம் உள்ள மிகுதியான அன்பால் அவளை மிகவும் சொகுசாக வளர்த்தனர். குளிர் காலம் வந்துவிட்டால் கோணிப்



என்ன சொல்லுவாள்?

> "எங்கம்மாவுக்குத் தலைவலி வந்தால், என்னைத் தலையைப் பிடிச்சுவிடச் சொல்லுவாள். உங்கம்மா என்ன சொல்லுவாள்?"
>
> "எங்கம்மா என்னை வெளியே போய் விளையாடச் சொல்லுவாள்."

பையால் அவளைப் போர்த்தி வெதுவெதுப்பாக வைப்பார்கள். கணேஷ் தன் கையில் சீப்பு ஒன்றை வைத்துக்கொண்டு குயிலியின் உடம்பு முழுவதையும் வாரிவிடுவான். இது குயிலிக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும். கொசுக்கள் அவளைக் கடிக்காமலிருக்க, கொசு விரட்டும் களிம்பை தேய்த்து விடுவார்கள்.

குயிலி மிகவும் சுத்தக்காரி. மனிதர்கள்கூட அவளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன. சாணம் போட வேண்டுமென்றால் அவள் கயிறு எட்டிய மட்டும் தள்ளி நின்றுகொண்டுதான் போடுவாள். எக்காரணம் கொண்டும் சாணத்தை மிதித்து, தான் கட்டப்பட்டுள்ள இடத்தை அசுத்தமாக்கிக்கொள்ளவே மாட்டாள். தரையில் வைக்கோல் துண்டு போன்ற பொருட்கள் ஏதாவது இருந்தால், அதை சற்றும் மண் ஒட்டாதவாறு நாக்கினால் அழகாக எடுத்துச் சாப்பிட்டு விடுவாள்.

மேய்ச்சலுக்காக அவளைத் தினமும் காலை ஒன்பது மணிக்கு அவிழ்த்து விட்டால் சரியாக மதியம் பன்னிரண்டரை மணிக்கு வீடு திரும்பி விடுவாள். கொல்லைப்புற கேட்டின் கொக்கியை தன் அழகிய கொம்பால் எடுத்து விட்டு, கேட்டைத் தள்ளிக் கொண்டு, வீட்டுக்கு வந்து அவள் 'அம்மா' என்று குரல் கொடுக்கும் சமயம் நிச்சயமாக மதியம் மணி பன்னிரண்டரையாக இருக்கும்!

கணேஷ் வீட்டைச் சுற்றியுள்ள மரங்களிலிருந்து குயிலிக்கு மிகவும் ஆசையாக இலைகளைப் பறித்துப் போடுவான். அவளும் அவற்றை விரும்பிச் சுவைப்பாள். வீட்டில் புதியதாக எந்தப் பட்சணம் செய்தாலும் அதில் குயிலிக்கும் பங்கு உண்டு. இப்படி மிகவும் அருமையாக வளர்க்கப்பட்ட குயிலி நன்கு கொழுகொழு என்று ஆகிவிட்டாள்.

அந்த ஊரில் அழகிய, திடகாத்திரமான மாடுகளுக்குப் பரிசு வழங்கப்படும் என்று தண்டோரா போடப்பட்டது. மகாதேவனிடம் வேலை பார்க்கும் பியூன் அய்யாசாமி வீட்டுக்கு வந்து, "ஐயா! நம் பசுவைப் போட்டிக்குக் கூட்டிச் செல்கிறேன். முதல் பரிசான எவர்சில்வர் குடம் நமக்குத்தான்" என்றான். வீட்டில் யாவருக்கும் ஒரே பெருமையும் மகிழ்ச்சியுமாக இருந்தது. அய்யாசாமி குயிலியை அழைத்துச் சென்றான். சென்றவன் சில நிமிடங்களிலேயே வீடு திரும்பி விட்டான். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். "என்னப்பா? அதற்குள்ளேயே திரும்பிவிட்டாயே! என்ன ஆச்சு?" என்று வினவினார் மகாதேவன். அதற்கு அய்யாசாமி, "ஐயா, நான் ஏதோ ஒரு வேகத்தில் நம் வீட்டுப் பசுவைக் கொண்டு சென்றுவிட்டேன். ஆனால், பாதி வழியிலேயே ஏதாவது கண்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று தோன்றியது; உடன் திரும்பி விட்டேன். குடம் நமக்கு வேண்டாம்; குயிலியின் மேல் கண் படாமல் இருந்தால் அதுவே போதும்!" என்றான். எல்லோருக்கும் அய்யாசாமியின் கூற்று சரியானதே என்று தோன்றியது.

அன்று மாட்டுப் பொங்கல் வந்தது. அனைவருக்கும் கும்மாளம்தான்! குயிலியை அன்று சோப்பு போட்டு குளிப்பாட்டி, சந்தனம், குங்குமம் இவை வைத்து, கொம்புகளுக்கு அழகிய வர்ணம் தீட்டி, பல நிற மணிகள் கட்டி, கழுத்தில் நெல்லி இலை மாலை, நெட்டி மாலை, மல்லிகை மாலை, கதம்பமாலை, மாவிலைமாலை யாவற்றையும் அணிவித்து அழகு செய்து அனைவரும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். குயிலிக்கு அன்று நிறைய நெய் விட்டு, முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம்



இவை நிறையப் போடப்பட்ட இனிப்பான சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும். அவளும் அதை ஆசையோடு சாப்பிடுவாள்.. அன்புத் தெய்வமாகிய குயிலிக்கு அன்று காட்டப்படும் கற்பூரம், சாம்பிராணி, போன்றவை மிகப் பொருத்தமாக அமையும்.

குயிலி இப்போது பெரிய மாடாகி விட்டாள். அவளுக்கு அழகான பெண் கன்று ஒன்று பிறந்தது. மை போட்டது போல் அழகிய கண் இருந்ததால் அவளுக்கு 'கண்ணி' என்று பெயர் சூட்டப்பட்டது. தன் எஜமானர்களிடம் இருப்பது போலவே தன் கன்றிடம் அளவற்ற பாசத்தைப் பொழிந்து கொண்டிருந்தாள் குயிலி. கண்ணியின் விளையாட்டைப் பார்க்கும்போது குயிலிக்குப் பெருமை பிடிபடாது. அவளைத் தன் நாவால் நக்கியே குளிப்பாட்டி விடுவாள்! குயிலிக்கு எப்போதும் தன் கன்றை ஒட்டினாற்போல் நின்றால்தான் பிடிக்கும். தாயையும் கன்றையும் சற்று விலக்கிக் கட்டினால் கூட குயிலி ஏங்கிவிடுவாள். அதனால், குயிலியையும், கண்ணியையும் அருகருகே கட்டிவிடுவார்கள். ஆனால் ஒரு நாள்கூட பால் கறக்கும் வேளை தவிர தன் குட்டியை, குயிலி பால் குடிக்க அனுமதித்ததே இல்லை. இது பலருக்கு மிகவும் அதிசயமாக இருந்தது.

தன் கன்றுக்கும், கணேஷின் குடும்பத்துக்கும் குயிலி நிறையப் பாலை முழுதைத் தந்தாள். பால் கறக்கும்போது சில மாடுகள் பாலை முழுவதுமாகத் தராமல் தம் கன்றுகளுக்கென பாலை அடக்கிவிடும். ஆனால், குயிலிக்கு இப்படியெல்லாம் பாலை அடக்கத் தெரியாது. களங்கமற்ற குழந்தை போன்ற குயிலி தன்னிடம் இருக்கும் பாலை அப்படியே தந்துவிடுவாள். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின்,

'பாலைப் பொழிந்து தரும் பாப்பா—
அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா'

என்ற பாடலுக்கு, இலக்கணமாய் இருந்தாள் குயிலி.

இவ்வாறு பாலையும் அன்பையும் பொழிந்து வந்த குயிலிக்கு விதி செய்த சதி போல் 'தொண்டை அடைப்பான்' என்ற ஒரு கொடிய வியாதி வந்தது. அவள் கழுத்துப் பகுதி முழுவதும் பெரியதாக வீங்கி உணவு உண்பது கூட் அவளுக்குக் கடினமாக இருந்தது. வைக்கோலுக்கு ஒருவிதமாகவும், புல்லுக்கு ஒரு மாதிரியும், கழுநீருக்கு இன்னொரு மாதிரியும் பல தினுசுகளில் 'அம்மா' என்று அழைத்து வந்த குயிலியின் குரல் சற்றும் வெளி வராதபடி செய்துவிட்டது இந்நோய்.

முன்பு கண்ணியை ஒட்டியவாறே நின்றிருந்த குயிலி இப்போது கட்டாயமாகத் தன் கன்றிடமிருந்து பிரித்து, தனியாகக் கட்டப்பட்டாள். தொண்டை அடைப்பான் நோய் கண்ணிக்கும் பரவ விடாமல் இருக்க வைத்தியரின் ஆலோசனைப்படி இவ்வாறு செய்யப்பட்டது. நோய் வாய்ப்பட்ட குயிலியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்த வண்ணம் இருந்தது. வாயில்லா ஜீவனான அவளால் தன் வேதனையையோ, உணர்ச்சிகளையோ வேறு எப்படி தெரிவிக்க முடியும்?

குயிலிக்கு வந்த நோயால் வீடே களை இழந்து காணப்பட்டது. மிருக வைத்தியர் 'பொதுவாக இந்த வியாதி

ஏற்பட்டால் ஒரு வாரத்துக்கு மேல் மாடுகள் பிழைப்பது கடினம்' என்றார். கணேஷின் வீட்டில் அனைவருக்கும் அழுகையாய் வந்தது. விடாமுயற்சியுடன் தினமும் குயிலிக்கு ஊசி, வாய் வழி மருந்து, உணவு இவற்றைக் கொடுத்து வந்தனர். கழுத்தில் இருந்த வீக்கம் பரவி முன் கால்களும் வீங்க ஆரம்பித்தன. குயிலியால் இப்போது உட்காரவோ, எழுந்திருந்து நிற்கவோ முடியவில்லை. உட்கார்ந்ததால் ஏற்பட்ட வலியைப் பொறுக்க முடியாமல் நிற்கவும், நின்றதால் உண்டான வலியைத் தாங்க முடியாமல் உட்காரவும் செய்தாள். அவளுடைய வேதனையைப் போக்க, பலவீக்கம்குறைக்கும் தைலங்களைத் தேய்க்கவும் மருந்துகளைப் புகட்டவும் செய்தனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகப் போயிற்று. இப்படியே முப்பது நாட்கள் கடந்தன. குயிலியின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பார்வதி குயிலியின் அருகில் சென்று, பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு, அவளைத் தடவிக் கொடுத்தாள். அப்போதுதான் குயிலியின் கயிறு மிகவும் அழுக்காகி, பிய்ந்து விடும் நிலையில் இருப்பதைக் கண்டாள். உடனே பழைய கயிற்றை அகற்றி, புதுக் கயிற்றால் குயிலியைக் கட்டினாள்.

குயிலி என்னும் அன்புத் தெய்வத்தினுடைய வாழ்வின் இறுதி அத்தியாயம் வந்துவிட்டது. அன்றிரவு அவளுக்கு மரண அவஸ்தை ஏற்பட்டது. அவளுடைய கால்கள் முறுக்கிக் கொள்ள ஆரம்பித்தன. அவளால் நிற்கவோ, உட்காரவோ இயலவில்லை. துடியாய்த் துடித்தாள். திடீரென என்ன நினைத்துக் கொண்டாளோ.... தன் பலம் முழுவதையும் பயன்படுத்தி, கயிற்றை அறுத்துக் கொண்டு தன் கன்றுக் குட்டியிடம் சென்றாள். இறுதியாக ஒருமுறை கண்ணியை முகர்ந்து பார்த்தாள். உடனே அங்கேயே கீழே விழுந்து தன் உயிரை நீத்தாள். ஒன்றும் புரியாத கண்ணியோ, பல நாட்களாக தன் அருகில் வராமல் இருந்த அம்மா இப்போது தன்னிடம் வந்து 'படுத்துக் கொண்டிருப்பதை'ப் ' பார்த்து, மகிழ்ச்சியுற்று அவளை முகர்ந்து பார்க்கவும் நாவால் நக்கவும் செய்தாள்.

மறுநாள் காலை வழக்கத்தைவிடச் சற்றுமுன்னதாகவே எழுந்துவிட்ட பார்வதி முதலில் குயிலியைப் பார்க்க எண்ணி, அவள் கட்டப்பட்டிருந்த இடத்தை ஜன்னல் வழியாக நோக்கினாள். அங்கு குயிலியைக் காணவில்லை. முதல் நாள் கட்டப்பட்ட புதுக் கயிறு பாதி அறுந்த நிலையில் இருந்தது. அதிர்ச்சியுற்ற பார்வதி வீட்டிற்கு வெளியே வந்து பார்த்ததும் கண்ணியின் அருகில்தெய்வமாகிவிட்ட குயிலியைக் கண்டாள். 'பல நாட்களாக நோய்வாய்ப்பட்டுப் பலவீனமான நிலையில் இருந்த குயிலியால் எப்படி புதுக் கயிற்றை அறுத்திருக்க முடியும்? இதுதான் பாசத்தின் வலிமையோ! என்று நினைத்தாள் பார்வதி. தன் அன்புக்குழந்தையின் அருகில்கண்ணை மூடிக் கொண்டு தியானம் செய்வது போல் படுத்துக் கிடந்த குயிலியைக் கண்டதும் பார்வதியின் கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்த வெள்ளம்போல் பெருகிற்று. 'ஓ.... எங்கள் அருமைக் குயிலி.... உன்னுடைய வேதனையை நீ பெரியதாக நினைக்கவில்லை. உன் நிலையைப் பார்த்து நாங்கள் பட்ட கஷ்டத்தை உன்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல்போனதால் இறைவனை அடைந்தாயோ! தெய்வமாகிவிட்ட குயிலி! எங்கள் குடும்பத்தை என்றென்றும் அருள்புரிந்து ஆசீர்வதிப்பாய் அம்மா!' என்று சொல்லி, பார்வதி குயிலியின் உடலைத் தொட்டு வணங்கினாள்.



"அம்மா! கரெண்ட் வந்திடுச்சு. மெழுகு வத்தியை அணைச்சுடறேன்..."

திரை விலகியது!

— டி. ஜானகி —

''சென்னை மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு உங்களை அழைத்துச்செல்லப்போகிறோம். பணம் 50 ரூபாய்தான். சேர விரும்பும் மாணவர்கள் திங்கட்கிழமை அன்று என்னிடம் பெயரையும் பணத்தையும் கொடுத்துவிட வேண்டும்.''

இவ்வாறு ஆசிரியர் கூறி முடித்தவுடன் வகுப்பில் சலசலப்பு ஏற்பட ஆரம்பித்தது.



பாலு சொல்கிறான்:—

''பாலு எக்ஸ்கர்ஷனிலே நீயும் கலந்து கொள்ளப் போறியா?''

கேட்டவன் என் பக்கத்து டெஸ்கில் அமர்ந்திருக்கும் செல்லையன் தான்.

அந்த வருஷம்தான் நான் அப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்தேன். என்னைப் போலவே செல்லையனும் பள்ளிக்குப் புதிய மாணவன் தான்; நெருங்கிய நட்பு கிடையாது. சும்மா பள்ளிப் பழக்கத்தோடு சரி.

அவனுக்கு என்ன பதில் சொல்வது?

''பாலு, உங்கப்பாவுக்கு என்ன வேலை?''

மறுபடியும் கேள்வி கேட்டான்.

செல்லையனைப்பார்த்தேன். சீருடையில் 'பளிச்'சென்று தெரிந்தான்.

ஒரு விநாடி யோசித்துவிட்டு, ''எங்கப்பா ஒரு பெரிய ஹோட்டலுக்கு முதலாளி'' என்றேன்.

''அப்புறம் என்ன? உங்கப்பாவைக் கேட்டு வாங்கிக் கொண்டு வருவது தானே?''

நான் புன்முறுவல் பூத்தேன்.

''பெரிய ஹோட்டல் முதலாளியான உங்கப்பாவுக்கு ஐம்பது ரூபாய் என்ன பெரிய தொகையா? ஏன் காசு கொடுக்க மாட்டாரா?''

''ஏன் கொடுக்கமாட்டார்? நான் கேட்டு எங்கப்பா இல்லை என்றே சொல்லமாட்டார். கட்டாயம் வாங்கி வருவேன்'' என்று பெருமையோடு பதில் சொன்னேன்.



செல்லையன் சொல்கிறான்: —

எக்ஸ்கர்ஷனுக்குப் பணம் வேண்டும் என்று அம்மாவைக் கேட்டேன். அம்மா, அப்பாவைக் கேட்கும்படி சொல்லிவிட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மணி இரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. சூரியனின் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல்என் தந்தைவேலை செய்து கொண்டிருக்கும்பாரதி நகரை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

ஆனால்.... என் மனமோ... முந்தாநாள் நடந்த நிகழ்ச்சியையே நினைத்துக் கொண்டிருந்தது.

நான் பாலுவைக் கேட்டது போலவே பாலுவும் என்னைப் பார்த்து ''செல்லையன்! டூருக்கு நீயும் வரயா? உங்கப்பாவுக்கு என்ன வேலை?'' என்று கேட்டான்.

புதிய டிரஸ்ஸில் பாலு பிரகாசமாகத் தெரிந்தான். பெரிய ஹோட்டல் முதலாளியின் மகனல்லவா? கட்டாயம் வருவான்! நானும் கட்டாயம் போக வேண்டும். என்ன பதில் சொல்வது?

''எங்கப்பா ஒரு காண்ட்ராக்டர். பெரிய பெரிய கட்டட வேலைகள் எல்லாம் அவர் மேற்பார்வையில் தான் நடக்கும்'' என்றேன்.

''ஹாய்யா! காண்ட்ராக்டரின் மகனுக்குக் காசுக்கு என்ன பஞ்சம்? அப்ப நீயும் வரே?''

''ஆமாம்'' என்றேன் கர்வத்தோடும் பெருமிதத்தோடும்.

என் சிந்தனை தடைபட்டது. என்னையும் அறியாமல் என் கால்கள் பாரதி நகரின் அப்பெரிய கட்டடத்தின் முன்பு நின்று கொண்டிருந்தன.

அன்று அக்கட்டடத்தின் மேற்பகுதியை மூடுகிறார்கள் போலிருக்கிறது. கிட்டத்தட்ட நூறு சித்தாள்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஜல்லிக் கற்கள், சிமெண்ட், இரும்புக் கம்பிகள் ஆகியவைகள் மேஸ்திரியின் கை வண்ணத்தால், கட்டடத்தின் மேற்பகுதியைக் கொஞ்சம்கொஞ்சமாகமூடிக்கொண்டிருந்தன.

சூப்பர்வைசர் எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தார்.

''ஆளுக்கு இன்னொரு கப் டீ தரப்படும். சாயந்தரம்தான் சாப்பாடு'' என்று அவர் சத்தமாகக்கூறிக்கொண்டிருந்தார்.

வியர்வையில் நனைந்தபடி அனைவரும் வேலை செய்து கொண்டிருந்தனர்.

என் தந்தையை என் கண்கள் தேடலாயின.



பாலு சொல்கிறான்: —

''ஹோட்டலுக்கு வா, பணம் தருகிறேன்'' என்று என் தந்தை சொன்னதால், கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல்,நடந்து,மகிழ்ச்சியோடு ஹோட்டலுக்குள் நுழைந்தேன்.

கல்லாவில் மானேஜர் நாராயணசாமி உட்கார்ந்திருந்தார். குழாயடிக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டேன்.

வெப்பம் சற்றுக் குறைந்தாற்

போன்ற உணர்வு.

என் பார்வை எதேச்சையாக சமையல் அறைப்பக்கம் சென்றது.

அங்கே —

வெளியே அடிக்கும் பகலவனின் வெம்மைக்குச் சவால்விடுவதுபோல், பகாசுரன் போன்ற அடுப்புக்கு முன் சமையல் செய்பவர் பெரிய பெரிய பாத்திரங்களில் சமைத்துக் கொண்டிருந்தார். உடல் முழுவதும் வியர்வை மழை!

''கரெக்டா நாலு மணிக்கு வேன் வந்துவிடும். பாரதி நகரிலே அந்த வீட்டுக்குப் போகணும். சீக்கிரம்'' என்று நாராயணசாமி கூவிக் கொண்டிருந்தார்.

நான் என் தந்தையை நோக்கிச் சென்றேன்.



செல்லையன் சொல்கிறான்: —

''டேய் செல்லையன்! நீயும் சாப்பிட உட்காரு'' என்று சூப்பர்வைசர் கூறவே நானும் சாப்பிட உட்கார்ந்து விட்டேன்.

ஒன்றோடு ஒன்று ஒட்டாது பொல பொலவென்ற சோறு. அதன் மீது எனக்குப் பிடித்த வெங்காயம் முருங்கக்காய் சாம்பார். உருளைக் கிழங்கு பொறியல். அப்பளம். சாம்பார் ஊற்ற வந்த பையனைப் பார்த்து நான் திடுக்கிட்டேன். அவன் யார் தெரியுமா?

என்னுடன் பயிலும் பாலுதான்! அவனும் என்னை அங்கே எதிர்பார்க்கவில்லை போலும்.

என் அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த என் தந்தை திடீரென்று, தனக்கு ரசம் ஊற்ற வந்த ஆளைப் பார்த்து, ''நீ..... நீ..... ராமு இல்லே... இங்கே எங்கே வந்தே?'' என வினவினார்.

''ஓ.... நீ மாணிக்கமா? நாம ரெண்டு பேரும் சந்திச்சு எத்தனை வருஷமாச்சு. எத்தனையோ ஊரையெல்லாம் சுத்திட்டு, கடைசியா இந்த வருஷம்தான் பட்டணம் வந்து சேர்ந்தேன். ஹோட்டலிலே சமையல் வேலை செஞ்சுண்டிருக்கேன். இதோ... இவன்தான் என் ஒரே மகன் பாலு. இவனை நன்றாகப் படிக்க வைக்கணும்னுதான் அடுப்படியிலே வேகிறேன். வேனிலே சாப்பாட்டை ஏத்தும்போது நானும் உதவிக்கு வாரேன்னு சொன்னான்.... அதனாலே அழைச்சுண்டு வந்தேன். நீ சௌக்கியமா இருக்கியா? என்ன செய்யறே?' என படபடவென்று கூறிக் கொண்டிருந்தார்.

நான் திடுக்கிட்டேன். பாலுவின் அப்பா ஒரு சமையற்காரரா?

என் தந்தை பேசவே என் சிந்தனை தடைபட்டது.

''ராமு, என் நிலைமையும் உன் மாதிரிதான். எங்கெல்லாமோ சுத்தினேன். கெட்டும் பட்டணம் சேருன்னு இந்த வருஷம்தான் நானும் மெட்ராசுக்கு வந்து செட்டிலாயிட்டேன். இதோ, இவன்தான் என் மூத்த மகன் செல்லையன். இவனை நல்லாப் படிக்க வைக்கணும்னுதான் மழை, வெயிலுன்னு பாராமே வேலை செஞ்சுக்கிட்டிருக்கேன்.''

என்னையும் அறியாமல் என் தலை கீழே குனிந்தது. நான் ஒரு சித்தாளின் மகன் என்பதை, பாலு அறிந்து கொண்டுவிட்டானே!

''என்னவோ, மாணிக்கம். நாமதான் அந்தக் காலத்திலே ஒழுங்காப் படிக்கலே. நம்ம மகன்களாவது நன்றாகப் படிச்சு, டாக்டரா, கலெக்டரா வரட்டும்'' என்றார் பாலுவின் தந்தை. ''பிற்காலத்திலே பெரிய ஆபீசரா வரணும்னுதான் நாம ரெண்டு பேரும் நம்ம பிள்ளைங்களை பணக்கார வீட்டுப் பிள்ளைங்க மாதிரி

வளர்த்துக்கிட்டிருக்கிறோம்'' என்று என் தந்தை சொல்லவே என் விழிகள் பனித்தன.



பாலுவின் தந்தை கூறுகிறார்: —

''அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று பாலு கூறவே நான் திடுக்கிட்டேன்.

படுக்கப் போன நான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

''என்னடா..... என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''அப்பா! ஏதோ ஒரு போலி கௌரவத்துக்கு ஆசைப்பட்டு, நீங்க ஒரு ஹோட்டல் முதலாளின்னு செல்லையன்கிட்டே சொன்னேன். நான் பணக்கார வீட்டுப் பிள்ளை மாதிரி ஜம்பம் அடித்துக்கொண்டேன். நான் அழுக்கு இல்லாத சட்டையைப் போட்டுக் கொள்கிறேன். ஆனால், அடுப்படியிலே நீங்க எப்படி வேகறீங்கன்னு இன்னிக்குத்தான் கண்ணாலே பார்த்தேன். எனக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. என் மனசிலே இருந்த போலி கௌரவத் திரை விலகிவிட்டது. நான் சுற்றுலாவுக்குப் போகவில்லை. அந்தப் பணத்திற்கு நீங்கள் நல்ல டிரஸ்ஸாக எடுத்துக் கொள்ளுங்கள். இனிமேல் படிப்பில் இன்னும் அதிகக் கவனம் செலுத்தி, கட்டாயம் உங்கள் கனவை நனவாக்குவேன். இது உறுதி'' என்றான்.

இதைக் கேட்ட என் கண்கள் மகிழ்ச்சியினால் நீரைச் சொரிந்தன.



செல்லையனின் தந்தை சொல்கிறார்: —

''அப்பா! நான் ஏழை வீட்டுப் பையன் என்பதால் பாலு என்னோடு ஃபிரண்டாக இருக்க மாட்டான்னு நினைத்துக் கொண்டு அவனிடம் பொய் சொன்னேன். என்னை மன்னிச்சுடுங்க. நாளைக்கு பாலுகிட்டே மன்னிப்புக் கேட்கப் போறேன். நான் சுற்றுலாவிலே கலந்து கொள்ளப் போறதில்லே. அந்தப் பணத்திலே அம்மாவுக்கு ஒரு புடைவை வாங்கிக் கொடுங்க. காந்தி மகான் கூறியது போன்று உயர்ந்த எண்ணங்களோடு கூடிய எளிய வாழ்க்கைதான் எனக்குப் பிடித்திருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பத்தில் பிறந்த எத்தனையோ பேர்கள் தலைசிறந்த தலைவர்களாக வரவில்லையா? இன்று வெயிலில் நீங்கள் செம்மண்ணிலும், புழுதியிலும் உழைப்பதைக் கண்ணால் பார்த்த பிறகுதான் எனக்குப் புத்தி வந்தது. என் மனத்தில் இருந்த பொய்மை என்ற திரை விலகிவிட்டது'' என்று படபடவென்று கூறியபடியே என் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதான் என் மகன் செல்லையன்.

பிறகு —

''அப்பா.... அப்பா.... நான், இனி மேல் நன்றாகப் படித்துப் பெரிய பதவிக்கு வருவேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் என் உடல் வலி எல்லாம் எங்கோ சென்றுவிட்டது. என் கண்களில் கண்ணீர்.... என்ன கண்ணீர், தெரியுமா? ஆனந்தக் கண்ணீர்!

பழைய கதை: புதிய பாடல்



அசோக மன்னர்

அழ. வள்ளியப்பா

அரச ராகப் பட்டம் சூட்டிக்
கொண்ட ஆண்டிலே
அசோக மன்னர் படையெ டுத்தார்
கலிங்க நாட்டிலே.
திறமை யாகத் திட்டம் தீட்டிப்
போர் புரிந்ததால்,
ஜெயித்து விட்டார் கலிங்க நாட்டைச்
சீக்கி ரத்திலே.

'வெற்றி! வெற்றி! வெற்றி!' என்றே
வீரர் கூடியே
மிகவும் மகிழ்ச்சி யோடு முழக்கம்
செய்யும் போதிலே
சுற்றிப் பார்த்தார் போர்க் களத்தை
மன்னர் அசோகர்.
துடிது டித்துக் கலக்க முற்றுக்
கண்ணீர் சிந்தினர்.

இருபு றத்தும் நாட்டுக் காகப்
போர்பு ரிந்தவர்
எண்ணில் லாத வீரர் அங்கே
இறந்து கிடந்தனர்.

சிரம்இ ழந்து கரம்இ ழந்து
கால்இ ழந்ததால்,
செத்துக் கொண்டே இருந்த வீரர்
பலரைக் கண்டனர்.

பெண்டு பிள்ளை உறவை எண்ணிக்
கண்ணீர் விட்டவர்,
பெற்றோர் தம்மை நினைத்து விம்மி
விம்மி அழுதவர்,
மண்ணில்புழுவைப்போலத்துடிக்கும்
கோரக் காட்சியை
மன்னர் பார்த்துப் பார்த்து மிகவும்
மனம் கலங்கினர்.

"எனது நாட்டை விரிவு படுத்தப்
போர்தொ டுத்ததால்
எத்தனைபேர் இனிய உயிரை
இழந்து விட்டனர்!
இனிமேல் எந்த நாட்டின் மீதும்
படைஎ டுப்பதே
இல்லை, இல்லை" என்று மன்னர்
சபதம் செய்தனர்.




ஈர நெஞ்சம் கொண்டதால்
இரக்க நெஞ்சம் கொண்டதால்
போரை வெறுத்த மன்னரோ
புத்த மதத்தில் சேர்ந்தனர்.

தூண்கள், பாறை, குகைகளில்
தூய புத்தர் மொழிகளைக்
காண்ப தோடே அனைவரும்
கடைப்பி டிக்கப் பொறித்தனர்.

அன்பு, அகிம்சை வழிகளில்
ஆட்சி நடத்தி வந்தனர்.
நன்மை செய்து மக்களின்
நலன்கள் எல்லாம் பெருக்கினர்.

புத்த மதத்துக் கொள்கைகள்
புவியில் எங்கும் பரவிட
மெத்த முயற்சி செய்தவர்
மேன்மை மன்னர் அசோகராம்.

பட்டாம் பூச்சி



பட்டாம் பூச்சி, பட்டாம் பூச்சி
எட்டிப் போகாதே! — உன்னைத்
தொட்டுப் பார்த்து முத்த மிட்டு
விட்டிடு வேன் நான்!

பட்டுச் சொக்காய் உனக்கெதற்கு? எனக்குத் தந்திடு — நீ
பறக்கும் போது முள்ளுப்பட்டுக் கிழிந்து போகுமே!
பட்டுப் பூவில் பட்டுநீயும் சிவந்து போறாயா — நீ
பட்டதாலே பூவும்கூடச் சிவந்து போச்சுதா?

பூப்பூ வாசத் தாவித்தாவி ஊஞ்சல் ஆடவா — நீ
பூத்த பூவிற் குள்ளிருந்து தேன்குடிக்கவா?
வாடிப் போகும் பூவைக்கூட வட்டம் போட்டுநீ
வாச னமாய் மாற்றிடவா பாட்டுப் பாடுறாய்?

பூத்த பூவும் வெயிலிலே வேர்த்துப் போனதா? — உன்
பொன் இறகை ஆட்டி ஆட்டி விசிறுகின்றாயா?
பட்டு இறக்கைப் பல்லக்கிலே நான்இருக்கவா?
எட்டுத் திக்கும் என்னைநீயும் இட்டுப் போவியா!

கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கிறேனே, வந்து போறியா?
கொஞ்சம் நீயும் வந்து, நெஞ்சம் குளிரச் செய்வியா?
குச்சி மீசைக் குறும்புக் காரா, இங்கே வந்திடு.
குச்சி ஐஸ்ரீம் தந்திடுவேன், கூட ஆடிடு!

—எஸ். வரதராஜன்

எது  பாவம்?

வடலூர் வள்ளலார் சொல்கிறார்:

* ஏழைகளின் வயிறு எரியச் செய்வது — பாவம்.

* நல்லோர் மனத்தை நடுங்கச் செய்வது — பாவம்

* மனம் ஒத்த நட்புக்கு வஞ்சகம் இழைப்பது — பாவம்

* கோள் சொல்லிக் குடும்பம் கலைப்பது — பாவம்.

* குருவை வணங்காமல் கூசி நிற்பது — பாவம்

* பெற்றோர் பேச்சைத் தட்டி நடப்பது — பாவம்

— ப. தேவேந்திரகுமார் (1418),
புரசைவாக்கம்.



ஆபத்தோடு ஒரு விளையாட்டு

வி.ர.வசந்தன்

எதைச் செய்தாவது பிறரது கவனத்தைக் கவர்வதில் விவேக்கிற்கு ஒரு தனி ஆசை. அவன் பெற்றோர் அவனைத் தனியாக வீட்டில் விட்டுச் செல்வதே இல்லை. ஏனென்றால் திரும்பி வரும்போது நிச்சயம் வீட்டை அமளி துமளிப்படுத்தி வைத்திருப்பான். வீட்டிலுள்ள நிலைக் கண்ணாடி, பீங்கான் டீ செட் என்று அவனது வீர விளையாட்டுக்களுக்குப் பலியாகிய பொருட்கள் ஏராளம்!

அவன் பெற்றோர் அவசரமாக வெளியூரில் ஒரு திருமணத்திற்குச் செல்ல வேண்டியதிருந்தது. விவேக்கிற்குப் பள்ளிக்கூடம் இருந்ததால், அவனை அழைத்துச் செல்ல முடியவில்லை. அவனை அருகில் அழைத்து அறிவுரையெல்லாம் சொல்லி நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவன் பெற்றோர் திருமணத்திற்குச் சென்றனர். 'சரி, சரி'யென்று அப்போதைக்கு தலையாட்டிய விவேக், அன்று மாலை பக்கத்து வீட்டிலுள்ள குழந்தைகளையெல்லாம் அழைத்து வந்தான்.

எல்லோரையும் தன் வீட்டுக் கூடத்தில் உட்கார வைத்தவன், ''இப்போது கொள்ளிவாய்ப்பிசாசாக நான் மாறப் போகிறேன். யாருக்காவது பயமிருந்தால், இப்போதே எழுந்து போய் விடுங்கள்'' என்று வீர முழக்கமிட்டான்.

அவன் என்ன செய்யப் போகிறானோ என்ற ஆர்வத்தில் குழந்தைகள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அறைக்குள் போன விவேக் சற்று நேரத்தில் வெளிப்பட்ட போது அவனைப் பார்த்துக் குழந்தைகள் பயந்து அலறினர். முகமெல்லாம் கரியைப் பூசிக் கொண்டு ஒரு கறுப்புப் போர்வையால் தன்னை மூடிக்கொண்டு கைகளை ஆட்டியபடி வெளியே வந்தான்.

அவன் கையில் ஒரு பாட்டிலை வைத்திருந்தான். அதற்குள் இருந்தது மண்ணெண்ணெய்! இன்னொரு கையில் சிகரெட் லைட்டர்!

அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்ட எதிர் வீட்டு நண்பனான அருண், ''டேய், இது ஆபத்தான விளையாட்டு! தயவு செய்து வேண்டாண்டா,'' என்று கத்தினான்.

அதைக் கேட்டு ஓகோவென்று சிரித்த விவேக், ''உனக்குப் பயமா இருந்தா எந்திரிச்சு வெளியிலே ஓடிப் போ'' என்று அவனைப் பரிகசித்தான்.

எல்லாரும் இமை கொட்டாமல் விவேக்கையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அருண் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், அவன் பாட்டிலைத் திறந்து மண்ணெண்ணெயை உறிஞ்சி வாய்க்குள் அடக்கிக் கொண்டான்; கிளிக் கென்று சிகரெட்டைப் பொருத்தி, கையில் தயாராக வைத்துக் கொண்டான்.

கடைசி முறையாக அருண் அவனிடம் வந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "விவேக், தயவு செய்து இந்த விளையாட்டு வேண்டாம். இது ரொம்ப ஆபத்து!" என்று தடுத்தான். ஆனால், அவனைப் பேசாமல் இருக்குமாறு சைகை காட்டிய விவேக், மூடிய உதடுகள் வழியாக சர்ரென்று மண்ணெண்ணெயைப் பீச்சியடித்தான். மழைச் சாரல் போல் தெறித்த மண்ணெண்ணெயில் சிகரெட் லைட்டரை வேகமாகக் கொண்டு போனான். குப்பென்று தீ பந்தமாக எரிந்து அடங்கியது.

அதைப் பார்த்து பிரமிப்பும், உற்சாகமும் அடைந்த குழந்தைகள் ஆரவாரம் செய்தனர். விவேக்கிற்குப் பெருமை பிடிபடவில்லை. ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்த அருணைப் பார்த்து, "என்ன அருண், பயமெல்லாம் தீர்ந்ததா? எனக்கு ஒண்ணும் ஆகல்லே பாரு" என்றான்.

"ஆபத்தோட விளையாடறது விவேகமில்லாத காரியம். இப்போதைக்கு ஒண்ணும் ஆகாமே இருக்கலாம். எப்போதும் இப்படி இருக்கும்னு சொல்லமுடியாது" என்றான் ஒருவன்.

"பெரிய புத்திசாலி இவன். இது போலச் செய்யறதுக்கு உனக்கு தைரியமுண்டா?" என்று வீராப்பாகக் கேட்டான் விவேக்.

மேலும் அவனிடம் பேசிக் கோப மூட்ட விரும்பாத அருண் அமைதியாக நின்றான். விவேக் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அவன் நிற்பதைப் பார்த்த குழந்தைகள் கேலியாகச் சிரித்தனர்.

அதையே தனக்குக் கிடைத்த பாராட்டாக எடுத்துக் கொண்ட விவேக், இரண்டு மூன்று தடவைகள் அந்தத் தீ விளையாட்டைச் செய்து காட்டி உற்சாகப் படுத்தினான்.

ஒவ்வொரு முறையும் அவன் மண்ணெண்ணெயை உறிஞ்சும் போதும் அவன் போர்த்தியிருந்த போர்வையில் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணெண்



ணெய் சிந்தியிருந்ததை அவன் கவனிக்கவில்லை.

அடுத்த முறை அவன் சிகரெட் லைட்டரைப் பொருத்தி மண்ணெண்ணெய்ச் சிதறலில் காட்டிய போது குப்பென்று எரிந்த நெருப்பு அவன் போர்வையிலும் பற்றிக்கொண்டது!

போர்வையில் தீ எரிவதைக் கண்ட விவேக் பதற்றத்தில் என்ன செய்கிறோம் என்று உணராமல் வாயில் மீதமிருந்த மண்ணெண்ணெயைச் சட்டென்று வெளியே கொப்பளித்தான். அது எரிந்து கொண்டிருந்த போர்வையில் விழ, தீ குப்பென்று படர்ந்தது.

பயத்தில் கதி கலங்கிப் போன அவன், 'ஐயோ அம்மா!' என்று அலறிக்கொண்டு அந்த அறையில் அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தான். அவனுக்கு ஏற்பட்டிருந்த அதிர்ச்சியில் போர்வையை விலக்கித் தள்ள வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றவில்லை.

அவன் அலறி ஓடுவதைப் பார்த்த குழந்தைகளும் பயந்து போய் அலறியடித்துக்கொண்டு எழுந்து வெளியே ஓடலாயினர். விவேக்கைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை. எண்ணமிருந்தாலும் அவனை நெருங்குகிற தைரியம் ஒருவருக்கும் வரவில்லை.


இதையெல்லாம் கவனித்த அருண், சற்றும் தாமதியாமல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து விவேக்கை நெருங்கினான். அவனைக் கீழே தள்ளி அவன் போர்த்தியிருந்த போர்வையை உருவியெடுத்தான். அதனால், தன் கையில் ஏற்பட்ட சிறு தீக்காயங்களைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை.

நல்ல கனமான முரட்டுப் போர்வையாய் இருந்ததாலும், அருண் சற்றும் தாமதியாது அதை உருவி வீசியதாலும் விவேக்கிற்கு நல்லவேளையாகத் தீக்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

அவனுக்குப் பதற்றம் அடங்க வெகுநேரமாகியது. அருணை ஏறிட்டுப்பார்ப்பதற்கே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

அருண் அவன் தோளின் மீது கையை வைத்துப் பரிவுடன் நோக்கி, ''விவேக், ஆபத்து வர்ற போது நிதானத்தை இழக்காமல் இருக்கிறதுதான் உண்மையான தைரியம், ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது தைரியமல்ல; அதுக்குப் பெயர் அசட்டுத்தனம். இப்பக் கூட நீ அந்தப் போர்வையை எவ்வளவு எளிதாக உதறிவிட்டு ஓடியிருக்கலாம். அதைக் கூடச் செய்யணும்னு தோணாமே பயந்து அலறினாயே! உண்மையான தைரியம் எதுன்னு இப்ப சொல்லு'' என்றான்.

''உண்மைதான் அருண். நெருப்பு போர்வையிலே பிடிக்காமல், என் சட்டையிலோ, கால் சட்டையிலோ பிடிச்சிருந்தால், உன்னாலேகூட என்னைக் காப்பாத்தி இருக்க முடியாது. எவ்வளவு பெரிய ஆபத்தோடு விளையாடினேன்னு இப்பத்தான் தெரியுது'' என்று தன் நண்பனைப் புரிந்துகொண்டவனாய்ப் பதிலளித்தான் விவேக்.



இங்கிலாந்து நாட்டுக் கதை

முடி சூட்டு விழா

மூலம்: ஆஸ்கார் ஒயில்டு
தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி


அரசனுடைய மகள் ஒரு சாதாரணக் குடிமகனை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டாள். அந்த அரசனுக்கு, தன் கௌரவம்தான் முக்கியம். அவனுடைய மனத்தில் அன்போ, பாசமோ துளிகூட இருக்கவில்லை. ஆகவே அவன் பெண்ணையும், மாப்பிள்ளையையும் தன் நாட்டைவிட்டே துரத்திவிட்டான். அவர்கள் காட்டுக்குச் சென்றனர். அங்கே அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. விரைவிலேயே அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் சிக்கி இறந்தனர்.

அரசனுக்குச் செய்தி எட்டியது. அந்தப் பச்சிளம் குழந்தைக்காகக் கூட அவன் இரங்கவில்லை. காட்டில் வசித்த ஓர் ஆட்டிடையன் பொறுப்பில் அந்தக் குழந்தை வளர்ந்து வர ஏற்பாடுகள் செய்தான்.

அரசனுக்கு வயது முதிர்ந்தது. அவன் உயிர் துறக்கும் நேரம் வந்தது. தன் அமைச்சர்களையும், பிரபுக்களையும் அருகில் அழைத்தான். அவர்களைப் பார்த்து, "என் பெண்ணின் மகனுக்கு நான் பெரும் தீங்கு செய்துவிட்டேன். அதனால் மன அமைதி இல்லாமல் தவிக்கிறேன். காட்டில் ஓர் இடையனிடம் அவன் வளருகிறான். அவனை அழைத்து வந்து முடி சூட்டுங்கள். அப்போதுதான் என் ஆன்மா சாந்தி அடையும். இது என் ஆணை". என்று சொல்லிவிட்டு அரசன் இறந்தான்.

இளவரசனை அழைத்துவர ஆட்கள் புறப்பட்டனர். அவனுக்குச் சுமார் பதினாறு வயது இருக்கும். அந்தப் பாலகனைத் தேடி அவர்கள் காடெங்கும் அலைந்தனர்.

ஓர் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து





கொண்டு அந்தச் சிறுவன் ஆனந்தமாகக் குழல் வாசித்துக் கொண்டிருந்தான். அப்படியே தன் ஆட்டு மந்தையையும் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தன் உண்மைக் கதை தெரியாது.

அந்தச் சிறுவனின் இடையில் கந்தல் ஆடைகள், தலையில் ஒரு பழைய வைக்கோல் தொப்பி. கால்களில் காலணி எதுவும் இல்லை. தான் வறுமையில் வாடினாலும் அவன் தன் ஆடுகளைப் போலவே அமைதியாகவும், சந்தோஷமாகவும் காணப்பட்டான்.

பிரபுக்கள் அந்தச் சிறுவனை அரண்மனைக்கு அழைத்து வந்தனர். 'இளவரசே' என்று அழைத்து மரியாதை செய்தனர். அவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் தன்னைத் தேடி வரும் என்று அவன் கனவில்கூட நினைக்கவில்லை. அரண்மனையின் அழகுகளையும், ஆடை அணிகளையும் கண்டு அவன் ஆனந்தக் கடலில் மூழ்கினான். கந்தல் ஆடைகளைக் கழற்றிவிட்டான். காவலர்கள் அளித்த கவின் மிகு ஆடைகளைக் கவனமாக அணிந்தான். அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்தான்; அங்கிருந்த அதிசயங்களை எல்லாம் அலுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

இளவரசனுக்கு முடிசூட்டுவதற்கு ஒரு நல்ல நாள் குறிப்பிட்டனர். ஊரே விழாக் கோலம் பூண்டது. விழாவிற்கு முதல் நாள், அரண்மனை மஞ்சத்தில் இளவரசன் படுத்திருந்தான். மாதா கோவில் அரங்கத்தில், தான் கம்பீரமாக நிற்பதையும், தலைமைக் குரு தனக்கு முடிசூட்டுவதையும் அவன் மனக் கண்ணால் கண்டு ரசித்தான். அப்படியே உறங்கிப் போனான். அப்போது ஒரு கனவு கண்டான்.

கனவில் ஒரு பெரிய அறை வந்தது. அங்கு வெளிச்சமோ, காற்றோ இருக்கவில்லை. அறையின் நடுவில் இளவரசன் நின்றுகொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஏராளமான நெசவாளிகள் ஆடைகளை நெய்து கொண்டிருந்தனர். சிறுவர், சிறுமிகள்கூட வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் முகம் வெளுத்து, கண்கள் இடுங்கி, உடல் நலிந்து வறுமையோடு காணப்பட்டனர். பசியும், சோர்வும் அவர்களை வருத்தின.

நெசவாளிகளின் அவல நிலை கண்டு இளவரசன் மனம்வருந்தினான். ஒரு நெசவாளியிடம் சென்று, "ஐயா! நீங்கள் எல்லாம் சுதந்திரமானவர்கள் தானே? அடிமைகள் இல்லையே?" என்று கேட்டான்.

நெசவாளி பலவீனமாகச் சிரித்துக் கொண்டே, "உண்மையான போர் நடக்கும்போது, பலம் உள்ளவன் பலம் இல்லாதவர்களை அடிமையாக்குகிறான். வாழ்க்கை என்னும் போரில் பணம் உள்ளவன் பணம் இல்லாதவர்களை அடிமையாக்குகிறான். இரண்டும் ஒன்றுதான். ஒருவிதத்தில் நாங்களும் அடிமைகளே. சாவு ஒன்றுதான் எனக்கும், என் குழந்தைகளுக்கும் விடுதலை அளிக்கும்" என்று



சொன்னான்.

அவனுடைய கையிலிருந்த ஒரு ஜரிகை ஆடையைச் சுட்டிக்காட்டி, "யாருக்காக நீ இதைச் செய்கிறாய்?" என்று இளவரசன் கேட்டான்.

"நாளை முடிசூட்டிக் கொள்ளுகிறானே அந்த இளவரசனுக்குத்தான் இது. உனக்கு ஏனப்பா அந்தக் கதையெல்லாம். போ! போ!" என்று விரட்டினான் நெசவாளி.

'வீல்' என்று கத்திக் கொண்டே இளவரசன் கனவு கலைந்து துயில் நீங்கி எழுந்தான். அவனுடைய உள்ளமும், உடலும் பதறின. ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். வானத்திலிருந்தபூரணச் சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் அவன் மீது விழுந்து கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் அவன் மீண்டும் உறங்கிப் போனான். இரண்டாம்முறையாக ஒரு கனவு கண்டான்.

அப்போது இளவரசன் ஒரு கப்பலில் போய்க் கொண்டிருந்தான். நூற்றுக்கணக்கான நீக்ரோ அடிமைகள் துடுப்புக்களால் அதை ஓட்டிக் கொண்டிருந்தனர். கால்களில் இரும்புச் சங்கிலியுடன், வியர்வை சிந்த அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அடிமைகளின் தலைவன் ஒரு நீண்ட சாட்டையைச் சுழற்றிச் சுளீர் சுளீர் என்று அடித்து, அவர்களை விரட்டினான்.

கப்பல் ஒரு கரையை அணுகியதும், நங்கூரம் இறக்கப்பட்டது. மாலுமிகள் அடித்தளத்திலிருந்து ஒரு நீக்ரோ அடிமையை இழுத்துக் கொண்டு வந்தனர். அவனுடைய காலில் ஒரு பெரிய பாறாங்கல்லைக் கட்டினர். கையில் ஒரு கூடையைக் கொடுத்தனர். இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டி அவனைக் கடலுக்குள் இறக்கினர்.

சிறிது நேரத்தில் கூடை நிறைய முத்துச் சிப்பிகளோடு அவன் மேலே வந்தான். மாலுமிகள் சிப்பிகளை உடைத்துப் பார்த்தனர். பெரிய அளவில் முத்து ஒன்று கிடைத்தது. அந்த முத்து நிலவைப் போல வட்டமாகவும், நட்சத்திரத்தைப் போல ஒளியோடும் காணப்பட்டது. மாலுமிகள் சந்தோஷமடைந்தனர். ஆனால்முத்துக் குளித்த அந்த அடிமையின் முகம்

மட்டும் வெளிறிப் போயிருந்தது. திடீரென அவன் கப்பலின் தளத்திலேயே விழுந்தான். இறந்தான்.

''செத்துப் போய்விட்டானா? அந்த உடலைத் தூக்கிக் கடலில் எறியுங்கள்!'' என்று அலட்சியமாக ஆணையிட்டுக் கொண்டே அடிமைகளின் தலைவன் முத்தைக் கையில் எடுத்தான். ''இந்த அழகிய முத்தைப் புதிய அரசனின் செங்கோலில் பதிக்கலாம்!'' என்று சொன்னான்.

அதைக் கேட்ட உடனே இளவரசன் மறுபடியும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். நட்சத்திரங்கள் ஒளிகுன்றியிருந்தன. அதிகாலை மலரும் நேரம். இளவரசன் கண்களை மூடிக் கொண்டு தொடர்ந்து தூங்கினான். மூன்றாம் முறையாக ஒரு கனவைக் கண்டான்.

அப்போது இளவரசன் ஒருவினோதமான காட்டின் வழியாக நடந்து கொண்டிருந்தான். நடந்து, நடந்து காட்டின் எல்லையை அடைந்தான். ஓர் ஆற்றுப் படுகை குறுக்கிட்டது. சுடும் மணலில் அநேகம் பேர் வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் பாறையை உடைத்து, பள்ளம் வெட்டி எதையோ தேடிக் கொண்டிருந்தனர். கையில் ஒரு கண்ணாடியுடன் முதியவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

இளவரசன் அவனை அணுகி, ''இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?'' என்று கேட்டான்.

''பல வருஷங்களாக எங்கள் ஊரில் மழை இல்லை. உண்ண உணவில்லை. குடிக்க நீர் இல்லை. ஆறு வற்றிவிட்டது. பூமி வறண்டு விட்டது. மக்கள் அவதிப்படுகின்றனர். இவர்கள் எல்லாம் எதற்காக ஆற்றைத் தோண்டுகிறார்கள் என்றால்...'' என்று முதியவன் இழுத்தான்.

''எதற்காக? எதற்காக?'' இளவரசன் ஆவலோடு கேட்டான்.

''வைரக் கற்களைக் கண்டுபிடிக்கத்தான். அரசனுடைய மகுடத்தில் பதிக்க வேண்டுமல்லவா?''

''எந்த அரசன்?''

''இந்தக் கண்ணாடியைப் பார்த்தால் உனக்கே தெரியும்!'' முதியவன் கண்ணாடியை நீட்டினான்.

இளவரசன் கூர்ந்து பார்த்தான். அதில் தன்னுடைய சொந்த முகத்தைக் கண்டான்!

மறுபடியும் அலறிக் கொண்டே இளவரசன் எழுந்தான். அப்போது நன்றாகவிடிந்திருந்தது. ஜன்னல்மூலம் சூரியனின் ஒளிக்கற்றைகள் பாய்ந்து அறையைப்பிரகாசப்படுத்திக்கொண்டிருந்தன.

திருப்பிப் போடுதல்

மகனின் மதிப்பெண்ணைப் பார்த்த தாய், ''என்னடா இந்தக் காலாண்டுத் தேர்வில் கணக்கிலே 18 மார்க்தானே வாங்கியிருக்கிறாய்?'' என்று கோபமாகக் கேட்டாள்.



அதற்கு மகன், ''வருகிற அரையாண்டுத் தேர்விலே இதைத் திருப்பிப் போட்டு வாங்கிக் காட்டுகிறேன்'' என்று உறுதியளித்தான்.

ஆனால் அரையாண்டுத் தேர்வில் அவன் கணக்கிலே வாங்கியிருந்த மார்க்கைப் பார்த்த தந்தை, ''டேய், என்னடா, உன் அம்மாவிடம் சபதமெல்லாம் செய்தாய். இப்போது கணக்கிலே 11 மார்க்தானே வாங்கியிருக்கிறாய்?'' என்று மிகுந்த கோபமாகக் கேட்டார்.

''முழு ஆண்டுத் தேர்விலே பாருங்கள் அப்பா. இந்த மார்க்கை அப்படியே திருப்பிப் போட்டு வாங்கிக் காட்டுகிறேன்'' என்றான் அந்த அசட்டு + மக்குப் பிள்ளை!

— ஆர். குருராஜ் (1444), கரூர்.



பிரபுக்களும், அமைச்சர்களும் இளவரசனின் அறைக்கு வந்து வணக்கம் கூறினர். முடிசூட்டு விழாவிற்காக விசேஷமாகச் செய்யப்பட்ட ஆடைகளையும், மகுடத்தையும், செங்கோலையும் ஏந்திக் கொண்டு பணியாளர்கள் இளவரசனுக்கு முன்னால் வந்தனர்.

அவற்றைக் கண்டதும் இளவரசனின் உள்ளம் களிப்பினால் துள்ளியது. ஆனால் அந்தக் கனவுகளும் கூடவே நினைவுக்கு வந்தன.

''நான் இவற்றை அணிய மாட்டேன். எடுத்துச் செல்லுங்கள்!'' என்று கட்டளை இட்டான்.

''இவற்றைப் பார்க்கவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. துன்பத்தின் கரங்களால் நெய்யப்பட்ட இந்த ஆடையும், ரத்தக்கறை தோய்ந்த இந்த மகுடமும், மரணத்தின் நிழல் படிந்த இந்த செங்கோலும் எனக்குத் தேவை இல்லை. எடுத்துச் செல்லுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, தன்னுடைய மூன்று கனவுகளையும் இளவரசன் அவர்களுக்கு விரிவாக உரைத்தான்.

''கனவுதானே? அதை மறந்துவிடலாம்!'' என்றார் ஓர் அமைச்சர்.

''நீங்கள் விசேஷ அலங்காரத்தோடு வராவிட்டால் சாதாரண மக்களுக்கு உங்களை அடையாளம் தெரியாது!'' என்றார் இன்னொருவர்.

ஆனால் இளவரசன் பிடிவாதமாக இருந்தான். அந்தப்பட்டையும், பொன்னையும் தொடவே இல்லை.

''இளவரசனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. அதனால்தான் இப்படித் தாறுமாறாகப் பேசுகிறான்!'' என்று அமைச்சர்கள் முடிவு செய்தனர்.

''நான் இந்த அரண்மனைக்கு வரும்போது எந்த ஆடையை அணிந்திருந்தேனோ, அதே ஆடையைத்தான் இன்றைக்கும் அணியப் போகிறேன்!'' என்று இளவரசன் தீர்மானமாகச் சொன்னான்.

அமைச்சர்களும், பிரபுக்களும் வெளியேறினர். இளவரசன் ஒரு பழைய பெட்டியைத் திறந்தான். ஆடு மேய்த்த காலத்தில் அவன் அணிந்திருந்த கிழிந்த ஆடைகளும், தற்காப்

புக்காக அப்போது கையில் வைத்திருந்த ஒரு குச்சியும் அதில் இருந்தன.

இளவரசன் கந்தலை அணிந்தான். அந்தக் குச்சியைக் கையில் எடுத்துக் கொண்டான். இளவரசனுக்குப் பணியாளனாக இருந்த ஒரு சிறுவன், ''அரசே! உங்களுடைய ராஜ உடையையும், செங்கோலையும் பார்க்கிறேன். ஆனால் மகுடம் எங்கே?'' என்று கேட்டான்.

ஜன்னலுக்கு வெளியே ஒரு ரோஜாச் செடி கிளைகளை நீட்டிக் கொண்டிருந்தது. இளவரசன் அதிலிருந்து ஒரு குச்சியை ஒடித்தான். ஒரு வளையமாகச் செய்தான். ''இது தான் என் மகுடம்!'' என்று சொல்லிக் கொண்டே அதைத் தலையில் அணிந்து கொண்டான்.

அத்தகைய அலங்காரங்களுடன் இளவரசன் ராஜ சபையைக் கடந்தான். வாசலுக்குச் சென்றான். தன்னுடைய குதிரை மீதேறி மாதா கோவிலுக்குப் புறப்பட்டான். ஒரு வேலைக்காரச் சிறுவன் மட்டும் இளவரசனுக்குப்பின்னாலேயேஓடினான். அமைச்சர்களோ, பிரபுக்களோ அல்லது வேறு யாரும் ஊர்வலமாகப் போகவில்லை.

ஆடை அலங்காரங்களுடன் கம்பீரமாகப்பவனிவரப்போகும்இளவரசனைக் காண்பதற்காக மக்கள் திரண்டிருந்தனர். ஆனால், இளவரசனின் எளிய கோலத்தைக் கண்டதும் அவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''அரசனுடைய கோமாளி வருகிறான்!'' என்றான் ஒருவன்.

''அரசன்தான் தமாஷ் பண்ணுகிறான்!'' என்றான் இன்னொருவன்.

இளவரசன் குதிரையை நிறுத்திவிட்டு, ''நான்தான் உங்கள் அரசன்!'' என்றுசொன்னான். பிறகுதான் கண்ட மூன்று கனவுகளையும் கூறினான். ஏழை மக்களிடம் தனக்குள்ள அக்கறையை எடுத்துச் சொன்னான். ஆனால் மக்கள் அவனை நம்பவும் இல்லை. அவனுடைய பேச்சைக் கேட்கவும் இல்லை. அவர்கள் கோபத்தோடு பொங்கி எழுந்தனர். இளவரசன் மாதா கோவிலுக்கு விரைந்தான்.

அமைச்சர்களும் மக்களும் புடை சூழ, பட்டும், பொன்னும் பளபளக்க



இளவரசன் ஊர்வலமாக வருவான் என்று தலைமைக் குரு எதிர்பார்த்திருந்தார். ஆனால், ஆட்டிடையனைப் போல உடை அணிந்து, அரசன் தன்னந்தனியாக வந்தது தலைமைக் குருவுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

''மகனே! இன்றைக்குப் போய் இந்தக் கோலத்தில் வந்திருக்கிறாயே? ஓர் அரசனுக்கு ஏற்ற ஆடையா இது? முடி எங்கே? செங்கோல் எங்கே? ஒரு சந்தோஷமான நாளில் இப்படி வரலாமா?'' என்று கேட்டார்.

''மக்கள் உடலும், உள்ளமும் வருந்தித் தயாரித்த பொருள்களின் மூலம் நான் சந்தோஷத்தை அடைய முடியுமா?'' என்று இளவரசன் திருப்பிக் கேட்டான். பிறகுதான் கண்ட கனவுகளை அவரிடம் கூறினான்.

''மகனே! நீ சின்னவன். உனக்குப் புரியாது. ஆனால் எனக்கு உலக அனுபவம் நிறைய உண்டு. உலகில் தீமையும், அநீதியும் தாண்டவமாடுவதை நான் அறிவேன். ஆனால், நாம் எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனின் சிருஷ்டிகள். கடவுள் படைத்தபடிதானே நாம் இருக்க முடியும்? ஒரு தனி மனிதனால் உலகிலுள்ள கஷ்டங்களை எல்லாம் தாங்க முடியுமா? யோசித்துப் பார்!'' என்றார் தலைமைக் குரு.

''ஏசுவின் இல்லத்தில் இருந்து கொண்டா நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று வருத்தத்தோடு இளவரசன் கேட்டான்.

பிறகுதலைமைக்குருவைத்தாண்டிப்

படிக்கட்டுகளில் ஏறினான். ஏசுவின் திரு உருவத்திற்கு முன்னால் மண்டி யிட்டு வணங்கினான். தோத்திரம் ஜபித்தான்.

கதவுகளை உடைத்துக் கொண்டு மக்கள் வெள்ளம் மாதா கோவிலின் உள்ளே புகுந்தது. ''கனவுலக அரசனே! திரும்பிப் போ, ஆடு மேய்க்கும் அரசனே! திரும்பிப் போ!'' என்று மக்கள் கோபத்தோடு கூச்சலிட்டனர்.

தோத்திரங்களைச் சொல்லிவிட்டு இளவரசன் எழுந்தான். அந்த அப்பாவி மக்களை மன வருத்தத்தோடு நோக்கினான்.


கண்ணாடி ஜன்னல்களின் மூலம் தங்க நிறமான சூரிய ஒளி தகதகவென உள்ளே பாய்ந்தது. பொன் இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகளைவிட அதிகப் பொலிவுடன் அது இளவரசனைப் போர்த்தியது. அவனுடைய கையிலிருந்த குச்சி திடீரெனத் தளிர் விட்டு, மொகை அரும்பி, முத்தைவிட அதிக வெண்மையான மலர்களைப் பூத்துச் சொரிந்தது. அவன் தலையில் அணிந்திருந்த மலர் வளையம் வைரங்களைவிட அதிகப் பிரகாசத்துடன் சுடர் விட்டது.


அரசனைப் போன்ற ஒளிமயமான தோற்றத்துடன் அரங்கின் மையத்தில் அவன் நின்றிருந்தான். தேவ லோக ஒளியில் மாதா கோவில் மூழ்கியது.


கருவிகள் இசை முழங்கின. குழுவினர் தோத்திரம் பாடினர். பணக்காரன், ஏழை, ஆண், பெண், முதியோர், இளைஞர் — அனைவரும் முழந்தாளிட்டு ஜபம் செய்தனர்.


இளவரசனின் தலை மீது கையை வைத்துத் தலைமைக் குரு ஆசீர்வாதம் செய்தார். ''மகனே! என்னை விட உயர்ந்தவன் ஒருவன் உனக்கு முடி சூட்டி விட்டான்!'' என்று சொல்லி விட்டு, ஒளிமயமாக நிற்கும் அந்த இளைய அரசனை அவர் வணங்கினார்.


ஓவியராகலாம்













யாருக்குப் பரிசு?

ஜமதக்னி

ராமு பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் கை, கால் அலம்பி அம்மா கொடுத்த டிபனைச் சாப்பிட்டான்.

''டேய் ராமு... அலமாரியில் உன் மாமா போட்ட கடிதம் இருக்கு எடுத்துக்கோ'' — என்றாள் தாய்.

அவ்வளவுதான். ஒரே தாவாகத் தாவிக் கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

சிங்கப்பூர்,
16.12.85

''அன்புள்ள ராமுவிற்கு,

மாமா ஆசீர்வாதம். நான் அடுத்த மாதம் அங்கு வருகிறேன். நீ எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் கைக்கடிகாரம் கேட்டிருந்தாய். வாங்கி வருவேன். உன்னுடைய உற்ற நண்பன் ஒருவனுக்கும் பரிசு உண்டு. கவனமாகப் படி. மற்றவை நேரில்.

ஆசியுடன் மாமா.''

கோபாலன் மாமா வருகிறார் என்றால் ராமுவிற்குக் குஷிதான். அன்பானவர். ஆனால் அதே சமயத்தில் கண்டிப்பான மாமாவாயிற்றே!

ராமுவிற்கு இரண்டு நண்பர்கள். ஒருவன் அருண். மற்றவன் பரத். இருவருமே அவன் வகுப்பில்தான் படிக்கிறார்கள். இருவருமே நல்ல நண்பர்கள்தாம்.

அருண் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். நன்றாகக் கதை சொல்லுவான். ஆக மொத்தத்தில் அருண் இருந்தால் நன்றாகப் பொழுது போகும். பரத் கொஞ்சம் மாறுபட்டவன். அவனும் நன்றாகப் பழகுவான். இனிமையாகப் பேசுவான்: இருந்தாலும் ராமு ஏதாவது தப்பு செய்துவிட்டால் போதும் உடனே அது தப்பு என்று அறிவுரை சொல்ல ஆரம்பித்து விடுவான்.

ராமுவிற்கு இப்பொழுது ஒரு பிரச்னை. மாமாவின் பரிசு அந்த இருவரில் யாருக்குக் கிடைக்கும்? அருணுக்கா? பரத்திற்கா? இல்லை, இருவருக்கும் கிடைக்குமா?

ராமுவைப் பொறுத்தவரையில் அருண்தான் நல்ல நண்பன். பரத் மாதிரி அனாவசியமாக அறிவுரை சொல்ல மாட்டான். விடுமுறை நாளில் அவன் வந்துவிட்டால்

போதும். நாள் போவதே தெரியாது.

"டேய் ராமு, மணி ஆறாயிட்டது. போய் சுவாமிக்கு நமஸ்காரம் செய்து விட்டுப் படிக்க ஆரம்பி" — என்றாள் அவன் தாய்.

ராமுவும் அம்மா சொன்னதைச் செய்துவிட்டு அன்றையப் பாடங்களைக் கவனமாகப் படிக்க ஆரம்பித்தான்.

மறுநாள் ராமு தன் மாமா போட்ட கடிதத்தை அருணுக்கும் பரத்திற்கும் காட்டினான். அருண் ரொம்பவும் சந்தோஷப்பட்டான். பரத் கடிதத்தைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான். சந்தோஷப்படவுமில்லை; வருத்தப்படவுமில்லை.

சில நாட்கள் கழிந்தன.

ராமு பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். கூடவே அருணும், பாத்தும் வந்து கொண்டிருந்தனர். வழியில் ஒரு வீட்டில் வாதாம் மரம் நீண்டு நிமிர்ந்து நின்றது. அதில் இலைகளை விடக் காய்கள்தான் அதிகமாக இருந்தன.

"டேய் அருண், காய் அடிக்கலாமா?" — என்றான் ராமு.

"வேண்டாம் ராமு. அது தப்பு... ஆசையா இருந்தா, கேட்டு வாங்கிச் சாப்பிடலாம்" — என்றான், பரத்.

"பிச்சை எடுக்கிற புத்தி எனக்கில்லை" — என்றான் ராமு.

அருணும் ராமுவும் ஆளுக்கொரு கல் எடுத்து விசினர். அது குறி தவறி அந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடியை உடைத்தது. அருணும் ராமுவும் ஒரே நிமிடத்தில் அந்த இடத்தை விட்டுப் பறந்தனர். பரத் அசையாமல் அங்கே நின்றான். வீட்டின் சொந்தக்காரர் வெளியே வந்ததும் நடந்ததைச் சொன்னான்.

"ஐயா... அந்தக் கண்ணாடி மாற்ற எவ்வளவு செலவு ஆகும்னு சொல்லுங்க. நான் எங்க வீட்டிலே கேட்டு வாங்கித் தருகிறேன்" — என்றான்.

"நீ உடைக்காத போது ஏன் தரணும்?"

"நான் உடைக்காவிட்டாலும் உடைத்தது என் நண்பர்கள்தான். அவர்களைத் தடுத்து நிறுத்தாமல் போனது என் தப்புதானே!"



"தம்பி, உன் பரந்த மனப்பான்மை எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நீ உள்ளே வா" — என்று சொல்லி உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

அவன் பெயர், அவன் படிக்கும் பள்ளி, வகுப்பு பற்றி அன்பாக விசாரித்தார்.

"இந்தாப்பா பரத், இந்தப் பாக்கெட்டிலே நிறைய வாதாம் பருப்பு வெச்சு இருக்கேன். இது உன் நேர்மைக்குப் பரிசு... நீ அந்தக் கண்ணாடியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அது ரொம்பப் பழசு... நான் மாத்திக்கிறேன்..."

"ரொம்ப நன்றி ஐயா" — என்று சொல்லிவிட்டு அந்த வாதாம் பருப்புகளை எடுத்துக் கொண்டு ராமுவின் வீட்டிற்கு வந்தான். நடந்தவற்றைச் சொல்லி அவனிடம் அந்தப் பெரியவர் கொடுத்த பாக்கெட்டைக் கொடுத்தான். பரத் போனவுடன், அருண் ராமுவிடம், "டேய், ரொம்ப நல்லவன் மாதிரி நடிச்சு பிச்சை எடுத்துண்டு வந்திருக்கான்" — என்றான்.

இருவரின் வாய்களும் என்னவோ பரத்தை விமரிசனம் செய்தாலும், அவன் கொண்டு வந்து கொடுத்த வாதாம் பருப்பைச் சாப்பிட அந்த இரண்டு வாய்களுமே ஆரம்பித்தன.

ஞாயிற்றுக்கிழமை.

ராமு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தான். காரணம், அன்றுதான் அவன் கோபாலன் மாமா வருகிறார். வாசலில் டாக்ஸி வந்து நின்றது. ராமு வாசலுக்கு ஓடினான். கோபாலன் மாமா வந்து இறங்கினார். "என்னடா பயலே, எப்படி இருக்கே...? நல்லா படிக்கிறாயா?"

"நல்லா படிக்கிறேன் மாமா."

அவரது பெட்டியை வாங்கிக் கொண்டு உள்ளே போனான்.

"ராமு... உனக்குக் கைக் கடிகாரம் வாங்கிண்டு வந்திருக்கேன்..." — கோபாலன்.

"அண்ணா... வந்ததும் வராததுமாக உங்க கடையை விரிக்காதீங்க. குளிச்சு, சாப்பிட்டுட்டு மத்தியானமா பார்த்துக்கலாம்" என்றாள் ராமுவின் தாய்.

மறுநாள் மிக வருத்தமாகப் பள்ளிக்குச் சென்றான் ராமு. கணித வகுப்பு.

"வீட்டுக் கணக்கை யாரெல்லாம் போட்டுண்டு வரலே?" என்று ஆசிரியர் கேட்டதும் சிலர் தயக்கத்துடன் எழுந்தனர். ராமுவும் எழுந்தான்.

"டேய் ராமு... நீயும் கணக்கு போட்டுண்டு வரலையா?"

"இல்லை ஐயா... உடம்பு சரியில்லை..." என்றான்.

"அப்படியா, சரி நாளை கட்டாயம்

ரஷ்யக் குழந்தைக்கு ராஜீவ் பெயர்!



"நமக்கு ஒரு மகள் பிறந்தால் இந்திரா என்று பெயர் வைப்போம். மகன் பிறந்தால் ராஜீவ் என்று பெயர் வைப்போம்" என்று ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு கட்டடத் தொழிலாளியும், அவர் மனைவியும் முடிவு செய்தார்கள். இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு மிகவும் வருந்திய அவர்கள், ராஜீவ் காந்தி பிரதமரானதையும் அறிந்தார்கள். அப்போதுதான் அவர்கள் அந்த முடிவை எடுத்தார்கள். சில நாட்களில் அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. அது ஆணாக இருந்ததால், அவர்கள் செய்த முடிவுப்படி அக்குழந்தைக்கு ராஜீவ் என்று பெயர் சூட்டி விட்டனர்!



போட்டுக் கொண்டு வரவேண்டும்.''

வகுப்பு முடிந்தவுடன் அருண், ''டேய் ராமு, நல்லா சமாளிச்சியே... என்ன நடிப்பு!'' என்றான்.

''ராமு, நீ செஞ்சது தப்பு. உங்க மாமா ஊரிலேருந்து வந்தார். அதனாலே நேத்து பூரா அவரோடேயே பொழுதைப் போக்கிட்டே ... உடம்பு சரியில்லை அப்படின்னு ஆசிரியர் கிட்டே பொய் சொல்லலாமா?''

''ஆரம்பிச்சிட்டாண்டா...'' என்று சொல்லிச் சிரித்தான் அருண்.

''நீ நேரே வாத்தியார்கிட்டே போய் சொல்றதுதானே...? நல்ல பெயர் வாங்கிக்கலாம்'' — என்று சொல்லிச் சிரித்தான் ராமு.

''பரவாயில்லை.. நீங்க ரெண்டு பேரும் என்னைக் கேலி செய்தாலும் பரவாயில்லை. ஒருநல்லநண்பனுடைய தவறைநயமாகஎடுத்துக்கூறித்திருத்துவதுதான் கடமை'' என்று சொல்லிவிட்டு அமைதியாகப் போய் விட்டான் பரத்.

ராமு தீர்மானம் செய்துவிட்டான். ''மாமா நண்பனுக்காக என்று வாங்கி வந்திருக்கும் புது ஷர்ட், பேண்ட் எல்லாவற்றையும் அருணுக்குத்தான் கொடுக்க வேண்டும். இந்த பரத் சுத்த மோசம். எதற்கெடுத்தாலும் அறிவுரை.''

அன்று மாலை.

''டேய்...ராமு...இங்கேவாடா.. நான் உன் நண்பனுக்கு வாங்கி வந்ததை இன்னும் கொடுக்கவேயில்லை. உன்னுடைய உற்ற நண்பன் யார்னு கேட்டேன்... நீ இன்னும் சொல்லவேயில்லை.''

''இப்ப சொல்றேன் மாமா... அருண்தான் என் உற்ற நண்பன்.''

''அட... சரி, அப்ப இன்னொரு பையன் வரானே... அதாண்டா, அவன் பெயர் என்ன...? ம்... பரத்.''

''அவனுக்கு வேண்டாம் மாமா...'' என்று சொல்லி பரத், அருண் இருவரையும் பற்றி அவன் மாமாவிடம் சொன்னான்.

''சரி... சரி...'' என்று சொல்லிவிட்டு அவன் மாமா உள்ளே போய் விட்டார்.

ஓரிரு நாட்கள் கழிந்தன. ராமு வாசலில்உட்கார்ந்துகொண்டுபாடம் படித்துக் கொண்டிருந்தான். ''ராமு'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். வாசலில் பரத்!

"அட, இவன் என்ன புதுச் சட்டை, பேண்ட் போட்டிருக்கிறான்! இது.. இது... சிங்கப்பூரிலிருந்து மாமா வாங்கி வந்தது போல இருக்கிறதே?' என்று ராமு நினைத்தான்.

அதற்குள் அங்கு வந்த மாமா, "வாப்பா, பரத். என்னடா ராமு.. அப்படிப் பார்க்கிறாய்! இருவரும் உள்ளே வாருங்கள். ராமு, நட்பு எப்படி இருக்கணும் தெரியுமா? நட்பு வெறுமனே சிரித்து மகிழ்வதற்காக மட்டுமல்ல. நண்பன் தப்புச் செய்யும் போது — நெறி கடந்து செல்லும் போது இடித்துரைத்துத் திருத்தப் பார்ப்பதுதான் சிறந்த நட்பு... இதை நான் சொல்லவில்லை. வள்ளுவர் சொல்கிறார்:

"நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு."

"நீ செய்த அதிர்ஷ்டம், பரத் உனக்கு நண்பனா இருக்கான். ஆனால், அதை நீ புரிஞ்சிக்கலே... நான் புது டிரஸ் எடுத்துட்டு அவன் வீட்டிற்குப் போன போது வாங்கிக்கவே மாட்டேன்னான். 'அருணுக்கு ஏன் தரலே? அவனும்தான் ராமுவோட நண்பன்.' என்றான். நான்தான் மிகவும் வற்புறுத்திக் கொடுத்துவிட்டு வந்தேன்."

"நான் செஞ்சது தப்புத்தான் மாமா" — ராமு.

"பரவாயில்லே. இனிமேல் நீ மாறி விடுவாய். அட, உன் வகுப்பாசிரியர் வர்றாரே... வாங்க ஸார்."

"வணக்கம். நான் பரத் வீட்டிற்குப் போனேன். அவன் இங்கே இருக்கிறதாச் சொன்னாங்க. ஒரு நல்ல செய்தி: இந்த வருடம் பள்ளியில் 'நல்ல மாணவன்' விருது நம்ப பரத்திற்கு..." என்றார் வகுப்பாசிரியர்.

"அட... நல்ல தேர்வுதான்..." என்றார் மாமா.

"நன்றி ஐயா" என்றான் பரத்.

"பள்ளியில மட்டுமில்லே. வெளியிலே கூட அவன் நல்ல பெயர் வாங்கியிருக்கான்... ஒரு நிகழ்ச்சி... சமீபத்தில் தலைமை ஆசிரியரின் நண்பர் வீட்டிற்கு எங்க பள்ளி மாணவர்கள் — பரத்தோட நண்பர்கள் போய் வாதாம் பருப்பு அடிக்க, குறி தவறி கண்ணாடி உடைஞ்சுப்போச்சு... அடிச்சவங்க தப்பிப் போயிட்டாங்க. பரத், 'கல்லெறிந்தது என் நண்பர்கள்தாம்... அவர்களைத் தடுக்காமல் போனது என் தவறு' அப்படின்னு சொல்லி, அவன் புதுக் கண்ணாடி வாங்கக் காசு தருவதாச் சொல்லியிருக்கான். ஆனால், கடைசி வரைக்கும் அந்தத் தப்பைச் செஞ்சது யார்னு சொல்லலே. அவனோட நேர்மை, நண்பர்களைக் காட்டிக் கொடுக்காத பெருந்தன்மை இதெல்லாம் கருத்திலே கொண்டுதான் அவனுக்கு விருது வழங்குகிறோம்" என்றார் ஆசிரியர்.

"சார், கண்ணாடியை உடைச்சது நானும் அருணும்தான்" என்று சொல்லித் தலைகுனிந்தான் ராமு. அவன் கண்கள் கலங்கின.

"கலங்காதே ராமு... நீ செஞ்ச தப்பைப் புரிஞ்சுகிட்டாச் சரி... அதைத் தவிர யாருக்கும் கிடைக்காத ஒரு நல்ல நண்பன் உனக்குக் கிடைச்சிருக்கான்." என்றார் ஆசிரியர்.

"சரி... சரி, ஸார்... இப்படி உட்காருங்கள். இப்போ, பரத்திற்குப் பரிசு கிடைச்சிருக்கு. ராமு திருந்திட்டான். அதை நாமெல்லாம் ஆனந்தமாகக் கொண்டாடலாம்." என்றார் கோபால் மாமா.



Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600032. (Phone: 431543). Editor: K. Rajendran.



லியோ டால்ஸ்டாய்

தோற்றம்: 9-9-1828 மறைவு: 20-11-1910

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka